# பரிசு

டாக்டர் பொன். சௌரிராசன், எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

முதற் பதிப்பு : 1981
தேனக வெளியீடு

விலை ரூ. 5-50

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. கட்டுரைமணிகள்
2. கள்ளிமலர்
3. கதைமலர்கள்
4. அன்னமய்யா ஓர் அறிமுகம்
5. பண்டிதபரமேசுவர சாஸ்திரி உயில்
6. நம்மாழ்வார்
7. தாயகம்
8. *Critical Study of Saint Tayumanavar*

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

## 'சிறுகதை வேந்தர்' திரு. சு. சமுத்திரம் அவர்களின்

# அணிந்துரை

**ப**ழுத்த தமிழறிஞரான டாக்டர் பொன். சவுரிராசன் அவர்களின் சிறுகதைத் தொகுப்பை ஒட்டுமொத்தமாகப் படித்த பிறகு, எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. "நல்ல கதைகளைப் படிக்க, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். நீங்களும் இனிமேலாவது நன்ருக எழுதுங்கள்" என்று சொல்லாமல் சொல்கிருரோ என்று ஒரு எண்ணம். ஆசிரியர் ஆயிற்றே! சமீப காலத்தில் ஒரு நல்ல புத்தகத்தைப் படித்த திருப்தியோடு, இந்த அணிந்துரையை வழங்குகிறேன்.

இந்தத் தொகுப்பில் வரும் முதல் கதையான "பரிசு", நவீன இலக்கியத்திற்கு அளிக்கப்பட்ட, டாக்டர் பொன். சவுரிராசனின் ஒரு பரிசாகும். எல்லாக் கதைகளையும்விட, இதுவே என் மனதில் மேலோங்கி நிற்கிறது. ஒரு நாதஸ்வர வித்வானின் உண்மையான உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொள்ளாமல்—அதே சமயம், நல்லெண்ணத்துடன் ஒருவர் அளிக்கப்போகும் பரிசு, அந்த இசைமாமணியை எப்படிப் புண்படுத்தி இருக்கும் என்பதை, எழுத்தாளனை என்ஞல் உணர முடிகிறது. நல்ல நோக்கத்தில் எழும் பரிசே ஒரு கலைஞனின் மனதை நோகடிக்குமென்ருல், கெட்ட நோக்கத்தோடு அளிக்கப்படும் பரிசு, எந்த அளவிற்கு அவனைப் புண்படுத்தும் என்பதையும், கதாசிரியர் சொல்லாமல் சொல்கிருர். இந்தக் கதையில் வரும் இசைமாமணி நாதஸ்வர

வித்வான் சிங்காரவேலுவை, ஒரு கலைஞனுக்குரிய அளவு கோலாக வைத்துக்கொள்ளலாம். இன்று பரிசுக்காகப் பலர் அலைந்து திரிவதைப் பார்க்கிறோம். கெட்ட நோக்கங்களுக் காகவே பரிசளிக்கும் பலருடைய கால் கைகளைப் பிடிக்கவும் பலர் தயாராக இருக்கிறார்கள். இவர்களெல்லாம் எழுத் தாளர்களா? அல்ல. எழுத்தர்கள். கலைஞன் என்பவன், அதிலும் குறிப்பாகப் படைப்பிலக்கியவாதி, எந்தப் பரிசிற்கும் அலையமாட்டான். அப்படி அலைபவன், எழுத்தாளன் ஆகான். கலைஞனுக்கு, கலை, தான் பெற்ற பிள்ளை; தன்னைப் பெற்ற தாய்! தாயையும், பிள்ளையையும் இழிவுபடுத்தும் வகையில் தன்னைப் புகழ்பவரை எந்தச் சுயமரியாதைத் தனிமனிதனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். இதில், இயல்பி லேயே ஓரளவு உணர்ச்சி வயப்படும் எழுத்தாளன், ஒருபடி அதிகமாகவே இருப்பான். அவனுக்கே, அவனைவிட அவன் வெளிப்படுத்தும் கலைதான் முக்கியமேதவிர அவனல்ல. இந்த உன்னதமான கருத்தை இயல்பாகவும், எளிமையாகவும், இனிமையாகவும், கதாசிரியர் உணர்த்தியிருக்கிறார். இன்றைய வர்த்தக கலாச்சார சமூக அமைப்பில்—பரிசுகள் படைப் பிலக்கியத்தின் அத்தாட்சியாகக் கருதப்படும் காலகட்டத்தில் —எனக்கும் ஏதாவது ஒரு சபலம் ஏற்பட்டால், அப்போதெல் லாம், இசைமாமணி சிங்காரவேலவர் என்னைத் தடுத்தாட் கொள்வார் என்று எண்ணுகிறேன்.

இதேபோல், அவையின் முன்னிலையில் பரிசு வாங்க நினைக்கும் சிறுவன் வள்ளியப்பன், பரிசுக்குரிய தகுதியை எட்டி னாலும், அவனுக்கு எப்படிப் பரிசளிப்பு கிடைக்காமல் போய் விடுகிறது என்பது அழகுறச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள், டியூசன் வைக்கும் மாணவர்களுக்கு, அதிக மார்க்குப் போடுவதை, டாக்டர் சவுரிராசன் அங்கதச் சுவையோடு வர்ணித்திருக்கிறார். என்றாலும், பரிசு பெற்றவர் களைவிட, பரிசு பெறாதவர்களே முக்கியமானவர்கள் என்பதும், எல்லோரையும் முந்தவேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறுவன் மனதில் ஏற்படக்கூடாது என்பதும் என் கருத்து. ஆனாலும்,

இந்தக் கதையின் முடிவில் வரும் ஒரு "இலக்கிய இயலாமை" உணர்வை, என்னால் விலக்க முடியவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இது ஆசிரியர் படைப்பிலக்கிய வெற்றி.

இதுபோல், ஒரு மாட்டின் அன்பைக்காட்டும், "வள்ளியும் லட்சுமியும்" என்ற சிறுகதையும், தாயன்பையும் தாயின் நிலையையும் பரிபூரணமாக உணர்த்துகிறது. "வெறுங்கழுத்து" என்ற சிறுகதையும் குறிப்பிடத்தக்கது. "வெறுங்கழுத்தில்" தாயைவிட, அந்தத் தாய்க்காகத் தவிக்கும் தனயனின் மனநிலை, படிப்பவர்களை அதிகமாய் ஈர்க்கிறது. மையத்தை எங்கோ வைத்து, ஈர்ப்பை இன்னொரு இடத்தில் சுட்டிக் காட்டுவது, ஆசிரியரின் சிறப்பான உத்தித்திறனை உறுதிப் படுத்துகிறது. "சித்தூர் சாமியார்" கதை பெரும்பாலான மகான்களின் வாழ்க்கையில் நடந்திருக்கிறது. பழுத்த ஞானமும் பாசத்துள் அடங்கும் என்ற நடைமுறை வாழ்க்கை அனுபவம், இலக்கியச் சுவையோடும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. "பாசமா பைத்தியமா" என்ற சிறுகதையில், மகன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்று நம்பி, அங்கு போய்த் துடியாய்த் துடித்து, பிறகு விபத்துக்குள்ளானவன் மகனல்ல மற்றவன் என்பதை அறியும்போது பரவசப்படும் ஒரு தந்தையின் உளப்போக்கு, மனோதத்துவ ரீதியில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், யார் பெற்ற பிள்ளையோ ஒன்று அடிபட்டுக் கிடக்கிறதே என்ற எண்ணமும் தந்தைக்கு வந்ததாகச் சித்தரித்திருக்கலாம். இது மனோதத்துவப்படி சரியில்லையென்று வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும், படைப்பு, மனோதத்துவத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்பதால் இதைக் குறிப்பிடுகிறேன். கண்ணிறைந்த காதலனைக் கைப்பிடித்தும் கொடுத்து வைக்காமல்போன ஒரு பெண்ணின் அவலநிலையைச் சித்தரிக்கும், "யாருக்காக வாழுகிறேன்" மனஓட்டங்களால் ஏற்படும் கனவோட்டத்தில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளும் மாணவனைச் சித்தரிக்கும், "விழிப்பு" காலத்திற்காகத் தன்னை மாற்றாமல் மாற்றிக்கொள்ளும் நிலையில் இருந்த ஒரு தாயின் அவல

நிலையைக் காட்டும், "அவல நாடகம்"—ஆகியவை, காலத்தால் நிலைத்து நிற்கக்கூடிய சிறுகதைகள். "தாய்க்குமரி" என்ற சிறுகதையை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம். படைப்பாளன், தன் படைப்புகளை "எக்சப்சனலாக" வைக்கவேண்டுமே தவிர, ஏதோ அசிங்கமாக நடக்கக்கூடிய எக்சப்சனல் பாத்திரங்களை இலக்கியத்தில் அளவுக்கு மீறி ஏற்றக்கூடாது என்பது என் கருத்து. ஒருவேளை "வெரைய்ட்டி" வேண்டும் என்பதற்காக ஆசிரியர் இதைச் சேர்த்திருக்கலாம். இதில் "மையக்கருத்து" ஒரு மாதிரியானது என்றாலும், இதையே மற்றவர்கள் எழுதியிருந்தால் கொச்சைப் படுத்தியிருப்பார்கள் என்பதையும், ஆசிரியர் இதை இலைமறைவு காய்மறைவாக, லாவகமாகக் கையாண்டிருக்கிறார் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.

பொதுவாக, தமிழறிஞர்கள் சிறுகதையோ, நாவலோ எழுதப்புகுந்தால், ஆண் பெண்வேடம் போட்டதுபோல் இருக்கும். தமிழறியாதவர்கள் கதை எழுதத் துவங்கினால் (இன்று பத்திரிகை உலகம் அப்படித்தானிருக்கிறது) பெண், ஆண்வேடம் போட்டதுபோல் இருக்கும். இந்த இரண்டும் இல்லாமல், மொழிவளத்தோடும், இலக்கிய நயத்துடனும் இயல்பாக இந்தத் தொகுப்பு அமைந்துள்ளது. டாக்டர் பொன் சவுரிராசன் அவர்கள் மேன்மேலும் இத்தகைய படைப்புக்களை, "நல்ல கதையறியா தமிழ்கூறும்" "நல்" உலகத்திற்கு அளித்து, இன்றைய மூடத்தனமான வாசகர் தரப்பைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதே என் வேண்டுகோள். இவரால் இயலும்!

ஒரு சிறந்த இலக்கியப் படைப்பிற்கு முன்னுரை கொடுக்க வாய்ப்பளித்த டாக்டர் பொன். சவுரிராசன் அவர்களுக்கு, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை - 90 — சு. சமுத்திரம்

# நன்றியுரை

என் பிள்ளைகளுள் நல்லவர் உண்டு; வல்லவர் உண்டு; பொல்லாதவர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் எல்லோரும் என் பிள்ளைகளே! பாச வயப்படும்போது எல்லோரையும் ஒன்றாகக் கூட்டிவைத்துக் காண ஆசைப்படுகிறேன். சமுதாய நோக்கில் அது தவறாக இருக்கலாம். அதற்காக வருந்துகிறேன்.

என் பிள்ளைகளைப் போன்றே என் கதைகளும் உள்ளன. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றிய எல்லாவற்றை யும் தொகுத்து காணும் முயற்சியே இந்த நூலாக உருவாகி யுள்ளது.

கருணை நிறைந்த கலை உள்ளத்தோடும், அதே நேரத்தில் கடமை தவறா சமுதாய நோக்கோடும், திருவாளர் சு. சமுத்திரம் அவர்கள், சிறந்ததோர் அணிந்துரை வழங்கி யுள்ளனர். 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற குறளோவிய மாகத் திகழும் 'சிறுகதை வேந்தர்' அவர்கட்கு, முதற்கண் என் நன்றி உரியது.

அவ்வப்போது, உளங் குளிர்ந்த போதும் கொதித்த போதும் உருவாகிய இந்தக் கதைகள், பொய்யாய்க் கனவாய்ச் சிதைந்து மறைந்து போகாமல், இதற்கு வாழ்வுதர முன்வந்த 'தேனகப்' பதிப்பாளர்க்கும், நூல் வடிவு வழங்கிய பாரி திரு க. அ. செல்லப்பனார் அவர்கட்கும், அச்சுப்பிழை திருத் தம் செய்து அளித்த நண்பர் திரு புலியூர்க் கேசிகனார்க்கும், மாருதி அச்சகத்தார்க்கும் என்றும் நன்றியுடையேன்.

திருப்பதி

பொன். சௌரிராசன்

# பொருளடக்கம்


பரிசு

பாவம்! வள்ளியப்பன்

வள்ளியும் லட்சுமியும்

வெறுங்கழுத்து

சித்தூர் சாமியார்

பாசமா? பயித்தியமா?

யாருக்காக வாழ்கிறேன்

விழிப்பு

அவல நாடகம்

தூய்க்குமரி

தவிப்பு

# பரிசு

சிக்கல் சிங்காரவேலவர் கோயில் பக்கம் யாரேனும் சாயுங்காலம் போக நேர்ந்தால், தவருமல் அவர்களை உள்ளே இழுத்துச் சிங்காரவேலவர் சன்னிதியில் கொண்டு வந்து நிறுத்திவிடும், 'இசைமாமணி' நாதசுர வித்துவான் சிங்கார வேலுவின் மோகன ராகம். ஒரிரு விஞடிகள் வாயிலில் நின்று அந்த மோகனத்தில் தம்மை இழந்து மோனமானேர் எப்படியோ இடையிலுள்ள பனிரெண்டு படிகளையும் ஏறிக்கடந்து, சன்னிதியின் முன்னர் வந்து நிற்பர். கண்களை மூடியவாறு எவர் வந்தார், எவர் போனர் என்ற எண்ணம் ஏதும் இன்றி, எங்கோ கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத எவரையோ நினைந்து அவர் வாசிப்பதுபோலத் தோன்றும். சிங்கார வேலுவின் கானத்தில் கரைந்து நின்றவருள் யாரேனும் ஒருவர் கொஞ்சம் கண் திறந்தால், அலைந்து திரிந்து கொண் டிருக்கும் இதயப்பாம்பை ஒருமுகப்படுத்தி ஆண்டவன் சன்னிதியில் நிறுத்தி அகங்குளிர ஆடவைக்கும் அந்தக் கரிய நீண்ட நாதசுரம் தோன்றும். நீல வண்டும், தம்பலப் பூச்சியும் ஒன்று மாற்றி ஒன்று அசைவதுபோல வலக்கை

ஆட்காட்டி விரலிலுள்ள நீலக்கல் மோதிரமும் இடக்கை மோதிரவிரலில் மின்னும் மாணிக்கக் கல்லும் மேலெழுந்து எழுந்து இயங்கும். அப்படியே நாதசுரம் சிறிது மேலெழும் போது அதிலேயே ஒன்றியிருந்த நம் கண்கள் சிங்கார வேலுவின் நெற்றியில் திகழும் வட்ட வடிவமான சந்தனப் பொட்டிலும், அதன் மையத்தில் உள்ள குங்குமத்திலும் சிறிது லயிக்கத்தான் செய்யும். மூக்கின்மேல் நெற்றியின் நடுவில் அளவெடுத்து வரைந்தது போல அமைந்து விளங்கும் அந்தச் சந்தனப் பொட்டுக்கு மேலே இணை இணையாக மூன்று திருநீற்றுக் கீரல்கள், அகன்ற நெற்றிக்கு அழகு செய்துகொண்டிருக்கும். அதற்கு அருகருகே கண்டாரைச் சுண்டி இழுக்கும் அவர் கண்ணொளியோடு போட்டியிடும் வைரக்கல் கடுக்கன்கள். மேலே பாகவதர் கிராப்பு. மெல்ல மூச்சுப்பிடித்துக் கீழே குனியும்போது படம் எடுத்தாடும் நாகப்பாம்புக் குட்டி போன்று தங்கச் சங்கிலியும் அதன்கீழ் ஒரு டாலரும் அசைந்தாடும். சாலையில் முந்திக்கொண்டு ஓடும் பிள்ளையின் இடையைப் பிடித்து நிறுத்தும் தாயின் இரு கைபோல முன்னுக்கு வந்து முட்டிக் கொண்டிருக்கும் தொப்பை வயிற்றைத் தடுத்து மறைக்கும், சுற்றிக் கட்டியுள்ள செம்பட்டு அங்க வஸ்திரம். அதன் கீழே அகலக்கரை போட்ட கதர் வேட்டி, நீண்ட கால் விரல்களைத் தொட்டுக் கொண்டிருக்கும். அந்த நாத தரிசனத்தில் ஈடுபட்டு மோனவேலனைக் கண்டு ஒருமுறை களித்த நெஞ்சம் பெரும்பேறு பெற்றுவிட்டது எனலாம்.

என் பாட்டியோடு பள்ளிக்கூடம் விட்டதும் கோயிலுக்குப் போகும் நான் நாள்தோறும் இந்தக் காட்சியைக் கண்டு நின்றிருந்திருக்கிறேன். நான் வளர வளரச் சிங்கார வேலுவின் புகழும் வளர்ந்து வந்தது. அவருடைய தொடர்பால் ஓரிரு இராகங்களை இனங் கண்டு

கொண்டு பாடல்கள் சில இயற்றினேன். அவற்றை அவர் மனைவி கனகவல்லி பாடிக்காட்ட அவரும் சிற்சிலபோது என்னைப் பாராட்டுவார். பின்பு மேல்படிப்புக்காக நான் சென்னைக்கு வந்துவிட்டேன். அங்கிருந்தபடியே எம். ஏ., படிப்பு முற்றுப் பெற்றதும் திருவேங்கடவன் தேவஸ்தானத்தில் ஒரு வேலை கிடைத்தது. பாட்டி மட்டும் சிங்கார வேலவனையும் சிக்கலையும் விட்டுவர மனமில்லாது அங்கேயே தங்கிவிட்டார். படிக்கும்போது அவ்வப்போது போய்த் தங்குவேன். திருமணமாகியதும் திருப்பதியிலேயே தங்கிவிட்டேன். இடைஇடையே சென்னையிலிருந்த அந்த நாட்களில் எப்போதாவது போனால், தவறாது சிங்காரவேலுவைப் பார்த்து மோகன ராகம் வாசிக்கச் சொல்லிக் கேட்டுவிட்டுத்தான் வருவேன். பிறகு பல ஆண்டுகள் சிக்கலுக்குப் போகவே இல்லை. திருப்பதி வந்த பிறகு எப்போதாவது யாத்ரிகர்களுடன் பாட்டி திருப்பதிக்கு வந்து சிலநாள் தங்கிப் போய்விடுவார்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சிக்கலுக்குப் போக நேர்ந்தது. என் பள்ளித் தோழன் வைத்திலிங்கத்தின் மகன் திருமணத்திற்காகப் போக நேர்ந்தது. வாழ்த்துத் தந்தி ஒன்று அனுப்பிவிட்டுக்கூட 'சும்மா' இருந்து விட்டிருக்கலாம். ஆனால், ஏனோ நீண்ட நாட்களுக்குப் பிறகு, நான் பிறந்து வளர்ந்த ஊரை, நான் கும்மாளமிட்டுக் குளித்த 'சில்'லென்ற பாலக் குளத்தை, பச்சைக் கிளிகள் கீச்சிட்டு விளையாடும் ஐயனார் கோவிலுக்கு அருகில் உள்ள இலுப்பைத் தோப்பை, தென்னை மரங்கள் சூழ்ந்து கோடையிலும் 'குளுகுளு' என்றிருக்கும் அம்மாகுளத்துப் பக்கத்திலுள்ள திடலை, எல்லாக் காலத்தும் 'பச்சைப் பசேல்' என்று பயிர் கொழிக்கும் பழனிவேல் முதலியார் வயல்களை, இவற்றிற் கெல்லாம் நடுநாயகமாக மண்ணக மனிதனை விண்ணுலக

தெய்வ நிலைக்கு ஈர்க்கும் சிங்கார வேலவன் கோயிலைக் காண வேண்டும் என்ற என் ஆர்வமும் என்னைச் சிக்கலுக்குப் புறப்படும்படித் தூண்டின. மேலும், இன்றோ நாளையோ என்று மூச்சு ஊசலாடிக் கொண்டிருந்தாலும், சிங்கார வேலவன் திருவடியில் தன் உயிரையும், சிக்கல் மண்ணில் தன் உடம்பையும் சேர்ப்பதற்காக எங்கும் வராமல் எங்கள் பழைய வீட்டிலேயே தங்கி வாழும் என் பாட்டியைக் காணவேண்டும் என்ற ஆசையும் இன்னொரு காரணம் ஆகும். என் முதல்மகன் பாலசுப்பிரமணியன் பிறந்தபோது என் பாட்டி சிங்கார வேலவனுக்கு வேண்டிக் கொண்ட நேர்த்திக் கடனைச் செலுத்தும் நினைவும் சேர்ந்து கொள்ளக் குடும்பத்தோடு புறப்பட்டு விட்டேன்.

முகூர்த்தம் காலை 6 மணியிலிருந்து 7½ என்று இருந்த தால் திருப்பதி-திருச்சி விரைவு வண்டியில் புறப்பட்டோம். மாயூரத்தில் முதல் வண்டி கிடைக்காததால், காலை 4½ மணிக்கு அடைவதற்குப் பதில் 6 மணிக்கே சிக்கலை அடைந்தோம். முகூர்த்தம் முடிவதற்குள் நண்பன் வீட்டிற்குப் போகவேண்டும் என்ற விரைவில், வழியிலுள்ள என் பாட்டிவீட்டில் சாமான் சட்டுகளையும் மனைவி மக்களையும் விட்டுவிட்டுக் கலைந்த தலையையும், அழுக்கேறிய முகத்தையும் கொஞ்சம் அழகு செய்து கொண்டு, மனைவியை 'வா' என்று சொல்லிவிட்டு நான் மட்டும் போனேன்.

ஆ! அதே மோகனராகம் பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் என்னை வரவேற்றது. திருமணப் பந்தலை நெருங் காமல் சற்றுத் தூரத்திலேயே நின்று அனுபவித்தேன். குடகுக் காவிரிபோல் அந்த நாட்களில் குதித்துக் கும்மாள மிட்ட அந்தச் சிங்கார வேலுவின் மோகனாங்கியா இவள்! அடக்கமாக, துள்ளல் துடிப்பு இல்லாமல், விடுப்பு பிடிப்பு

இல்லாமல் மோன மயமாகத் திகழும் வங்கக் கடலின் திருவடியில் சென்று தன்னை இழந்து கலந்து விடும் தைமாதக் காவிரி ஆறுபோலத் தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பாமல் கரைத்துக் கொள்ள விழையும் பிரபக்தனைப் போல அசைந்தசைந்து அலைஅலையாகக் காலைக் காற்றில் மிதந்து வந்த அந்த மோகனங் கேட்டு என் கண்கள் ஏனோ அன்று கலங்கின. மோகனம் நின்றது. ஆனந்த பைரவி துவங்கியது. நான் முன்னேறிச் சென்றேன். பந்தலில் நின்றுகொண்டிருந்த வைத்தி என்னை அடையாளங் கண்டு கொண்டு ஆர்வத்தோடு கையைப் பிடித்தபடி திருமண மேடைக்கு அழைத்துச் சென்றான். போகிற வழியில் அமர்ந்து வாசித்துக் கொண்டிருந்த சிங்கார வேலுவைப் பார்த்து இருகைகளும் கூப்பினேன். வாசிப்பை நிறுத்தாமல் சிறிது தலையைத் தாழ்த்தி வணக்கம் செய்தார். நண்பனோடு உள்ளே சென்று மணமக்கள்முன் அமர்ந்தபடியே சிங்கார வேலுவைப் பார்த்தேன். கடுக் கன்களைக் காணோம். கண்ணொளியும் மழுங்கிப் போயிருந்தது. தொந்தி கரைந்து, ஆளும் மெலிந்து போயிருந்தார். ஊதும்போது நெற்றி நரம்புகள் புடைத்து எழுந்தன. விரல்களில் சங்கு மோதிரம்கூட இல்லை. அந்தப் பழைய பட்டு மட்டும் மழுங்கிப்போய், கிழிந்துபோய், பழைய கனவுகளை எழுப்பியவாறு இடையில் சுற்றிக் கொண்டிருந்தது. 'அய்யோ பாவம்' என்றிருந்தது.

மங்களம் வாசித்தவுடன் நேரே என்னைத்தேடிச் சிங்காரவேலு வந்தார். கைகாட்டி மெல்லத் தோட்டத்துப் பக்கம் கூப்பிட்டார். தொடர்ந்து பின்னால் போனேன். தனியான ஓரிடத்தில் நின்று, "தம்பி ஒங்களைப் பத்தி அப்பப்போ கேள்விப்படுவேன். திருப்பதியில் இப்போ வாசமாமே. என்னவோ ஒருமுறை திருப்பதி அன்னமாச் சார்ய உத்சவத்துக்கு வரணும்னு ஆசை. வந்து

வாசிக்கணும்னு ஆசை. ஒங்க நெனப்பு வந்தது. கனகவல்லி கூட ஏழுமலையானைத் தரிசிக்கணும்னு ஆசைப் பட்டா. அவ ஆசை நெறவேறலே. சிங்காரவேலவன் திருவடிக்குப் போன வருசம் போய்ச் சேர்ந்துட்டா." அவர் குரல் தழுதழுத்தது. கண்கள் கலங்கின. மௌனமாக அவரைப் பார்த்துக்கொண்டே நின்றேன். அவர் தொடர்ந்தார். "...அப்புறம் திருப்பதி ஆசையையும் விட்டுட்டேன்...ஊர்லே இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு இருப்பீங்கள்ளே? ஊருக்குப் போறதுக்கு முன்னே ஒரு முறை வாங்க. வீடு தெரியுமில்லே..." என்று தொண்டை கரகரக்கத் தொடர்ந்து பேசினார்.

"ஓ! ஐயனார் கோயில் தோப்புக்குப் போற வழிதானே! அதே வீடுதானே. நல்லாத் தெரியுமே. வெள்ளிக்கிழமை இரவு புறப்படறேன். அதற்குள் வந்து பார்க்கிறேன்" என்றேன். சிறிது தயங்கி நின்றார். "என்னங்க" என்றேன்.

"நீங்க ரொம்பப் படிச்சவங்க. இந்த நாதசுரத்துலேயும் கொஞ்சம் ஈடுபாடு இருக்கு. இப்பொப் படிச்சவங்கெல்லாம் எங்கங்க இதை மதிக்கிறாங்க... அப்பொ எங்க அப்பா உங்க தாத்தாகிட்டே எவ்வளவோ முறை பரிசு வாங்கியிருக்காரு. ரங்கூன்லேயிருந்து ஒங்க தாத்தா வந்ததும் முதன்முதல்லே ஏதாவது பரிசு எங்கஅப்பாவுக்குத் தான் கொடுப்பார். அப்படி அந்தக் காலத்திலே இந்தக் கலையை மதிச்சாங்க. என் மோகனராகத்துக்கு ஏங்கிக் கிடந்தாங்க. இரண்டு மூன்று முறை ஒரே ராகத்தை வாசிக்கச் சொல்லிக் கேட்பாங்க. இப்பொ என்னடான்னா 'சினிமாப்பாட்டு வாசிக்கத் தெரியுமா'ன்னு கேட்கிறானுங்க. தப்பித் தவறி ஒண்ணு ரெண்டு பெரிய எடத்துக்குப்போனா எதிரே இருந்து நாதசுரத்தைக் கேட்டுப் பாராட்டாமே ஏதேதோ கதை பேசிக் காலத்தைப் போக்கறாங்க,

இப்பெல்லாம் நான் எங்கேயும் வாசிக்கப் போறதில்லே. வைத்தி வந்து ரொம்பக் கேட்டுகிச்சி. நம்ப புள்ளெ ஆச்சேன்னு வந்தேன்" என்று அவர் சொல்லிக் கொண் டிருக்கும்போதே, என்னைத் தேடிக்கொண்டு சிற்றுண்டி உண்ண நண்பன் வைத்தி வந்து கொண்டிருந்தான்.

"அப்பொ மறந்திடாதீங்க தம்பி! தப்பாமே வந்துட்டுப் போங்க. ஒங்க கையாலே பரிசு வாங்கணும். அடுத்த முறை வரும்போது இருப்பேனோ மாட்டேனோ" என்று கலங்கியவாறு கூறிவிட்டுப் பிரிந்தார். நான் நண்பனோடு உள்ளே சென்றேன்.

சிங்கார வேலர் நேர்த்திக் கடன், பக்கத்து ஊர் உறவினர்கள் வீட்டிற்குப் போய்வரல், நாகப்பட்டினம், நாகூர், வேளாங்கண்ணி காணல், இப்படிப் பலவகையில் கையில் இருந்த பணம் கரைந்து போய்விட்டது. வெள்ளிக்கிழமை காலை கணக்குப் பார்த்ததில் பயணத் துக்குப் போக, பத்துப் பதினைந்து ரூபாயே மிஞ்சும் போலிருந்தது. அதில் சிங்காரவேலுக்கு என்று பத்துரூபாய் நோட்டை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு மாலையில் அவர் வீட்டிற்குப் போனேன்.

எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது போல் தோன்றிற்று. திண்ணையிலே அமர்ந்திருந்த அவர் மெல்ல எழுந்து, "வாங்க தம்பி! வாங்க" என்று கைகளைக் கூப்பினார். கூப்பிய கைகளைப் பிடித்துத் தடுத்துவிட்டு, "இது என்னங்க- நீங்க பார்க்க வளர்ந்தவன் நான்" என்று வணக்கம் செய்தேன்.

"மோகனவேலு! தம்பி மோகனவேலு!" என்று தன் மகனை அழைத்தார். உள்ளே ஏதோ செய்து கொண் டிருந்த அவன் வெளியே வந்து வணக்கம் செய்தான்.

"இவனைத்தான் வாரிசா விட்டுட்டுப் போறேன். அவனுக்கென நான் மிச்சம் வெச்சிருக்கும் சொத்து இதுதான்" என்று உள்ளே பழைய பட்டு உறையில் இருந்த நாதசுரத்தைச் சுட்டிக் காட்டிக் கலங்கிய கண்களை மேலே கிடந்த துண்டின் முனையால் துடைத்துக் கொண்டார். "அவளும் போய்விட்டாள். நானும் இப்பவோ எப்பவோன்னு இருக்கேன். தனியா இந்தக் காலத்தில் எப்படித்தான் பொழைக்கப் போறானோ" என்று சொல்லி மீண்டும் கலங்கினார்.

"அய்யா! ஓங்க பையன் வாசிப்பை நேத்துக் கோயில்லே கேட்டேன். ஒண்ணுக்கும் கவலைப் படாதீங்க. ஓங்க சாயல், சுழிப்பு, சங்கதி எல்லாம் அப்படியே அச்சா இருக்கு. சிங்காரவேலன் பார்த்துக்குவான்" என்று நிறுத்தினேன்.

வாடிய அந்த முகம் மலர்ந்தது. அவர் கண்களில் ஒரு நம்பிக்கை ஒளி மெல்ல மின்னி மறைந்தது.

"ஆமாம். ஒடம்பு முடியலே. ஏதாவது திருவிழா நாள்ளெதான் உயிரைப் பிடிச்சிகிட்டு மெல்ல ஓரிரு ராகம் வாசிக்கிறேன். இப்பொ எல்லாம் இவன் தான் கோயில்லே தினம் வாசிக்கிறான். சிங்கார வேலனுக்கு மட்டுந்தான் இவனை வாசிக்கணும்னு சன்னிதிமுன்னே இவன்கிட்டே சத்தியம் வாங்கியிருக்கேன். மத்தவங்களுக்கு வாசிக்க வாசிக்க மனமும் கெடுது - மானமும் கெடுது" என்று என்னை என்னவோபோல் பார்த்தார்.

"இந்தாங்க" என்று வெளியில் நின்றபடியே சட்டைப் பையில் காகிதங்களோடு கலந்து இருந்த அந்தப் பத்து ரூபாய் நோட்டைத் தடவிப் பார்த்து எடுத்து அவர் கையில் கொடுக்கப் போனேன். நல்ல வெண்பொங்கலில்

செத்துக் கிடக்கும் கரப்பான் பூச்சியைக் கண்டு குமட்டுபவன்போல் என்னை ஒருபார்வை பார்த்தார். அந்த அலட்சியப் பார்வைமுன் நான் மிகமிகச் சின்னவனுகக் குன்றிப் போனேன்.

''மன்னிக்கணும் ! எதிர்பாராம பணம் எல்லாம் செலவழிந்திடுச்சி'' என்று சொன்னபடி அதை மீண்டும் நீட்டினேன்.

''நான் ஒங்களைப் பிச்சை கேட்கலெ தம்பி! பரிசு கேட்டேன். என் வித்தை பத்து ரூபாய்க்குத் தாழ்ந்து போயிட்டுதா? அவ்வளவு தாழ்ந்து போயிட்டுதா?'' என்று ஆங்காரமாகக் கையை வீசிக்கொண்டு, 'சாமி' வந்தவர் போல 'ஓ' வென அழுதார். நான் பயந்துபோய், செய்வ தறியாது மலைத்து நின்றுவிட்டேன்.

''அல்வாவும் ஆப்பிளும் சாப்பிட்ட நாட்களும் உண்டு. ஆண்டவன் சிங்கார வேலன் பிரசாதத்தை ஒரே ஒருவேளை மட்டும் சாப்பிட்டுட்டு நாதசுரத்தை அணைத்துக்கொண்டு காய்ந்த வயிற்றோடு பல நாட்கள் உறங்கியதும் உண்டு. ஆனு...எப்பவும் இப்படி நான் பிச்சை வாங்கினது மட்டும் இல்லெ தம்பி... எனக்கு ஒங்கமேலே கோபம் இல்லெ தம்பி. எத்தனையோ ராகங்களை அழகாக வாசிச்ச இந்தக் கையை இப்படி அவமானப்படுத்த நினைச்சுட்டீங்களேன்னுதான் கவலைப்படறேன். ஒரு மாலை—ஒரு பூமாலை வாங்கிப் போட்டு, ரெண்டு பூவம்பழம், நாலு வெத்திலை பாக்கு வச்சி, ''சிங்கார வேலு! பேஷ்! பலே பேஷ்! இந்த வயசிலேயும் எவ்வளவு அற்புதமா வாசிச்சே!'' என்று ஒரு வார்த்தை—ஒரே வார்த்தை சொல்லியிருந்தாக் கூடப் போதுமே; மகிழ்ந்து போயிருப்பேன் தம்பி, மகிழ்ந்து போயிருப்பேன்...இனிமே இப்படி மத்த படிச்சவங்க மாதிரி வித்வான்களை அவமானப் படுத்தாதீங்க'' என்று

கூறியவாறு, என் பதிலுக்குக் காத்திராமல் 'டக்' கென்று உள்ளே போய்விட்டார். வாயிற்படியை விட்டு, தலை குனிந்தபடியே வெளியேறினேன்.

ஏழெட்டு மாதங்கள் கழிந்திருக்கும். ஊரிலிருந்து தந்தி வந்தது. பாட்டி இறந்து விட்டதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியும் நண்பன் வைத்தி தந்தி கொடுத்திருந்தான். நானும் என் தாயும் புறப்பட்டோம். வங்கியிலிருந்த ரூபாய் ஐந்நூற்றையும் எடுத்துக் கொண்டேன். பாட்டிக்குச் செய்யவேண்டிய இறுதிக் கடமைகளையெல்லாம் முடித்தபின், ஒரு நாள் காலையில், முதல்நாள் இரவு வாங்கிவைத்திருந்த வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவற்றை ஒரு பையில் எடுத்துப் போட்டுக்கொண்டு, நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, சிங்காரவேலு வீட்டிற்குப் போனேன். பூபாள ராகம் நாதசுரத்தில் நடனமாடிக் கொண்டிருந்தது. பாட்டு முடியும்வரை அமைதியாக நின்றேன். பின்பு ஒருக்களித்த கதவு வழியே எட்டிப் பார்த்தேன். என்னைக் கண்டவுடன் நாதசுரத்தைக் கையில் ஏந்தியபடியே மோகனவேலு எழுந்து தலையைத் தாழ்த்தி வணக்கம் செய்தான். "அப்பா எங்கேப்பா?" என்றேன்.

"ரெண்டு மூணு மாதம் ஆயிடுச்சிங்க. 'வேலா! வேலா'ன்னு சொல்லி மூச்சு விட்டாருங்க" என்று கண் கலங்கினான். எனக்குப் 'பகீர்' என்றது. 'என் காசைப் பெருமலேயே போய்விட்டாரே' என்று வருந்தினேன். "கலங்காதே, வேலு கலங்காதே! ஆண்டவன் சிங்கார வேலன் அருளும், அப்பா சிங்காரவேலுவின் வித்தையும் உன்னைக் காப்பாற்றும்" என்று சொல்லி, அருகிருந்த தட்டு ஒன்றை எடுத்து, அதில் வெற்றிலை பாக்கு, பழங்களை வைத்து, அவற்றிற்கு நடுவில் நூறு ரூபாய் நோட்டை

வைத்து, அவன் முன் நீட்டினேன். ஏதோ விஷத்தைக் கண்டவன் போல அதைப் பார்த்து நடுங்கினான்.

"என்னப்பா மோகனவேலு! வாங்கிக்கோ. ஒனக்கு இது என் பரிசு. மறுக்காதே" என்று நெருங்கி நீட்டினேன்.

அவன் கொஞ்சம் பின்னுக்கு நகர்ந்து கொண்டு, "அய்யா நூறு இருநூறுன்னு பரிசு வாங்கும் தகுதி எனக்கு இல்லிங்க. எங்கப்பா பெரிய வித்துவான். அவருக்குத் தகுதி உண்டு. ஆயிரம் ஆயிரம் பரிசுபெறத் தகுதி உண்டு. தகுதியில்லாமே எங் கஷ்டத்தைப் பார்த்துப் பச்சாதாபப்பட்டு, அல்லது எங்கப்பா செத்துட்டாங் களேன்னு இரக்கப்பட்டுக் கொடுக்கிற இந்தப் பணம் எனக்கு வேண்டாங்க. எனக்கு மகாப்பிரபு சிங்கார வேலவன் தரும் பிரசாதமே போதுங்க" என்று, மரியாதைக் காகத் தாம்பூலத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, பணத்தைத் தட்டிலேயே வைத்துவிட்டு உள்ளே சென்ற அவன், கையிலிருந்த நாதசுரத்தில் மீண்டும் லயித்து விட்டான்.

அந்தக் கலை உள்ளங்களை, தெய்வீக கானத்தை அணுகும் தகுதி இன்னும் எனக்கு ஏற்படவில்லையே என்னும் ஏக்கத்தோடு, தலை குனிந்தவனாய் மெல்ல வெளி யேறினேன். கம்பீரமாகக் காற்றில் மிதந்து வந்த காம்போதி ராகம் வெகு நேரம் என் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது.

# பாவம்! வள்ளியப்பன்

எப்போதும் மாலை 4-15க்கு எல்லாம் வீட்டிற்கு வந்து விடுவேன். இன்று மணி ஆறாகிவிட்டது. ஆறாகியும் கூட வீட்டிற்குள் நுழையத் தயக்கமாக இருக்கிறது. கேட்டால் என்ன சொல்வேன்? எப்படிச் சொல்வேன்? சோர்ந்து போய் விட்டேன். மாலையில் சிற்றுண்டி உண்ணவும் நேரம் இல்லை. கல்லூரியில் ஒரே கலாட்டா. கல்லூரி முதல்வர் துறைத்தலைவர்களுடன் கூடி முடிவெடுக்க நெடுநேரம் ஆகிவிட்டது.

வீட்டுக் கதவு சாத்தியிருக்கிறது. மனைவி எங்கோ பக்கத்து வீட்டுக்குப் போயிருப்பாள். தெற்குப் பார்த்த அந்த வீட்டின் வலப்பக்கம் உள்ள தெருஅறை கொஞ்சம் திறந்திருக்கிறது. மெல்ல எட்டிப் பார்க்கிறேன். மேற்குத் திசையில் அமைந்துள்ள பலகணி வழியே மலைச்சாரலில் மறைந்து கொண்டிருக்கும் கதிரவனைப் பார்த்துக் கொண் டிருக்கிறான் என் கடைசி மகன் வள்ளியப்பன். எல்லாப் பறவைகளும் கூட்டம் கூட்டமாகப் பறந்து போகின்றன. காக்கைகள் கொக்குகள் கருமையாக வெண்மையாகப் பறந்து செல்வது செவ்வானப் பின்னணியில் அழகாக

இருக்கிறது. இப்போது கதிரவனும் மறைந்துவிட்டான். வானமும் இருண்டு கொண்டு வருகிறது. பறவைகளும் கண்ணுக்குத் தெரியவில்லை. இன்னும் அவன் அங்கே என்ன பார்க்கிறுன்? பின்ஞல் கதவருகில் இவ்வளவு நேர மாக நிற்கும் என்னையும் மறந்து அப்படி அந்த வெறு வானத்தில் என்னத்தைத்தான் பார்க்கிறுன்? சரி ஏதோ பார்க்கட்டும். அவன் தனிமையைக் கெடுக்க மனம் வரவில்லை. மெல்லப் பின்னுக்கு வந்து திரும்புகிறேன். அவன் மடியில், பெரிய பையன் கண்ணப்பன் பரிசுகள் பெற்றபோது எடுத்த போட்டோ ஆல்பம் சட்டெனக் கண்ணில் படுகிறது. ஏஞே நெஞ்சு வலிக்கிறது. மெல்ல அடிமேல் அடிவைத்து ஓசைப்படாமல் கதவைத் திறந்து கொண்டு வந்து, அலுவலக உடையைக் களைந்து உடை மாற்றிக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்கிறேன். பழைய நினைவுகள் ஏதேதோ நெஞ்சில் அலைமோது கின்றன.

தேம்பித் தேம்பி அழுதுகொண்டு வள்ளியப்பன் ஒரு நாள் என் அலுவலக அறைக்கு வருகின்முன். 'ஏண்டா கண்ணு' என்று கேட்கிறேன். இயல்பாகவே சிவந்து போய் உள்ள கண்களை இன்னும் கைகளால் கசக்கிக் கொண்டு, ஒன்றும் சொல்லாமல் அழுகிறுன். 'நான் முன்னேதாம்பா ஓடியாந்தேன். அந்தக் கண்ணன் பய என் சட்டையைப் பிடித்து இழுத்துத் தள்ளிட்டாம்பா. எனக்கு பிரைஸ் இல்லேண்ணுட்டாங்க...' என்று தேம்பித் தேம்பி அழுகிறுன். 'போயிட்டுப் போகட்டுண்டா' என்று ஆறுதல் கூறிவிட்டுக் கல்லூரி ஸ்டோருக்கு அழைத்துப் போய், அவன் பலநாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்த அழகான, தோளில் மாட்டிக் கொள்ளும் பையொன்று வாங்கித் தருகிறேன். அவன் முகம் மலரவில்லை.

'ஏண்டா கண்ணு இன்னும் ஏதாவது வேணுமா'ன்னு கேட்கிறேன்!

"இல்லேப்பா; அண்ணன்மாதிரி நானும் பரிசு வாங்கணும், மேடை மேலெ லேட்டுப் போட்டிருப்பாங்களே அப்பொ நானும் பரிசு வாங்கணும். போட்டோ எல்லாம் புடிப்பாங்களே அது மாதிரி நானும் பரிசு வாங்கணும். அண்ணன் இல்லெ...போட்டோவ்லெ—கையிலே புத்தகம் வாங்கிக்கிட்டு—யாரோ ஒரு அம்மா கொடுக்கிறுங்களே, அது மாதிரி நானும் போட்டோ எடுத்துக்கணும்."

எனக்கும் கவலையாக இருக்கிறது. நான்கைந்து புத்தகம் வாங்கிக் கொடுத்துவிடுவேன். பாலாஜி நிழற்பட நிலையத்துக்கு அழைத்துப்போய் அவன் கையில் புத்தகம் கொடுத்து அழகாகப் புகைப் படமும் எடுத்துக் கொள்ளலாம். ஆனுல், அவனுக்காக எப்படி ஒரு விழா ஏற்பாடு செய்து பரிசு வழங்குவது? அவன் அண்ணன் அதற்கு இரண்டாண்டுக்குமுன் அதே நர்சரியில் ஓட்டப் பந்தயத்தில் முதல்வனுக ஓடிப் பரிசுபெற்றுன். அப்போது எடுத்த போட்டோ எங்கள் வீட்டு ஆல்பத்தில் இன்னும் உள்ளது. அப்போது வள்ளியப்பனுக்கு வயது நான்கு.

"அப்பா! எனக்கு டியூஷன் வச்சிடுப்பா" என்றுன் அவன் ஒருநாள்.

'ஏண்டா கண்ணு! நீதான் நல்லா படிக்கிறியே. தெரியாட்டி அண்ணன் சொல்லித்தருவானே. இல்லாட்டிச் சீனு மாமாகிட்டே சொல்றேன். உனக்குத் தினம் வந்து சொல்லித் தருவான்' என்றேன்.

'இல்லேப்பா மாமா வேண்டாம்'னு தயங்குகிறுன்.

'ஏண்டா—அடிக்கும்னு பயப்படுறியா!' என்று அவனைப் பார்த்தேன்.

'ம் ம்......' என்று மறுப்பதுபோல் தலையை அசைத்தான்.

'பின்னே யாருடா வேணும் சொல்லு. அவுங்க கிட்டேயே நீயும் படிக்கலாம்' என்றேன்.

'எங்க கிளாஸ் டீச்சர் கிட்டேயே டியூசன் படிக்கிறேன்பா'......என்று நிறுத்தி, ஏதோ சொல்லத் தயங்குகிறான்.

'ம் சரிடா கண்ணு. ஆனா அவங்க வீட்டுக்கு வரமாட்டாங்களே. நம்ப பக்கத்து வீட்லே இருக்காங்களே அந்த டீச்சர் கிட்டே ஏன் படிக்கக் கூடாது?' என்றேன்.

"இல்லேப்பா-கிளாஸ் டீச்சர்கிட்டேதான் படிக்கணும். அப்பொதான் நிறைய மார்க், முதல் மார்க் வரும். அண்ணனுக்குப் புத்தகம் கொடுத்தாங்களே அதுமாதிரி எனக்கும் பரிசு கிடைக்கும்."

'அட ராமா!' என்று பெருமூச்சு விட்டேன்.

'ஏம்பா' ஏன் டியூஷன் வைக்கமாட்டியா?' ஏக்கம் முகத்தில் வடிவெடுத்து நின்றது.

'இல்லேடா கண்ணு, வைக்கிறேன். உங்க டீச்சர் கிட்டேயே படி' என்று மாதம் இருபது ரூபாய் கொடுத்து டியூஷன் வைத்தேன். இயல்பாகவே எழுபது எண்பது மதிப் பெண் பெற்று, இரண்டாவது மூன்றாவது வரிசையில் வரு பவன், இப்போது எல்லா மாதத்தேர்விலும் முதல் மதிப் பெண் பெற்று முதல் வரிசை பெற்றுக் கொண்டிருந்தான். ஒவ்வொரு மாதமும் டீச்சர் தேர்ச்சி அறிக்கை கொடுத் ததும், கல்லூரியில் என் அறைக்கு எடுத்துக்கொண்டு வந்து காட்டி மகிழ்வான். ஆனால், ஆண்டுத் தேர்வு நெருங்கும் சமயத்தில் மூன்றுமாதம் அந்த டீச்சர் லீவு

போட்டுவிட்டார்கள். புதிய டீச்சர் 'பி' வகுப்பைப் பார்த்துக் கொண்டவர் இதற்கும் வகுப்பாசிரியர் ஆனார். அந்த அம்மாவிடம் டியூஷன் வைத்திருந்த பிள்ளைகளுக்கே அந்த ஆண்டு பரிசுகள் வந்தன. இவன் பாவம் ஏமாந்து போனான்.

நர்சரி வகுப்பு முடிந்துவிட்டது. கான்வெண்ட்டில் சேர்த்தேன். எனக்கு என்னவோ அந்தக் கல்வி பிடிப்ப தில்லை. அப்பாவை, 'பப்பா' என்றும், அம்மாவை 'மம்மா' என்றும் அழைப்பதைத் தவிர வேறு என்ன புதுமையாக அங்குப் பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள் என்று பிறருக்கு நான் அடிக்கடி சொல்லி அங்குச் சேர்ப்பதைத் தடுப்பேன். ஆனால் அழகழகான உடை உடுத்துக்கொண்டு போகும் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, என் மனைவி வள்ளியப்பனையும் அங்கேயே சேர்க்கவேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். எப்படியோ மூன்று பிள்ளைகளை அங்குச் சேர்க்காமல் தப்பித்துக் கொண்டேன். இந்தமுறை அவள் பிடிவாதத்திற்கு இணங்கும்படி ஆகிவிட்டது.

ஒருநாள் கான்வெண்ட்டிலிருந்து போன் வந்தது. வள்ளியப்பனுக்கு உடம்பு சரியில்லை, உடனே வரணும்னு போன் வந்தது. ஓடிப்போய்க் கல்லூரி ஹெல்த் சென்ட்டருக்கு ரிக்ஷாவில் வைத்து அழைத்துவந்தேன். டாக்டர் நல்லவர். வீட்டிலிருந்து, மூடிய ஹெல்த் சென்டரைத் திறந்து, தர்மா மீட்டரை வைத்துப் பார்த் தார். 104 டிகிரி சுரம் காய்ந்தது. அவசர அவசரமாக ஏதோ இரண்டு ஊசிபோட்டார். 'பையன் நல்லாத் தூங்குவான். நல்லாத் தூங்கட்டும். விழிச்சதும் இந்த மருந்து குடுங்க' என்று சீட்டில் ஏதோ மருந்துப் பெயர் எழுதிக் கொடுத்தார். 'சாயங்காலம் தவறாமே பையனை அழைச்சுக்கிட்டு வாங்க. பார்க்கணும். இவ்வளவு சுரம்

இருந்தப்போ ஏன் ஸ்கூலுக்கு அனுப்பினீங்க? படிச்சவங்களும் இப்படித்தான் இருக்கிங்க. கொஞ்ச நேரம் லேட்டாயிருந்தா என்ன ஆகியிருக்குமோ' என்று அன்பாகக் கடிந்து கொண்டார்.

அரைநாள் லீவு எழுதிக்கொடுத்துவிட்டுக் கோபத்தோடு வீட்டிற்கு வந்தேன். மடியில் தூங்கிக்கொண்டிருந்த பிள்ளையைத் தோளில் போட்டுக்கொண்டு இறங்கினேன். எதிர்பாராத எங்கள் வரவைக்கண்டு, வள்ளியப்பன் துவண்டு என் தோளில் கிடப்பதைக் கண்டு, மனைவி நடு நடுங்கிப்போனுள். 'ஏன் இவனை இன்னைக்கு ஸ்கூலுக்கு அனுப்பினே...? ராத்திரியே உடம்பு லேசா காய்ஞ்சுச்சில்லே' என்று இரைந்தேன். ஒன்றும் பதில் சொல்லாமல் வாசற்படியில் நிற்கும் ரிக்ஷாக்காரனைக் கண்ணுல் எனக்குச் சாடை காட்டியபடியே குழந்தையைத் தான் வந்து தன்தோளில் சார்த்திக் கொண்டு உள்ளே போய்விட்டாள். ரிக்ஷாக்காரனுக்கு மூன்று ரூபாய் கொடுத்து அனுப்பிவிட்டு வருத்தத்தோடு உள்ளே வந்தேன்.

பஞ்சு மெத்தையில் அவனைப் படுக்க வைத்துவிட்டுக் கண்கலங்க என்னைப் பார்த்தாள்.

'எதற்கும் அழத்தான் தெரிகிறது. ராத்திரியே சொல்லலே. இவனுக்கு உடம்பு காயுது—நாளைக்குப் பார்த்து நல்லாயிருந்தா கான்வெண்ட்டுக்கு அனுப்பு; இல்லாட்டி வேண்டான்னு சொல்லலே? புள்ளெ ஒரே நாள்ளே கலெக்டர் ஆயிடனுன்னு ஆசை. என்னவோ நல்ல டாக்டர்; உடனே ஓடிவந்தார். நம்ப அதிருஷ்டம் வீட்டிலேயும் இருந்தார். இல்லாட்டி, கை காலை இழுத்துக்கிட்டு எதிர்வீட்டு வேலைக்காரி மாரியாயி புள்ளெமாதிரி கோணவாயனுப் போயிருப்பான் நம்ம புள்ளெ' என்று இரைந்தேன்.

அவள் அழுதுகொண்டே ஒன்றும் பேசாமல் குழந்தை படுத்திருக்கும் படுக்கை அருகில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி மெல்ல அழுதாள்.

எனக்கு என்னவோபோல் இருந்தது. அதிகப்படியாகத் திட்டிவிட்டதுபோல் தோன்றியது. நானும் அவள் அருகில் போய் உட்கார்ந்துகொண்டு, 'அடி தெய்வம்! கோபிச்சுக்காதே—என்னமோ புள்ளெக்கு உடம்பு சரியில்லே என்று போன் வந்ததும், உன்னுட்டம் நானும் நடுநடுங்கிப் போயிட்டேன். ஏதோ கடவுள் காப்பாத்திட்டார்—திட்டுனேன்னு கோவிச்சுக்காதே' என்று அவள் கண்ணீரைத் துடைத்தேன். அவள் இன்னும் தேம்பிக் கொண்டே, 'நான் மட்டும் அனுப்பிச் சேனு? வேண்டாண்டா கண்ணு. உடம்பு ராத்திரியே சரியில்லே—இப்பவும்—அப்படியே இருக்கு; நாளைக்குப் பார்த்துக்கிட்டுப் போவலாம்'னு எவ்வளவோ கெஞ்சி னேன்.

''இல்லம்மா—இரண்டு டெர்ம் ஒருநாள் கூட ஆப்செண்ட் ஆகலே. இந்த டெர்ம் எல்லா நாளும் பிரசெண்ட் ஆயிட்டா 'Good Student'ன்னு பிரைஸ் எனக்கு வரும். போன வருடம் 'மல்லி அக்கா வாங்குச் சேன்னு!' சிரித்து என்னை ஏமாற்றிவிட்டுப் போய் விட்டான்'' என்று அழுதாள்.

கான்வெண்ட் பள்ளி மாறி, இப்போது நல்ல இடை நிலைப் பள்ளி ஒன்றில் ஆரும் வகுப்பில் சேர்த்தேன். இந்த வகுப்பில் எப்படியும் பரிசு வாங்க வேண்டுமென்று எல்லாப் போட்டியிலும் கலந்து கொண்டான். ஏனோ எதிலும் பரிசு பெறவில்லை. இறுதியாக விளையாட்டுப் போட்டிகள் வந்தன. இவனுடைய இளைஞர் கிரிக்கெட்

அணியே வென்றது. ஆனால், இவன் மேடைக்குச் சென்று பரிசு வாங்க முடியாது. கேப்டன்தான் வாங்குவான். அதனால் எப்படியும் மேடைக்குப் போய்ப் பரிசு வாங்க வேண்டும் என்று தவியாய்த்தவித்தான். மாமிசம் என்றும் உண்ணாத குடும்பத்தில் பிறந்தும் நாலைந்துநாள் முட்டையும் பாலும் குடித்தான். யாரோ ஒரு மாணவன் அப்படிக் குடித்ததால் ஓட்டப்பந்தயத்தில் முதலில் வந்தானாம். ஆனால், ஓட்டப் பந்தயத்தன்று மாலை முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தான். நாங்கள் யாரும் அவனை ஒன்றும் கேட்கவில்லை. ஏதேனும் கேட்டால் 'ஓ' வென்று அழுதுவிடுவான்போல் தோன்றியது. ஆனால், எங்களைப் பார்த்ததும் அவன் அப்படியே அழுதுவிட்டான். நானும் அவளும் சென்று அணைத்துக்கொண்டு, 'அழாதேடா கண்ணு அழாதே. போனா போயிட்டுப் போவுது. அடுத்த வருடம் பார்த்துக் கலாம்' என்று சொல்லி மெல்லத் தேற்றினோம்.

'இல்லப்பா—இந்த வருடம் ஏழாம் வகுப்புப் பிள்ளைங் களையும் எங்களோட சேர்த்துட்டாங்க—அப்படி இருந்தும் நான் வேகமாக ஓடினேன். செகண்டு வந்தேன்; ஆனா மூணாவது வந்த பாலனை அங்கே இருந்த வாத்தியார் ஒருத்தர் செகண்டுன்னு பேர் எழுதிக்கிட்டு என்னை இன்னொரு வாத்தியாருகிட்டே அனுப்பிட்டார். அவர் ஏதோ சொல்ல வாயெடுத்தப்போ, 'இல்லை; மூணாவதாத் தான் இவன் வந்தான்—இப்பொ செகண்டு மாதிரி என்கிட்டே வந்துட்டான்' என்று சொல்லி என்னை மூணாவதாக்கிட்டார். என் பிரண்டு பாலுகூட, 'நீதாண்டா ரெண்டாவது. அந்தச் சிடுமூஞ்சிக்குச் சொந்தக்காரப் பையண்டா அவன். எனக்குத் தெரியும். எங்க வூட்டுக் கிட்டேதான் அந்த வாத்தியார் இருக்கார். நேத்துக்கூட அந்தப் பையனின் அம்மாவும் அப்பாவும் அவுங்க வீட்டுக்கு

வந்து போனுங்க. அப்போ பாலன் என்னைப் பார்த்து, 'எங்க சொந்தக்காரருடா' என்று பீத்திக்கொண்டான்!' என்று பாலன் சொன்னதைக் கூறி அழுதான்.

அழாதேடா—கண்ணு—எங்க காலேஜ்லேகூட அடுத்த வாரம் ஸ்போர்ட்ஸ் நடக்கப் போவுதுன்னு சர்க்குலர் வந்தது. அதிலே ஆசிரியர் குழந்தைகளும் கலந்துகொள்ள லாமாம். உனக்கு அதிலே பரிசு கிடைக்கும் என்று சொல்லித் தேற்றினேன். அவனும் ஒருவாறு சமாதானம் ஆனுன். அன்றிலிருந்து தன் அண்ணனைக் காலையிலும் மாலையிலும் விளையாடும் தோப்பிற்கு அழைத்துக்கொண்டு போய் ஓட்டப் பயிற்சி பெற்றுவரலானுன். எப்படித் துவங்குவது, எப்போது ஸ்பீட் எடுப்பது—நிற்காமல் திரும்பிப் பார்க்காமல் எல்லைக் கோட்டைத் தாண்டும் வரை எப்படி எப்படி ஓடுவது என்றெல்லாம் தன் அண்ண னிடம் மிக மிக நுணுக்கமாகக் கேட்டுப் பயிற்சி பெற்றான்.

ஓட்டப் பந்தயப் போட்டிநாள் வந்தது. நான் அவனுக்கு அறிவித்துவிட்டு நூல் நிலையத்திற்குப் புறப் பட்டேன். அவன் தயங்கியபடியே,

'அப்பா...!' என்றான்.

'ஏண்டா!

'இல்லேப்பா—நீயும் வாப்பா' —என்றான்.

'போடா இன்று ராத்திரிக்கு ஒரு கட்டுரை எழுதி முடிக்கணும்—அதற்குக் குறிப்பு எடுக்கணும்—நீ மட்டும் போ. இல்லாட்டி அண்ணனை அழைச்சிட்டுப்போ—உன் அம்மா வேணுமின்னாலும் கூட்டிக்கிட்டுப் போ' என்றேன். குனிந்து கொண்டே சென்றான்.

தரையில் தண்ணீர் துளி துளியாய் விழுவதைப் பார்த்துத் தலை நிமிர்ந்தேன்.

வள்ளியப்பன் கண்ணீர் அவை.

'ஏண்டா கண்ணு இதுக்குப் போய் அழறியே' என்று தேற்றிவிட்டு, 'சரி நானும் வருகிறேன். வா போவோம்' என்று சொல்லிப் புறப்பட்டேன். போனதும் நல்லதாகிப் போய்விட்டது. ஏன் என்ருல், அங்கு வந்திருந்த ஆசிரியர் குழந்தைகளைத் தோற்றம், வயது, அளவுபற்றிப் பிரிக்காமல் ஒன்ருவதிலிருந்து மூன்ருவது-நான்காவதிலிருந்து ஏழாவது-எட்டாவதிலிருந்து பத்தாவது என்று மூன்று குழுவாகப் பிரித்து ஓடுவதற்கு ஏற்பாடு செய்தனர். எனக்கென்னவோ அந்த முறையில் பிரித்தது சரியெனத் தோன்றவில்லை. அங்கு வந்திருந்த சில பெற்ருேர்க்கும் அது சரியெனப் படவில்லை. உடனே நான் அவர்களைச் சேர்த்துக் கொண்டு உடற்பயிற்சி ஆசிரியரிடம் இப்படி மூன்று நான்கு வகுப்புக்களை ஒன்ருகச் சேர்த்து ஓடவிடுவது பொருத்தமில்லை என்றும், எல்லோரையும் வரிசையாக நிறுத்தி, தோற்றம், அளவு இவற்றிற்கு ஏற்ப மூன்று அல்லது நான்கு பிரிவாகப் பிரிப்பதே பொருத்தம் என்றும் சொன்னேன். அவரும் எங்கள் கருத்தில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டு அப்படியே பிரித்து ஓடவிட்டார். உண்மையிலேயே வள்ளியப்பன் நன்ருக ஓடிவந்தான். இதுதான் முதல் தடவையாக நான் அவன் ஓட்டப் பந்தயத்தைப் பார்த்தது. ஓடிவருபவர்களை எதிர்பார்த்துக்கொண்டு அங்கேயே நின்று கொண்டிருந்தேன். வள்ளியப்பன்தான் முதலில் வந்தான்; யாரும் சந்தேகப் படுவதற்கு இடமில்லாமல் முதலில் வந்துவிட்டான். நான் ஓடிப்போய்த் தழுவிக் கொண்டேன்.

''மிஸ்டர் ராஜன் ஓங்க பையனு? வெரிகுட்! முதல் பரிசு அவனுக்குத்தான்' என்ருர். அவனைவிட நான் மகிழ்ந்தேன்; நூல்நிலையத்திற்குப் போகவேண்டும் என்று நினைத்தது முட்டாள்தனமாகத் தோன்றிற்று. வீட்டுக்குப் போனேம். மனைவியின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. 'எனக்குத் தெரியும். லட்டு சுட்டு வைத்திருக்கேன் பாருங்க முன்னேயே' என்று கொண்டுவந்து பரிமாறினுள். பெரிய பையனும் வந்து தம்பியைப் பாராட்டினுன். 'நான் சொன்னேன் இல்லையா —அப்படித்தானே ஸ்டார்ட் செய்தே' என்று தான் சொல்லிக் கொடுத்த டெக்னிக்குக்காகத் தன்னையும் இடையிடையே புகழ்ந்துகொண்டான்.

மறுநாள் காலேஜுக்குப் புறப்படும்போது வள்ளியப்பன் என்முன் வந்து நின்ருன்.

'என்னடா கண்ணு?' என்றேன்.

'காலேஜ் டே' எப்பப்பா?—எப்பப் பரிசு கொடுப்பாங்க?' என்ருன்.

'கேட்டுக்கிட்டு'வர்றேன். நீ பள்ளிக்கூடம்போ' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

மாலையில் வந்ததும் வராததுமாக எதிரே வந்து நின்ருன். "அடுத்தவாரம் சனிக்கிழமை மாலை ஆறுமணிக்கு" என்று நான் கேட்டறிந்ததைச் சொன்னேன். உடனே ஓடிப்போய்த் தன் அம்மாவிடம் சொல்லி மகிழ்ந்தான்.

பரிசு வாங்கப் போவதற்காக என் மனைவியும் அவனும் கூடி, நாள்தோறும் சில ஏற்பாடுகள் செய்யத் துவங்கினர். புதிய நீல பேண்ட் ஒன்று மனைவி வாங்கினுள். வெள்ளை டெர்லின் சட்டையை டிரை கிளீனுக்குக் கொடுத்து வாங்கிவந்தான். மெல்ல நீலுவையும் வரச்சொல்லி, அவன்

பரிசு வாங்கும்போது தவறாமல் புகைப்படம் பிடிக்க ஒருவர் தவறினாலும் இன்னொருவர் தவறாமல் இருப்பதற்காக இரண்டு பேரிடம் சொல்லிவைக்கும்படி ஏற்பாடு செய்தாள். விழா நடக்க இரண்டு நாள்தான் இருக்கும். எங்கள் வீடே அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. மறுநாள் மாலை விழா. ஆனால், அன்று இரவு மாநில முதல் அமைச்சர் இறந்து விட்டதால் விழா நிறுத்தப்பட்டுவிட்டது. ஒரு வாரம் வரை எந்த விழாவும் இல்லை என்று சொல்லி விட்டார்கள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று ஏங்கினோம்.

ஒருவாரம் கழிந்ததும் ஒவ்வொரு நாளும் வள்ளியப்பன் எப்போப்பா 'காலேஜ் டே?' என்று தவறாமல் கேட்பான். அடிக்கடி போய் விசாரிக்க எனக்கு நாணமாக இருந்தது. ஏண்டா, இந்த ஆளுக்கு வேறு வேலையில்லையா, என்று நினைத்து விடுவார்களோ என்று பயந்தேன். என்றாலும் வள்ளியப்பனுடைய ஏக்கக் கண்களை நினைத்துக்கொண்டு அவ்வப்போது, 'காலேஜ் டே' பற்றி விசாரித்து வரலானேன். பத்து நாட்களுக்குப் பிறகு சரியான செய்தி கிடைத்தது. 'மார்ச்சு 24-ஆம் நாள்' என்று முடிவான செய்தி அறிந்தேன். மகிழ்ச்சியோடு வந்து சொன்னேன். பல நாட்களுக்குப் பிறகு மறுபடியும் வள்ளியப்பன் முகம் மலர்ந்தது. உடலில் சுறுசுறுப்பு ஏற்பட்டது.

விழாநாள் காலை வந்தது. நண்பகல் வந்தது. நல்ல காலம், தடை ஒன்றும் இல்லை. பிற்பகல் நல்லதாகவே வந்தது. எங்கள் குடும்பத்தோடு போனோம். நீலப் பேண்ட், வெள்ளைச் சட்டை நீல டை—வள்ளியப்பன் அணிந்திருந் தான். நானே போட்டோ குறித்து மீண்டும் நினைவுறுத்தி னேன். 'கவலை வேண்டாம் சார். நான் அப்பவே சொல்லி விட்டேன், மூணு வதா நம் அன்பழகனிடம் சொல்லி அவன்

சொந்தக் கேமராவிலும் ஒரு படம் எடுக்கச் சொல்லியிருக்கேன்' என்ருன். திருப்தியுடன் அமர்ந்து ஒவ்வொரு நிகழ்ச்சியாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று கூட்டத்தின் ஒரு மூலேயில் கூக்குரல் எழுந்தது. நாற்காலிகள் பறந்தன. மக்கள் இங்கும் அங்குமாக ஒடினர்.

ஏதோ கலவரம் ஆரம்பமாகிவிட்டது. கல்லூரித் தலேவர் கூட்டத்தை அடக்க எவ்வளவோ முயன்ருர்— ஒன்றும் முடியவில்லே. மேடையை நோக்கிக் கற்கள் பறந்தன. உடனே கூட்டத்தைக் கேன்சல் செய்து விட்டனர்.

# வள்ளியும் லட்சுமியும்

உம்.... மனிதர்களேயே நம்ப முடியாது, நம்பக் கூடாது. என்னைப்போல் நம்பி மோசம் போனவுங்க எவ்வளவு பேரோ?

''அடி லட்சுமி! ஒங்க அம்மா பாலெக் குடிச்சுத்தான்'டி நான் வளர்ந்தேன். 'கண்ணம்மா'ன்னு நான் கூப்பிட்டா வாய் புல்லை அப்படியே விட்டுவிட்டு என் கிட்டே ஓடிவந்து என்னை நக்கிக் கொடுக்கும் ஒங்க அம்மா தெரியுமா!... அய்யோ, பாவம்! கடைசியா ஒன்னைப் பெத்துப் போட்டுட்டுச் செத்துப் போச்சு. நான் அழு அழுன்னு அழுதேன். ஒனக்கு ஒண்ணுமே தெரியாது. எங்க வயக்காட்டுப்பக்கம் நான் கேட்டுக்கிட்டபடி ஒங்க அம்மாவைத் தூக்கிக்கிட்டுப் போய்ப் பொதைச்சோம். அதோ தெரியுது பார் பவளமல்லி மரம். அது ஒங்க அம்மா பொதைச்ச எடத்துலே நான் வைச்ச செடிதான். நாலெஞ்சு வருசத்தில் இப்படி பெரிய மரமா வளர்ந்துடுச்சி'ன்னு எத்தனைதரம் என் கழுத்தைக் கட்டிப் பிடிச்சிகிட்டுப் பாராட்டியிருக்கா,—

நானும் அப்படியே நம்பித்தான் என் உயிரைக்கூடப் பெரிசா நினைக்காமே அவளுக்கு உதவியிருக்கேன். வள்ளிக்கு அப்பொ பனிரெண்டு வயசு. ஒருநாள் என்னை வயக் காட்லே யிருந்து ஓட்டிக்கிட்டு வந்தா. வழியிலே பொன்னம்பலம் ஆட்டுக்குத் தழை வெட்டிக்கிட்டு காட்டு வழியா வந்து திடீர்னு எங்களுக்கு முன்னே நின்னுன். பொன்னம்பலம் கெட்ட பயல். எப்போதும் பொம் பளைங்களை ஒரு மாதிரி பார்ப்பான். வள்ளிமேலே அவனுக்கு ஒரு கண்ணு. ஆனு என் வள்ளி அவனைச் 'சீ'ன்னு மதிக்க மாட்டாள். அன்னைக்கு எக்கச்சக்கமா அகப்பட்டுக் கிட்டோம். சூரியன் வேறே மறைஞ்சு போச்சு. கத்தலாம்'னு வாய் வரெலெ.

'என்னடி குட்டி வள்ளி

இப்படி வர்றெ துள்ளி' ன்னு

பாடிக்கிட்டே வந்து அவள் ஓடிவிடாமெ பிடித்தான். வள்ளி கத்த முயன்ருள். 'இப்பொ இங்கே யாருமில்லே. தெரிஞ்சு தான் ஒன்னை மடக்கியிருக்கிறேன். ஏதாவது சத்தம் போட்டே கொரவளையை நெரிச்சுப் புடுவே'ன்னு கையிலிருந்த கத்தியையும் தலையிலிருந்த கட்டையும் கீழே போட்டுட்டு, ஒரு கையாலெ அவள் வாயைப் பொத்திக் கிட்டு இன்னொரு கையாலெ அவளைத் தூக்கியபடியே காட்டுக்குள்ளே போகப் பார்த்தான். வள்ளி துடிதுடின்னு துடிச்சி முரண்டினுள். ஆனுல், அவன் இரும்புப் பிடியிலிருந்து தப்ப முடியலெ. அவளுக்கு மூச்சுத் திணறிச்சு. என் கதி என்னுகுமோன்னு நான் நெனைக்கலெ. என் தோழி வள்ளி இப்படித் துடிக்கிறப்பொ...! நான் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவனை முட்டினேன். வள்ளியைத் தூக்கிக்கிட்டுப் போற வெறியிலே என்னெ நெனச்சுகூடப் பார்க்கலெ. திடீர்னு இப்படி நான் இடிச்சதும் அவன்

தடுமாறிப் போயிட்டான். வள்ளியெ விட்டுட்டு என் பக்கம் பாய்ந்தான். அதுக்குள்ளெ வள்ளி தப்பினேம் பொளச்சோம்'னு ஓட ஆரம்பிச்சுட்டா. நானும் அவளைத் தொடர்ந்து ஓடிவந்தேன். பின்னாலே இருந்து அந்தக் கொலைகாரப் பாவி கத்தியை வீசினான். என் பின்னால் கால்லெ குத்தி எலும்பை வெட்டிடுச்சி. அப்புறம் அதனாலெ சரியா நடக்கமுடியாமெ போயிடுச்சி. என்னை நொண்டி நொண்டின்னுகூட கேலிசெய்வாங்க.

இப்படி எத்தனை தரம் எப்படி எப்படி எல்லாம் அந்த வள்ளிக்கு உதவி செஞ்சேன். கடைசியிலெ அவளைப் பொண்ணுப் பார்க்க வந்தாங்க. அப்பொ எனக்கு வயத்துலே அஞ்சு மாசம். வள்ளிக்கு நகை நட்டு எல்லாம் போட்டு அழகாச் சிங்காரிச்சிருந்தாங்க. பொண்ணுப் பார்க்க வந்தவுங்க எல்லாம் போன பிறகு போட்டோ எடுத்தாங்க. அந்தப் போட்டோவிலே நானும் இருந்தேன். அதை எனக்குக் காட்டிக் காட்டி வள்ளி சிரிப்பா.

வள்ளிக்கு நிச்சயதார்த்தம் ஆச்சி. அப்பொ என் வயிற்றில் வளர்ந்த உயிர் முட்டி மோதித் தொல்லை செய்யும். வள்ளி கிட்டவந்து என்னைத் தடவிக் குடுப்பா. அசைகிற என் வயிற்றையே பார்த்துக்கிட்டிருப்பா. 'இன்னும் சில நாளில் வள்ளி கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிடுவா....என்னையும் கூடவே அழைச்சிக்கிட்டுத்தான் போவா...இல்லேன்னு அழுது அடம்புடிச்சி அவள் பின்னாலேயே ஓடிட மாட்டே'னுன்னு நினைத்துக் கொண்டிருந்தேன்.

கல்யாண நாளும் நெருங்கிக்கிட்டு வந்தது. யார் யாரோ அடிக்கடி வந்து போய்க் கிட்டிருந்தாங்க. வள்ளிக்குப் புதுப்புது நகை நட்டு எல்லாம் வாங்கிப் போட்டாங்க, அழகா இருந்தா வள்ளி. ஒவ்வொரு

நகையும் போட்டுக்கிட்ட உடனே ஓடிவந்து எனக்குக் காட்டி முத்தம் கொடுப்பா. நானும் மகிழ்ச்சியோடு தலெயெ ஆட்டுவேன்.

ஒருநாள் காலையிலே வள்ளிப்பொண்ணு எழுந்திருக்கக்கூட இல்லெ. யாரோ ரெண்டு முரடனுங்க வந்தாங்க. வள்ளியின் அப்பா ஆயிரரூபாய்—பத்து நோட்டு—வாங்கிக்கிட்டு என்னைப் புடிச்சி அந்த முரடனுங்க கையிலெ ஒப்படைச்சுட்டாங்க. நான் முரண்டு பிடிச்சிப் பார்த்தேன்; கத்தி கத்திப் பார்த்தேன். 'வள்ளி கிட்டெ சொல்லிட்டாவது வரலாம்'னு பார்த்தேன். அவனுங்க விடலெ. வள்ளியொட அப்பாவும் திரும்பிப் பார்க்காமெ போயிட்டாரு.

'என் குழந்தை பொன்னி பொறந்தா எப்படியும் வள்ளி தேடிக்கிட்டு வருவா'ன்னு பார்த்தேன். உம்... வரலெ. மனிதர்கள் அல்ப குணம் தெரிஞ்சுக்கிட்டேன். என்னை வாங்கிய ஆள் என் பொன்னிக்குக் கொஞ்சங்கூட பால் இல்லாமெ ஒட்டக் கறந்து கறந்து என் உயிரை வாங்கிடுவான். பட்டினி கிடந்து கிடந்து என் மகள் பொன்னி செத்துப் போச்சு.

பாவிங்க! என் பொன்னி செத்துப் போச்சேன்னுகூடக் கவலைப்படலெ. நான் பால் கொடுக்கலேன்னு கொல்லு கொல்லுன்னு பின் கால்களைக் கட்டிப் போட்டு உசிரை எடுத்துட்டானுங்க. அப்புறம் எவனோ ஒருத்தன் சொன்னான்:

'இந்த இனம் இப்புடித்தானுங்க; கன்னு இருக்குற வரைக்குந்தான் பால் குடுக்கும். கால்நடை ஆசுபத்திரிக்கு அழைச்சிக்கிட்டுப் போங்க. பத்து மாசத்திலே கன்னு போடும்!'

உடனே என்னைக் கட்டி இழுத்துக்கிட்டுப் போயி கால்நடை மருத்துவ நிலையத்திலே நிறுத்தினாங்க, பாவிங்க.

என் பொன்னியைக் கரு தரித்த நினைவு வந்தது. வெள்ளையன் என்னை மாத்திரம் ஒதுக்கிக்கிட்டு மாந்தோப்புப் பக்கம் வந்து காதல் புரிந்த அந்த இன்ப நினைவுகள் வந்தன. அந்தக் கம்பீரமான அழகில் மயங்கிச் சிணுங்கிக்கிட்டே போக்குக் காட்டினது எல்லாம் நினைவு வந்தது. என்ன செய்வது? மனிதருங்க. நம்பக்கூடாதுன்னு முதலிலேயே சொன்னேன்லே. இப்பொ மறுபடியும் கரு தரிச்சிருக்கிறேன். வள்ளிக்குக் கல்யாணம் ஆகியிருக்கும். எந்த ஊருக்குப் போனாளோ! புருஷனோடு வாழ்ற வாழ்விலெ என்னெ நினைக்க அவளுக்கு எங்கே நேரம் இருக்கப் போவுது!

* * *

ஆவி பறக்கும் பாலைக் கையில் ஏந்திக்கொண்டு கைப்பிடித்த கணவனைத் தனியே சந்திக்கப் போன முதல் இரவு அது. மெல்லக் கதவைத் திறந்துகொண்டு கதவருகே நின்றேன். ஏதோ படித்துக் கொண்டிருந்த அவர் மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தார். என்னைக் கண்டதும் புத்தகத்தை வைத்துவிட்டு, 'வள்ளி' என்று ஆர்வம் ததும்பும் கண்களோடு என்னை நோக்கி எழுந்து வந்து என்னை அணைத்துக் கொண்டுபோய் மெத்தையில் அமர்த்தினார்.

மெத்தையில் அமர்ந்ததும் லட்சுமியின் நினைவு வந்து விட்டது. திடீரென்று எழுந்து கொண்டேன். செருமிச் செருமி அழுதேன். அவருக்கு ஒன்றும் புரியாமல் 'என்ன வள்ளி! என்ன!' என்று ஒரு வினாடி தவியாய்த் தவித்துப் போனார்.

''இந்தக் கட்டிலும் மெத்தையும் வேண்டாமுங்க. இது வாங்கறதுக்காக என் லட்சுமியை எனக்குத் தெரியாமெ அப்பா வித்துட்டாங்க. வாயும் வயிறுமா அது கதறிக்கிட்டே போச்சுன்னு ஊர்லெ இருந்தவங்க எல்லாம் சொன்னுங்க...!'' என்று அழுதேன். என் லட்சுமி எனக்காகத் தன் காலெ நொண்டியாக்கிக்கிட்டு என் வாழ்வு நொண்டியாகமெ காப்பாத்திய அந்தக் கதையையும் சொன்னேன். என் லட்சுமியை நினைத்து அவரும் கண் கலங்கினுர். அன்று இருவரும் தரையிலேயே படுத்து உறங்கினேம். நாட்கள் ஓடின. கல்யாணம் ஆகிப் பல மாதங்கள் ஓடிவிட்டன. என்னுல் லட்சுமியை மட்டும் மறக்க முடியவில்லை.

இதோ இன்று எனக்கு ஒரு பெண் பிறந்திருக்கிறது. அதற்கு லட்சுமின்னு பெயர் வைத்திருக்கேன். என் லட்சுமி எங்கே என்ன கஷ்டப்படுகிருளோ!

'வள்ளி! வள்ளி!! இதோ பார்! இங்கே வந்து பாரேன். உனக்கும் உன் லட்சுமிக்கும் ஒரு பரிசு வாங்கிவந்திருக்கேன்!' என்று அவர் வாயிற்படியில் நின்றுகொண்டே அழைத்த குரல் கேட்டது. மடியில் தூங்கிக் கொண்டிருந்த கைக் குழந்தையை மெல்லத் தூக்கித் தோளில் அணைத்துக் கொண்டு மெல்ல எழுந்து, சந்தைக்குப் போய்.வந்தவரை வரவேற்கப் போனேன். ஏதாவது அழகான பொம்மை அல்லது பூ வாங்கி வந்திருப்பார் என்று நினைத்தேன்.

ஆ! அங்கு என் லட்சுமி தன் கன்றுக்குட்டியோடு நின்றுகொண்டிருந்தாள். என்னைக் கண்டதும். அம்மா! ம்மா! ம்மா! என்று கத்திக் கதறினுள்.

'லட்சுமி! என் லட்சுமி!' என்று கூவிக்கொண்டே அருகில் போய் ஒருகையால் அதன் கழுத்தைத் தழுவிய

படியே அன்பு கலந்த வியப்போடு அவரைப் பார்த்தேன். ஆதரவோடு என் பின்பிறம் நெருங்கிவந்து என்னைத் தழுவியபடியே நிச்சயதார்த்தத்து அன்று எடுத்த என் புகைப்படத்தைக் காட்டி இப்படிப்பட்ட நொண்டிப்பசு இது ஒன்றுதான் சந்தையில் இருந்தது. ஐந்தாறு மாதமா நானும் வாரந்தவறாமே சந்தைக்குப் போவது இதுக்காகத் தான். 'இப்பொ மெத்தையிலும் கட்டிலிலும் படுத்துக் கொள்ளலாம் இல்லையா!' என்று தன்னை மறந்து எனக்கு முத்தம் கொடுத்தார்.

லட்சுமி இதைக் கவனியாதது போலத் தன் கன்றை நக்கிக் கொடுத்தது.

# வெறுங் கழுத்து

'வெறுங் கழுத்தோடு சாத்தி வைச்சிருக்கே. ஒரு மாலையாவது போடக்கூடாது' என்று நாற்காலியில் சார்த்தி வைத்திருக்கும் உயிர்போன என் தாய் உடம்பைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே அழுவதற்கு உள்ளே போய்விட்டார் காட்பாடியிலிருந்து வந்த பாட்டியம்மா.

"அம்மா பூமாலை ஒண்ணும் போட்டுக்கமாட்டாங்க. என்ன செய்யறது" என்று எனக்குள் தேம்பினேன்.

வேலூர் டவுன் ஹால். கிருபானந்தவாரியார் 'வள்ளலார் வாழ்வு' என்ற சொற்பொழிவு. காட்பாடி பாட்டிதான் என்னை அழைத்துக்கொண்டு போனார்கள். 'வீட்டில் வேலையிருக்கிறது' என்று அம்மா வரவில்லை. பாட்டி பெண்கள் கூட்டத்தில் உட்கார்ந்துவிட்டார். நான் முன்னே என்னைப்போல் இருந்த பொடிப்பசங்களோடு போய்ச் சேர்ந்துகொண்டு வாரியார் பக்கத்தில் அமர்ந்திருந்தேன். என்னென்னவோ சொன்னார்; பாடினார்; சபையைப் பார்த்து வள்ளலார் பாடல்களைப் பாடி உருகினார். இடையே 'பராபரமே' என்று முடியும் ஏதோ

ஒரு பாடலைச் சொல்லிவிட்டு, தொண தொண என்று பேசிக்கொண்டிருந்த எங்களைப் பார்த்துக் கண்களை ஓர் உருட்டு உருட்டிச் சிரித்துக் கொண்டே, "டேய் பசங்களா! இந்தப் பாட்டை யார் பாடினு சொல்லுங்க?" என்று ஒரு புதிர் போட்டார். எங்களுள் பலர் அந்தப் பாட்டைக் கேட்டதே இல்லை. கேட்ட சிலருக்கும் அது தெரிந்திருக்க நியாயமில்லை. எந்த வகுப்புப் புத்தகத்திலேயும் 'பராபரமே' என்று முடியும் பாடல் இல்லை. எனக்குமட்டும் பதில் சொல்லணும்னு ஆசை. எங்கம்மா அடிக்கடி 'பராபரமே, பராபரமேன்னு' சாமி முன்னே நின்னு பாடுவாங்க. ஒரு நாள், எங்க அப்பா கொடுத்த புத்தகம்னு ஒண்ணை வச்சி, பல பாடல் படித்து அழுது கொண்டிருந்தார்கள். அதில் 'பராபரமே' என்று முடியும் பாடல்களும் வந்தன. அதன் அட்டையைப் பார்த்தேன். அதில் ஒரு படம் அச்சிட்டிருந்தது. யாரோ மொட்டைச் சாமியார் ஒருத்தர் பத்மாசனத்தில் உட்கார்ந்து கண்மூடித் தியானம் செய்து கொண்டிருந்தார். அதற்குக் கீழே 'தாயுமான சுவாமிகள்' என்று எழுதியிருந்தது. "நீ! நீ!"...என்று சுட்டிக் கேட்டுக் கொண்டே வந்த வாரியார் சுட்டுவிரல் காட்டியதும், ஏதோ ஒரு தைரியத்தில் "தாயுமான சுவாமிகள்" என்று என் வாய் முணுமுணுத்தது.

"ஊம். பலே! சொல்லுடா. சரிதான்டா. நல்லாச் சொல்லு. ஓரத்திச் சொல்லு" என்று ஊக்கினுர்.

'தாயுமான சுவாமிகள்' என்று உரத்திச் சொன்னேன். உடனே தன் கழுத்திலிருந்த மாலையைக் கழட்டி என் கழுத்தில் போட்டுவிட்டுக் கைதட்டினுர். எல்லோரும் கைதட்டினுர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வெட்கமாக இருந்தது. வாரியாரைக் கும்பிட்டுவிட்டு மாலையைக்

கழட்டிக் கொடுத்தேன். கைகளால் சைகை செய்து என்னையே வைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டார்.

சொற்பொழிவு முடிந்து வீட்டுக்கு நானும் பாட்டியும் போனேம். பாட்டி பூரித்துப் போனுள். நான் அவளுக்கு உண்மையான பேரன் இல்லாவிட்டாலும், தன் சொந்தப் பேரன் பாராட்டுப் பெற்றதுபோல கூட நடந்து வந்தவங்க கிட்டே எல்லாம் மகிழ்ச்சியோடு என்னெப்பத்தி உரையாடிக்கிட்டு வந்தாங்க.

எனக்கென்னவோ அப்பவே அம்மாவைப் பார்க்கணும் போல் இருந்தது. உடனே ஓடிப்போய்ச் சொல்லவேண்டும் போல் இருந்தது. மாலையைக் கையில் ஏந்திக்கொண்டு வேகமாக நடந்தேன். எனக்காகத் தூங்காமல் விழித்துக் கொண்டு கதவைத் திறந்து வைத்துக்கொண்டு வாசற் படியில் தலையை வைத்தபடியே அம்மா ஏதோ படித்துக் கொண்டிருந்தார். 'அம்மா' என்று அழைத்தபடியே சென்று அவர் கழுத்தில் அந்த மாலையைப் போட்டேன். பாம்பை மிதித்ததுபோலத் துள்ளி எழுந்து, சடக்கென்று மாலையைக் கழற்றிவிட்டு, என்னை அணைத்துக்கொண்டு அழுதார்கள். அப்பா படத்தைக் காட்டி, அதற்குப் போட்டுக் கும்பிடச் சொன்னுர்கள். நான் அப்படியே செய்தேன்.

"என்னப்பா! அப்படியே இடிஞ்சு உட்கார்ந்துட்டியே! ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்க வேணும். சின்ன புள்ளைங்கள்ளாம் நேத்து ராத்திரியிலேயிருந்து தண்ணிகூடக் குடிக்காமே இருக்குதுங்களே. இருட்டிப்போனு லேட்டு வேறே வேணும்" என்று குப்புசாமி ரெட்டியார் என்னிடம் சொல்லிவிட்டு, அவரே காரியங்களைக் கவனிக்கப் போய் விட்டார். வந்துகொண்டிருந்த ஓரிருவர் சாவுபற்றி

விசாரித்ததைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு மீண்டும் திண்ணையில் உட்கார்ந்தேன்.

ஒருநாள் முழுநிலா. அப்பொ எனக்கு வயது ஐந்தாறு இருக்குமோ என்னவோ. வீட்டின் வாயிலுக்கு வெளியே இருந்த வேப்பமரத்தடியில் அம்மா காலைநீட்டி உட்கார்ந்திருக்காங்க. நான் அம்மா மடியில் படுத்தபடியே ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நிலா வேப்பமரத்து இலைகளின் இடைவெளியில் மேகங்களை எதிர்த்து ஓடுவதுபோலத் தெரிகிறது. ஆனாலும், எங்கும் போகாமல் எனக்கு முன்னேயேதான் இருக்கிறது. அப்படியே அம்மா முகத்தைப் பார்க்கிறேன். ஏதோ ஞாபகத்தில் என் தலையை வருடிக்கொடுத்தபடி எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கழுத்தைப் பார்க்கிறேன், "வெறிச்சென்று இருக்கிறது." பெரியம்மா சின்னம்மா கழுத்தில் எல்லாம் மஞ்சள்கயிறு பார்த்தது நினைப்பு வருகிறது. அதிலே பளபளன்னு தொங்கின காசு குண்டு எல்லாம் சின்னம்மா பெரியம்மா என்னைத் தூக்கிக் கொஞ்சியபோது பார்த்த நெனப்பு வருது. அம்மாவுக்கு மட்டும் ஏன் அது மாதிரி இல்லே; கழுத்து என்னவோ போல இருக்கேன்னு நெனைக்கிறேன்.

'ஏம்மா ஒங்கழுத்திலே சின்னம்மா பெரியம்மா மாதிரி கயிறு இல்லேன்னு......' தட்டுத் தடுமாறிக் கேட்டுடறேன். அம்மா 'ஆங்' என்று அழுதபடியே, என்னை அணைத்துக் கொள்ளுகிறார்.

தந்தையார் போயினார் தாயும் போனார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்;

என்ற பண்டாரத்தின் பாடல் என்னை இந்த உலகுக்குக் கொண்டு வருகிறது. எழுந்து சென்று உள்ளே சாத்தி வைத்திருக்கும் அம்மாவைப் பார்க்கிறேன். அந்த வெறுங் கழுத்து என்னென்னவோ நினைவுகளை என் இதயத்தில் எழுப்புகின்றது. மனைவியும் தங்கையும் எட்டிப் பார்க்கின்றனர். அவர்கள் கழுத்தில் தங்க நாணயம் மின்னுகிறது. 'ஒன்றுமில்லை' என்று கையால் சைகை செய்து விட்டு, வெளியே வந்து, 'இதோ வருகிறேன்' என்று குப்புசாமி ரெட்டியாரிடம் சொல்லிவிட்டுச் சிறிது தூரத்திலிருந்து மாந்தோப்பிற்குள் போய், பொங்கி வரும் ஆத்திரத்தை அடக்கமுடியாமல், வாய்விட்டு, "அம்மா அம்மா!" என்று அழுகிறேன். பிறகு நானே அடங்கி ஒரு மரத்தின் கீழ் உட்காருகிறேன்.

நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். இட்டலி சுட்டு விற்கும் லாபத்தில் நாள்தோறும் ஒரு ரூபா ரெண்டு ரூபா என்று அம்மா பணங்கொடுத்துப் பாங்கியில் போடச் சொல்லுவாங்க. ரூபாய் அறுநூறுக்குமேல் சேர்ந்திருந்தது. அப்பாவின் திதி வந்துகொண்டிருந்தது. அந்த நாளில் எப்படியும் அந்தப் பணத்தை எடுத்து அம்மாவுக்கு ஒரு தங்கச்சங்கிலி செய்து கழுத்தில் போட்டு விடவேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். திதிக்கு நான்கைந்து நாட்களுக்குமுன் அம்மாவிடம் என் அபிப்பிராயத்தைச் சொன்னேன். அம்மா சிரித்துக்கொண்டே உள்ளே போய்த் தங்கச் சங்கிலியோடு பிணைந்த கைக் கடிகாரம் ஒன்றைக் கொண்டுவந்து என் கையில் கட்டி அழகு பார்த்தார்கள். "ரொம்ப நாளா ஆசை. உன் நண்பன் சேகர் மாதிரி உனக்கும் போட்டுப் பார்க்கணும்னு ஆசை. அப்பா திதி அண்ணைக்குப் போட்டுக்கோ" என்று, கடிகாரத்தையும் சங்கிலியையும் வைத்துப் பூட்டி விட்டார். "இனிமே பணம் சேர்த்து நீங்க ஒரு தங்கச்

சங்கிலி வாங்கணும்; இல்லாட்டி நான் கடிகாரம் கட்டிக்கவே மாட்டேன்'' என்று கலங்கினேன். ''சரிடா! சரி! அப்படியே செய்வோம்'' என்று சொல்லிவிட்டு, இட்டலி மாவு அரைக்கப் போய்விட்டார்கள்.

நான் இண்டட்டர் மீடியட்டுத் தேர்வு ஊரீசுக் கல்லூரியில் எழுதிக்கொண்டிருந்தேன். தமிழ்த்தேர்வு முடிந்து வீட்டுக்கு வந்தேன். தேர்வு நன்றாக எழுதிய மகிழ்ச்சியை அம்மாவுக்குச் சொல்லலாம் என்று உள்ளே போனேன். அங்கே எங்க சின்னம்மாவும் அம்மாவும் ஏதோ பேசிக் கொண்டிருந்தாங்க. என்னைக் கண்டதும், சித்தியே, ''காலையிலே தாண்டா திருச்சி வண்டியிலெ வந்தேன். அதுக்குள்ளே நீ தேர்வு எழுதப் போயிட்டே. நல்லா எழுதினியா—அக்கா எத்தனை நாள் தான் இப்படியே குடக்கல்லையும் இட்லிப்பானையையும் கட்டிக் கிட்டு அழுகிறது. சீக்கிரம் ஒரு வேலைக்குப் போய்க் காப்பாத்த வேண்டாமா'' என்று என்னென்னவோ புத்திமதி சொல்ல ஆரம்பித்து விட்டாங்க. நான் கிடு கிடுன்னு சாப்பிட்டுவிட்டு மாந்தோப்புக்குப் படிக்கப் போய்விட்டேன்.

மாலையில் திரும்பிவந்தபோது சின்னம்மா ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாங்க. தேர்வு இருந்ததால் நான் ஸ்டேஷனுக்குப் போகவில்லை. அம்மா கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார்கள். விட்டுவிட்டு வந்தபிறகு வாசற்படியிலேயே விளக்கு ஏற்றி வைத்துப் படித்துக் கொண்டிருந்த என்னிடம், ''அந்தப் பணத்தைச் சித்தி கேட்டா. உன் தங்கச்சிக்குக் கல்யாணமாம். மாப்பிள்ளை எஞ்சினியராம். பத்துப் பவுன் கேட்டாங்களாம். தன் கையிலிருந்தது எல்லாம் ஆறு பவுன்தான் தேறிச்சாம். கோவிச்சுக்காதே, அடுத்த வருசமே தருவதாகச் சொல்லிக்

கண் கலங்கினை. ஒன்னெ கேட்காமே கொடுத்துட்டேன் என்று நான் கவலைப்படுவேனோ என்றுதான் கவலைப் பட்டார்கள்." நான் ஒன்றும் பேசாமல் அந்த வெறுங் கழுத்தைப் பார்த்துவிட்டுத் தலைகுனிந்து கொண்டேன்.

அதற்குள் குப்புசாமி ரெட்டியார் அனுப்பிய ஆள் தேடிக்கொண்டு வந்துவிட்டான். "ஊரிலிருந்து எல்லாரும் வந்துட்டாங்களாம். தங்களை எங்கே காணும்னு கேட்கிறுங்களாம். ரெட்டியார் இங்கே போனிங்கன்னு சொல்லி என்னெ அனுப்பினரு" என்று அழைத்தான். கண்களைத் துடைத்துக்கொண்டு அவன் பின்னே போனேன். சித்தி, பெரியம்மா எல்லோரும் என்னைக் கட்டிக்கொண்டு அழுதார்கள். நான் அழுதேன். பாடையெல்லாம் தயாராகிவிட்டது. தண்ணீர்க் குடங்கள் ஐந்து இருந்தன. என் கையில் ஒரு குடத்தை எடுத்து ரெட்டியார் கொடுத்தார். மற்றவர்களையும் எடுத்துக் கொள்ளச் சொன்னர். தெருமுனையிலிருந்த குளத்தை நோக்கிப் புறப்பட்டோம். 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' என்ற திருவாசகத்தைப் பாடிக்கொண்டு பண்டாரம் முன்னே போனர். பாட்டைக் கேட்டுக் கொண்டே தொடர்ந்த என்னைப் பழைய நினைவுகள் தொடர்ந்தன.

கற்பகத்தைப் பார்த்து அம்மாதான் எனக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். பெயர்தான் கற்பகமே ஒழிய என் மனைவி எதையும் யாருக்கும் கொடுக்க மாட்டாள். அக்கா தங்கைக்குக்கூடக் கொடுக்கமாட்டாள். இந்த வகையில் அம்மாவுக்கு நேர் எதிர். அவள் தான் சரி; அம்மா மாதிரி ஏமாறக் கூடாது என்றே எனக்கும் திருமணமான புதிதில் தோன்றியது. ஆனல் போகப்போக அவளுக்கும் அம்மாவுக்கும் பிளவு அதிகமாவதைக் காணக்

காண மனம் சங்கடப்பட்டது. இடம் மாறி, வேலை காரணமாக ராணிப்பேட்டைக்கு நல்ல காலமாகப் போய் விட்டது, அந்தப் பிளவு முற்றிப் பகையாகாமல் காப் பாற்றியது. கிராமத்திலிருந்த பெரியம்மாவின் கடைசிப் பெண் வேலூரில் இண்ட்டரில் சேர்ந்து படிக்கவந்தாள். அவளுக்குத் துணையாக அம்மா அங்கே தங்கியது பொருத்த மாகவும் போய்விட்டது.

கொஞ்சம் கொஞ்சமாகப் பாங்கியில் பணம் சேர்த்து வரலானேன். கற்பகமும் துணைசெய்தாள். ஆயிரம் ரூபாய் சேர்ந்தவுடன் என் எண்ணத்தை வெளியிட்டேன். முதலில் ஒன்றும் கூறுது, 'சரி, செய்யுங்கள். அப்புறம் சேர்க்கிற பணத்தில் எனக்கு ஒரு நெக்லெசு வாங்கித் தரணும்' என்று சொல்லிச் சத்தியம் வாங்கிக் கொண்ட பிறகே சம்மதித்தாள். அப்பா திதிக்கு முன் இரண்டரை பவுனில் ஒரு மாங்காய்ச் சங்கிலி செய்துகொண்டு, நானும் கற்பகமும் போய், அம்மாவுக்கு அளித்தோம். "இந்த வயசிலே எனக்கு எதுக்குடா இதெல்லாம்னு" அம்மா சொல்லி மறுத்தாங்க. கலங்கிய என் கண்களைப் பார்த்து அணிந்து கொண்டார்கள். ஒரு வாரம் தங்கியிருந்தோம். லீவு முடிந்து புறப்படும்போது அந்தச் சங்கிலியைக் கழற்றி மருமகள் கழுத்திலேயே போட்டுவிட்டு, "இங்கே இப்போ எல்லாம் திருட்டுப் பயமா இருக்கு. நான் ஒண்டிக்கட்டை. உன் தங்கச்சி சின்னஞ் சிறுசு. வேண்டாண்டா. கற்பகமே போட்டுக்கிடட்டும்" என்றார்கள். நான் கற்பகத்தைச் சந்தேகத்தோடு பார்த்தேன்.

"என்னை ஏன் அப்படிப் பார்க்கிறிங்க. எனக்கு ஒண்ணும் ஒங்க அம்மா சங்கிலி வேண்டாம். நேத்து தினத்தந்தியிலே வந்திருந்திச்சு. 'பாட்டியின் கழுத்துச் சங்கிலி திருட்டு. பாட்டி உயிர் ஊசலாடுகிறது. கழுத்தை நெரித்துவிட்டுத்

திருடன் தப்பி ஓடிவிட்டான்னு இருந்தது; அத்தையிடம் காட்டினேன்; அவ்வளவுதான். அதுக்கு நான் என்ன செய்வேன்" என்று அங்கலாய்த்தாள். அம்மாவுக்கு அந்தச் சங்கிலியும் ஒட்டவில்லை.

அம்மாவைக் குளிப்பாட்டினார்கள். தண்ணீர் மொண்டு மொண்டு ஊற்றினேன். எண்ணெய் தேய்த்து விட்டு அழுக்கேறிய என் கால்களைச் சீயக்காய் விட்டு அழுத்தி அழுத்தித் தேய்த்துக்கொண்டே குனிந்திருக்கும் அம்மாவின் தோற்றமும், குனிந்திருக்கும்போது முதுகுப் புறம் தோன்றும் அந்த வெறுங்கழுத்தும் தோன்றியது. வாய்விட்டுக் கதறி அழுதேன். " 'உம் உம்' எடுங்கள். நேரமாகிறது" என்று கூச்சலிட்டனர். அம்மாவைப் பாடையில் எடுத்து வைத்தனர். மனைவி, சித்தி, பெரியம்மா சுற்றிவந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதார்கள். அவர்கள் கழுத்து நிறைய தாலிச் சரடும், இரட்டைவடச் சங்கிலியும், அட்டிகையும், நெக்லெசும் மின்னின. என் அம்மாவோ, வெறுங் கழுத்துடன், தன் கடைசி ஊர்வலத்தில் ஏறிப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்!

# சித்தூர் சாமியார்

"எங்கங்க போயிருந்திங்க ரெட்டியாரே, சென்னைக்கா?" என்ற பழகிய குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். "சாமியார் போயிடுவார்போல இருக்கு. இப்போதான் மருத்துவமனையிலிருந்து வர்றேன். அஞ்சத்தக்க நோயாளிகள் அறிக்கையில் அவர் பெயரையும் சேர்த்துட்டாங்க. தனியா திரைபோட்டுத் தடுத்துக் கவனிக்கிறுங்க" என்று, சென்னைப்பட்டினம் ஆறுமணி பேருந்துவிட்டு இறங்கி வீட்டுக்கு வந்துகொண்டிருந்த என்னை, இராமர் கோயில் கிட்டே சந்தித்துச் சொன்னுர், மாணிக்கம் செட்டியார்.

"என்ன சங்கதி? நேற்றுக்கூட நல்லா இருந்தாரே!" என்று கலவரத்தோடு கேட்டேன்.

"காலையிலே இரண்டு மூன்றுதரம் வயிற்றுப்போக்கு ஆகியிருக்கு. யாருக்கும் சொல்லலே. அப்புறம் இரண்டு மூணுதரம் வாந்தி எடுத்திருக்காரு. அப்படியே மயங்கி விழுந்திட்டார். அப்புறம் செய்தி தெரிஞ்சி சீவகாருண்ய சபை கணக்குப்பிள்ளை எனக்குச் சொல்லியனுப்பிச்சாரு. மருத்துவமனையில் சேர்ப்பதற்குள்ளே மத்தியானம் ஆகி

திருடன் தப்பி ஓடிவிட்டான்னு இருந்தது; அத்தையிடம் காட்டினேன்; அவ்வளவுதான். அதுக்கு நான் என்ன செய்வேன்'' என்று அங்கலாய்த்தாள். அம்மாவுக்கு அந்தச் சங்கிலியும் ஒட்டவில்லை.

அம்மாவைக் குளிப்பாட்டினார்கள். தண்ணீர் மொண்டு மொண்டு ஊற்றினேன். எண்ணெய் தேய்த்து விட்டு அழுக்கேறிய என் கால்களைச் சீயக்காய் விட்டு அழுத்தி அழுத்தித் தேய்த்துக்கொண்டே குனிந்திருக்கும் அம்மாவின் தோற்றமும், குனிந்திருக்கும்போது முதுகுப் புறம் தோன்றும் அந்த வெறுங்கழுத்தும் தோன்றியது. வாய்விட்டுக் கதறி அழுதேன். '' 'உம் உம்' எடுங்கள். நேரமாகிறது'' என்று கூச்சலிட்டனர். அம்மாவைப் பாடையில் எடுத்து வைத்தனர். மனைவி, சித்தி, பெரியம்மா சுற்றிவந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதார்கள். அவர்கள் கழுத்து நிறைய தாலிச் சரடும், இரட்டைவடச் சங்கிலியும், அட்டிகையும், நெக்லெசும் மின்னின. என் அம்மாவோ, வெறுங் கழுத்துடன், தன் கடைசி ஊர்வலத்தில் ஏறிப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்!

# சித்தூர் சாமியார்

"எங்கங்க போயிருந்திங்க ரெட்டியாரே, சென்னைக்கா?" என்ற பழகிய குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். "சாமியார் போயிடுவார்போல இருக்கு. இப்போதான் மருத்துவமனையிலிருந்து வர்றேன். அஞ்சத்தக்க நோயாளி கள் அறிக்கையில் அவர் பெயரையும் சேர்த்துட்டாங்க. தனியா திரைபோட்டுத் தடுத்துக் கவனிக்கிறாங்க" என்று, சென்னைப்பட்டினம் ஆறுமணி பேருந்துவிட்டு இறங்கி வீட்டுக்கு வந்துகொண்டிருந்த என்னை, இராமர் கோயில் கிட்டே சந்தித்துச் சொன்னார், மாணிக்கம் செட்டியார்.

"என்ன சங்கதி? நேற்றுக்கூட நல்லா இருந்தாரே!" என்று கலவரத்தோடு கேட்டேன்.

"காலையிலே இரண்டு மூன்று தரம் வயிற்றுப்போக்கு ஆகியிருக்கு. யாருக்கும் சொல்லலே. அப்புறம் இரண்டு மூணு தரம் வாந்தி எடுத்திருக்காரு. அப்படியே மயங்கி விழுந்திட்டார். அப்புறம் செய்தி தெரிஞ்சி சீவகாருண்ய சபை கணக்குப்பிள்ளை எனக்குச் சொல்லியனுப்பிச்சாரு. மருத்துவமனையில் சேர்ப்பதற்குள்ளே மத்தியானம் ஆகி

விட்டது. நம்ப டாக்டர் சாம்பசிவம்தான் நல்லா கவனிச்சுக்கிருரு. 'என்னமோ ரெட்டியாரே, சாமி எங்கே பொறந்துதோ, எங்கே வளர்ந்துதோ, இங்கே சமாதி ஆயிடும்போல இருக்காங்களுரு?' எல்லோரும் போய்ப் பார்த்திட்டு வந்துட்டாங்க. ஒங்களேத்தான் காணும்" என்று கண்கலங்கினுர் செட்டியார்.

நானும் ஏதோ ஒரு தந்தையை—தெய்வத்தை இழப்பது போன்ற உணர்ச்சி மிகுதியால் கலங்கிப் போனேன்.

சாமிக்கும் எனக்கும் முன்னே எந்தப் பிறவியில் என்ன பந்தமோ தெரியாது. இந்தப் பிறவியில் அப்படியொரு பற்று ஏற்பட்டுவிட்டது. சாமி இல்லாது போயிருந்தால் நான் இருபது வருடங்களுக்கு முன்னேயே கங்கை வெள்ளத்தில் கலந்து போயிருப்பேன். அப்பா - என்ன பலம், என்ன தீரம் இந்தச் சாமிக்கு! சாகத் துணிந்துதான் மெல்லக் குளிப்பதுபோல இறங்கித் தண்ணீர் ஓடும் வெள்ளத்தில் நழுவினேன். ஆனல் தண்ணீரில் ஒரு முழுக்கு முழுகி ஒருவாய்த் தண்ணீர் குடித்தபோது, என்னை அறியாமல் கரைக்கு வரப் போராடினேன். அங்கேதான் சாமி பாய்ந்து என் சிண்டைப் பிடித்து இழுத்துக் கரை சேர்த்துச்சு. அது மட்டும் இல்லே. இந்த ஊர் சீவகாருண்ய சபைக்கு வந்து நிலையாகத் தங்கின பிறகு, என் பூர்வ கோத்திரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, தன் சொத்தை எல்லாம் என் பேரிலே எழுதி, ஒரு ரெட்டியார் சாதி பெண்ணையும் எனக்குத் திருமணம் செய்துவைத்து, என்னைக் குடியும் குடித்தனமும் ஆக்கிய அப்பனும் அவர்தான்.

"என்ன ரெட்டியாரே! அப்படியே நின்னுட்டிங்க. சாமியாருக்கு இதற்குள்ளே ஒருமுறை பிரக்ஞை வந்தது.

அப்பொ உங்களைத்தான் மெல்லக் கேட்டார். உடனே போங்க" என்றார்.

பக்கத்துப் பிள்ளையார் கோயில் சந்தில் திரும்பி, வீட்டில் சாமான்களை வைத்துவிட்டு அவசர அவசரமாகப் புறப்பட்டேன். "ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் போங்க. நானும் போய்ப் பார்த்துட்டு வர்ரேன்; ராத்திரிக்குக்கூட யாரும் இருக்கமாட்டாங்க போலிருக்கு" என்று தயாராகச் சுட்டு வைத்திருந்த இட்டலியைக் கொண்டுவந்து முன்னே வைத்தாள் மனைவி வள்ளியம்மை. சென்னையில் மத்தியானம் சாப்பிட்டதுதான்—வரும்போது நல்ல பசி. இப்போது மறந்துபோய்விட்டது. லபக் லபக் என்று நான்கு வாய் போட்டுக்கொண்டேன். அதற்குள் காப்பி ஆற்றிக் கொண்டு பதமாக எடுத்துவந்தாள். வாங்கி வாயில் ஊற்றிக் கொண்டு மருத்துவமனைக்குப் போனேன். அதற்குள் மணி ஏழாகிவிட்டது. சாமியார் காலம் முடியப்போகிறது என்று எண்ணி, சைவசித்தாந்த வகுப்புக்கு வந்த சீடர்கள், ஊர் மக்கள் சிலர் அங்குக் கூடியிருந்தனர். என்னைக் கண்டதும் மரியாதையுடனும் கவலையுடனும் ஒதுங்கி வழிவிட்டனர்.

அருகில் போய் நின்றேன். கங்கையாற்றில் என்னைத் தூக்கித் தாங்கிக் கரைசேர்த்த அந்தக் கைகள் சோர்ந்து கிடந்தன. தங்கக் கம்பிபோலப் பளபளக்கும் அந்த உடம்பு பூவரசம் பழுப்புப்போலப் பொலிவிழந்துவிட்டது. வைரக்கல்போல் ஊடுருவிப்பார்க்கும் அவர் கண்கள் மூடிக் கிடந்தன. பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையை மேல்துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு அடக்கினேன். சிறிது சிறிதாகக் கூட்டம் கரைந்தது. இரவு பத்து மணிக்குப் பெரும்பாலும் எல்லாரும் போய்விட்டார்கள். வள்ளியம்மை பக்கத்து வீட்டுச் சிவகாமி பாட்டியோடு வந்து பார்த்துவிட்டுத் தான் பாட்டியோடு வீட்டில்

இருப்பதாகக் கூறிவிட்டு, என்னைச் சாமிக்குத் துணையாக இருக்கச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். 'குளுகோஸ் இறங்கவில்லை என்றால் எனக்குத் தெரிவியுங்க. அதோ அந்த கேசுவாலிட்டிப் பக்கத்து ரூம்லே இருப்பேன்' என்று ராத்திரி டியூடி டாக்டரும் போயிட்டார்—பக்கத்தில் கிடந்த பலகையில் உட்கார்ந்து அவரையும், அவரோடு ஏற்பட்ட என் வாழ்க்கைப் பந்தத்தையும், எல்லாச் சொத்தையும் என் பேரில் எழுதி வைச்சிட்டு, தான் நாளுக்கு ஒரு சீடர் வீட்டிலே ஒரு வேளை சோறு எடுத்துக் கொண்டு, எளிமையாக வாழும் அந்தத் தூய வாழ்வையும் நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தேன். எங்கெங்கோ சுற்றித்திரிந்த சாமி, என்னவோ இந்த ஊரிலிருக்கிற போடிகொண்டா மலையையும் நீவா நதியையும் பார்த்து இங்கே லயிச்சுட்டதை நினைத்துப் பார்த்தேன். 'எங்கே பிறந்தாலும் எங்கே திரிந்தாலும் ஒரு இடத்திலே சங்கமமாக வேண்டியதுதானே தம்பி!' என்று சுவாமி அடிக்கடி சொல்வதை நினைத்துக் கொண்டேன்.

''அவள் அவன் அது என அவை மூவினைமையின்'—கணீர் என்று துவங்கும் சித்தாந்த வகுப்புக்களும், அந்த மெய் கண்டார் கண்ட சூத்திரங்களுக்கு இவர்தரும் வாழ்க்கை அனுபவ விளக்கங்களும் அலையலையாக என் நெஞ்சில் எழுந்தெழுந்து அடங்கின. அந்த முகத்தை ஏக்கத்தோடு பார்த்தேன். 'தம்பி! கடவுள் எதுவும் நிலைத்திருக்கணும்னு விரும்பவில்லை. எல்லாம் ஒடுங்கிடணும்—தனக்குள்ளே ஒடுங்கிடணும்னு ஆசைப்படுகிறான். கங்கையாற்றுச் சுழற்சி உன்னைத் தன் வயிற்றுக்குள்ளே ஒடுக்கிக்கப் பாத்துச்சே. அப்படியே தனக்குள்ளே எல்லாத்தையும் அண்டாதி அண்டங்களை எல்லாம் ஒடுக்கிக்கணும்னு விரும்புகிறான். அவன் விருப்பத்திற்கு எதிரா நாம் புகழ், பொருள், வீடு வாசல்னு சேர்த்து நிலைக்கும்னு பார்க்கிறோம். அது

அஞ்ஞானம். அந்த ஆசையை விட்டுடு—நம்ப சீடப் புள்ளேங்களுக்கும் சொல்லிடு'' என்று சுடுகாட்டிலுள்ள யாருடைய சமாதி ஒன்றையோ காட்டி, அவர் அடிக்கடி சொன்னதை நினைத்து மனத்துக்குள் அழுதேன். அழுவதும் சாமிக்குப் பிடிக்காது. ''கொடுத்த பொருளைக் கேட்கும் பொழுது நல்லவன் யாராவது அழுதுகிட்டுத் திருப்பிக் கொடுப்பாஞ? அவன் கொடுத்த உயிர் - அவன் கொடுத்த உடம்பு. இப்பொ, போதும் என்று எடுத்துக்கிருன். அதுக்கு அழலாமா? அப்படி அழுவது பாவம்—நாத்திகம். கடவுளை எதிர்க்கிறதாகும்'' என்று செத்துப் போகிறவர்களைப் பார்த்து அழுபவர்களைக் காட்டி; எனக்கு அவர் கூறிய அறிவுரைகள் ஒன்றும் எனக்கு அப்போது கைகொடுக்க வில்லை. மெல்ல அழுதுகொண்டிருந்தேன்.

பணிப்பெண் ஒருத்தி வந்து குளுகோஸ் சரியாக இறங்குகிறதா என்று சரிபார்த்துவிட்டுச் சிறிதுநேரம் காத்திருந்து வேறொரு பாட்டில் மாற்றிவைத்துவிட்டு நாடி பார்த்து ஏதோ குறித்துவிட்டு, 'பக்கத்திலேயே இருங்கோ-சாமி இப்படி அப்படி புரண்டால் குளுகோஸ் டியூப் நழுவிடும்' என்று என்னை எச்சரித்துவிட்டுப் போய் விட்டாள்.

ஊர் ஊராய்ச் சுற்றிக்கொண்டு வந்த சாமி திருத் தணியில் ஊன்றியது நினைவுக்கு வந்தது.

திருத்தணிகை மலைமேலே குமார தேவன்
திருக்கொலு வீற்றிருக்குமதன் பொருளைக் கேளீர்!
திருத்தணிகை யென்பதிங்கு பொறுமை யின்பேர்,
செந்தமிழ்கண் டீர், பகுதி; 'தணி' யெனுஞ்சொல்,
பொருத்தமுறுந் தணிகையினல் புலமை சேரும்
'பொறுத்தவரே பூமியினை ஆள்வார்' என்னும்
அருத்தமிக்க பழமொழியும் தமிழி லுண்டாம்,
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்.

என்ற பாரதியாரின் சுயசரிதைப் பாடலைச் சொல்லிச் சொல்லி, சாமி கண்மூடித் தியானம் செய்வதைப் பார்த்து அங்கேயே லயிச்சுடும்னு நினைத்தேன். ஆனா ஒரு சமயம் கார்த்திகை உற்சவத்தில் சாமி நிகழ்த்திய சித்தாந்தச் சொற்பொழிவைக் கேட்டு, அங்கே வந்திருந்த சித்தூர் மோகனவேலு செட்டியார், இங்கே அழைத்துவந்து ராஜோபசாரம் செய்து, சித்தாந்தசபை நிறுவி—சாமிகள் தொடர்ந்து வகுப்பு நடத்த ஏற்பாடு செய்துவிட்டார். சித்தாந்த வகுப்பு முடிஞ்சதும் திருவாசகம், பிறகு பெரிய புராணம், பிறகு சித்தாந்த வகுப்பு. இப்படிச் செட்டியார் போட்ட திட்டங்களிலிருந்து விடுபடமுடியாமல் தானும் இங்கேயே தங்கிட்டாரு. 'தம்பி! கடவுள் என்னை இங்கேயே இருக்கணும்னு நெனைச்சுக்கிருன்போல இருக்கு. அதான் மோகனவேலு செட்டியார் இப்படி இழுத்து விட்டுட்டாரு. சரி அப்பொ-நீயும் ஒரு கட்டுப் போட்டுக்கோ' என்று சொல்லித்தான் இந்த ஊரிலேயே எனக்குத் திருமணம் செய்து வைத்தது. என் நினைவு அலைகள் வந்து கொண்டிருந்தன.

சாமி மெல்ல அசைந்தது தெரிந்தது. அருகில் போய் அசையாமல் பிடித்துக்கொண்டேன். வாய் ஏதோ முணு முணுத்தது. உற்றுக் கேட்டேன். ஏதோ பெண் பெயர் போல் தோன்றியது. சரியாக விளங்கவில்லை. அதன் பின் மிக நெருக்கமாக அமர்ந்து கொண்டு கையைப் பிடித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரத்தில் மறுபடியும் சாமியின் உடம்பு அசைந்தது. கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். உதடுகள் துடித்தன. "சுந்தரி! சுந்தரி" என்று இருமுறை உச்சரித்து விட்டு நின்றுவிட்டன. சாமிக்கு அந்திம காலம் வந்து விட்டது என்று நினைத்துக் கொண்டேன். தேம்பித் தேம்பி அழுதேன். மெல்ல நர்சைக் கூப்பிட்டு, "எனக்குப்

பயமாக இருக்கிறது. டாக்டரைக் கூப்பிடும்மா" என்றேன் டாக்டர் வந்து பார்த்தார். "பயம் இல்லே. டெம்பரேச்சர் கொஞ்சம் இருக்கு. குளுகோஸ் போதும்" என்று சொல்லி ஒரு ஊசிபோட்டுவிட்டு, "நீங்க கொஞ்சம் தூங்கலாம். சாமியாரும் தூங்குவாரு" என்று சொல்லி, பக்கத்திலே யிருந்த இன்னும் ஓரிரு நோயாளிகளைப் பார்த்துவிட்டுப் போய்விட்டார். நானும் தூங்கப் போனேன்.

காலையில், "தம்பி! டேய் தம்பி! எழுந்திருடா" என்று என்னைச் சாமியார் எழுப்பினார். நான் திடுக்கிட்டு எழுந்து திருதிரு என்று விழித்தேன். "இன்னும் இந்தக் கட்டைக்கு வேலை இருக்குடா. அது முடிகிறவரை ஒன்றும் போகாது" என்று சொல்லிச் சிரித்தார். மீண்டும் வைரமணிகள் ஜொலிக்கத் துவங்கிவிட்டன. சித்தாந்த வகுப்புக்கள் எப்போதும் போலத் துவங்கிவிட்டன. எனக்கு மட்டும் அந்தச் 'சுந்தரி' என்ற பெயர் நெஞ்சில் உறுத்திக்கொண்டே இருந்தது. 'நம்மைப்போல் சாமியும் காதல்லே ஏமாந்து போச்சோ! பாவம்! யார் அந்தச் சுந்தரி? அம்மாவாக இருக்க முடியாது. தங்கச்சியா இருக்குமோ? பழகிப் பார்த்ததில் வித்துவான் படிச்சி வாத்தியாரா இருந்தமாதிரி தெரியுது. யாராவது அவர் மனதுக்குப் பிடித்த மாணவி பெயராக இருக்குமோ?' என்று சந்தேகம் அடிக்கடி மனத்தைக் கிள்ளத் துவங்கியது. அடிக்கடி சாமி அருகில், இதை நினைத்துக் கொண்டு, சூழ்நிலையை மறந்து நிற்பது கண்டு, ஒருநாள் சாயுங்காலம், "தம்பி! இப்பொ அடிக்கடி என்னவோபோல் ஆயிடுறியே! என்ன சேதி? ஏதாவது குடும்பக் கவலையா. சொல்லு" என்று ஒரு நாள், யாரு மில்லாதபோது, அன்போடு சீவகாருண்ய சபையில் கேட்டார்.

"ஆமாம். நீங்க உடம்பு சரியில்லாமே மருத்துவ மனையில் இருந்த அன்னிக்கு ராத்திரி, யாரோ சுந்தரின்னு

உளறிவிங்க''......என்று துவங்குவதற்குள், தன் கையால் வாயைப் பொத்தி, ''ஒன்றும் பேசாதே'' என்று சைகை செய்துவிட்டு, ஏதோ சிந்தனையில் சிறிது நேரம் மூழ்கிப் போனார்.

பிறகு சைகை காட்டித் தன்னைத் தொடரச் சொல்லி விட்டு மேற்குநோக்கி நடந்தார். நான் பின் தொடர்ந் தேன். மருத்துவமனையை வலமாக வைத்துக் கடந்துபோய், அருகிலிருந்த சிறுசாலை வழியே போய், அருகிலிருந்த தென்னந் தோப்பைச் சற்று நின்று பார்த்தார். பின் மறுபடியும் தொடர்ந்து நீவா நதியைத் தாண்டி, அங்கி ருந்த ஏரிக்கரையை அடைந்து, அதன் அருகிலிருந்த பாறைக் கல்லின்மேல் மேற்கு நோக்கியவாறு போய் அமர்ந் தார். நான்சென்று பக்கத்தில் நின்றேன். 'உட்கார்' என்று சைகை செய்துவிட்டு, மேற்கு வானத்தைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். கதிரவன் மறைந்துகொண் டிருந்தான். ஏரிக்கரையிலிருந்து கொக்குக் கூட்டங்கள் மேலெழுந்து பறந்து தோப்பை நோக்கிப் போயின. நீர்க்கோழி ஒன்று மூழ்கி மூழ்கிச் சிறிது நேரம் போய் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மறுபடியும் ஏரியில் மூழ்கியது. எங்கோ போய்க்கொண்டிருந்த வண்டிச் சக்கரம் கற்களின்மேல் ஏறிஏறி இறங்கும் கட்கடா ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. கீழ்த்திசையில் செக்கச்செவேல் என்று வட்ட நிலா எழுந்தது.

''அவள் அப்படித்தான். குழந்தையிலேயிருந்து அப்படித்தான். தெரிந்துதான் மணஞ்செய்து கொண் டேன். பொறுமையாக வாழலாம், வாழமுடியும் என்ற தன்னம்பிக்கையுடன் மணம் செய்து கொண்டேன். அந்தச் சம்பவம் மட்டும் நிகழாமலிருந்தால், இப்போது பல பேரன் பேத்திகளைப் பெற்று நான் தாத்தாவாகிப்

போயிருப்பேன்'...என்று துவங்கினார். நான் மௌனமாக அவர்க்கு அருகில் இருந்தேன். என்னைப் பார்க்காமல் வானத்தைப் பார்த்தபடியே அவர் பேசிக்கொண்டு போனார்.

அவளுக்கு நான்கைந்து வயதிருக்கும். நான் பட்டம் விட்டுக்கொண்டிருந்தேன். "அ த் த ா ன் அத்தான்" எனக்கும் கொஞ்சம் குடு!" என்று கெஞ்சினாள். "சரி கொஞ்சம் நேரம்தான்; உடனே கொடுத்திடனும்"னு சொல்லிக் கொடுத்தேன். காற்று வேகமாக அடித்தது. ஓ! ஓ! என்று சிரித்துக்கொண்டே கையில் பிடித்திருந்த நூலை விட்டுவிட்டாள். பின்னாலேயே ஓடினேன். பிடிக்க முடியவில்லை. பட்டம் பறந்துபோய் ஏரியில் விழுந்து விட்டது. திரும்பி வந்தேன். சுந்தரி அங்கேயே நின்று கொண்டிருந்தாள். எனக்குக் கோபம் தாங்கவில்லை. "போடி போ குரங்கு" என்று திட்டினேன்.

"உம். உன் பட்டம்ன்னுதானே திட்டுறே. நேத்துகூட நான் காலணா பட்டம் வாங்கி இப்படித்தான் காத்துலே விட்டுட்டேன். யாரும் திட்டுலே. ஓம்பட்டம். ஓம்பட்டம். திட்டு திட்டு" என்று சொல்லி, அழுதுகொண்டே போய் விட்டாள்.

சாகும்போது என் தந்தையார் சொன்னார் என்று சொல்லி, நோயில் கிடந்த என் அம்மா, சுந்தரியிடம் என்னை ஒப்படைத்துவிட்டுக் கண்மூடிக் கொண்டாள்.

திருமணமாகி ஒரு வருடம் ஆகியிருக்கும். அவள் கைக்குழந்தையோடு தன் தாய் வீட்டிலிருந்து அப்போது தான் வந்திருந்தாள். அதுவரை எனக்குச் சோறு பொங்கிப் போட என் பாட்டி ஊரிலிருந்து வந்து வீட்டில் தங்கியிருந் தார். குழந்தையோடு வந்த உடனேயே அந்தப்

பாட்டியைக் கண்டபடி திட்டி முறைமுறைத்து விரட்டி விட்டுவிட்டாள். நான் மாதச் சம்பளம் வாங்கினதும் ஒரு நல்ல புடவை எடுத்துக் கொடுத்து அனுப்பலாமென்றிருந் தேன். அதற்குள் பாட்டி அழுத கண்ணும் சிந்திய மூக்கு மாகப் புறப்பட்டு விட்டாள். என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்பா இறந்தபோது, அம்மாவுக்கு மாமா எடுத்துக்கொடுத்த பழைய பட்டுப்புடவை ஒன்று இருந்தது. அதை எடுத்துப் பாட்டிக்குக் கொடுத்து வண்டி ஏற்றிவிட்டு வீட்டுக்குள் அடி எடுத்து வைத்தேன். உள்ளே பாத்திரங்கள் எல்லாம் தடதட என்று உருண்டன. எவர்சில்வர் டம்ளர்கள் படீல்படால் என்று இப்படியும் அப்படியும் விழுந்தன. அடி எடுத்துவைத்த நான் கீழிறங்கி நேரே நூல்நிலையத்திற்குப் போய்க் கொஞ்ச நேரம் கழித்து வந்தேன். வாயிற்படியிலேயே உட்கார்ந் திருந்தவள், 'ஒங்க சொத்து நீங்கள் ஒங்க விருப்பப்படி செய்யலாம்' என்று உதட்டைக் கோணல் காட்டிவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டாள். அப்புறம் ஒருநாள் பால் பொங்கி வழிந்து சுடுநாற்றம் வீசியது. ''ஏண்டி சுந்தரி! எத்தனை நாளாகச் சொல்றேன். பெரிய பாத்திரத்திலே இட்டுக் காய்ச்சு. இல்லாட்டிப் பக்கத்திலே இருந்து பார்த்துக்கோன்னு. எப்பப் பார்த்தாலும் அந்தச் சின்ன பாத்திரத்திலே கழுத்தளவு பாலை ஊத்திக் காய்ச்சி இப்படிப் பாழாக்குறியே. ஒருநாள்கூட அம்மா இப்படிப் பாழாக்கினதை நான் பார்த்ததே இல்லை'' என்று கடிந்து கொண்டேன்.

இப்படியே சிலநாட்கள் தொடர்ந்து பால் பாழா கிறது. காசுபோவது ஒருபுறம் இருக்கட்டும். பொறுப்பு இல்லாமல், புத்தி இல்லாமல், இப்படி இயற்கைப் பொருளைப் பாழாக்குவதைப் பார்த்துக் கோபம்கோபமாக வந்தது. கழுதை எக்கேடோ கெட்டுப் போகட்டும். தினம் நாலஞ்

சம்பாதிக்கவில்லை என்று எண்ணிக்கொள்ளலாம் என்று எண்ணி, மனதை அடக்கிக் கொள்ளத்தான் பார்த்தேன். ஆனால் என் குருநாதர் அடிக்கடி சொன்ன அந்தச் சொற்கள் எனக்கு வேகம் உண்டாக்கின. 'இந்த உலகில் எந்தப் பொருளையும் எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும் பாழாக்கக் கூடாது; அழிக்கக் கூடாது. ஒரு குவளை தண்ணியைக்கூட வீணே ஊற்றக் கூடாது. அது எளிதாகக் கிடைக்கலாம். ஆனால் இறைவன் தந்தது. பயன்படுத்த உரிமை உண்டே ஒழிய, பாழாக்க உரிமை இல்லை' என்று சொல்லி, அடிக்கடி விளக்கிக் கூறியது என் உடம்பில் ஊறிவிட்டதால், கோபத்தோடு அன்று அடுப்பங் கரைக்குப்போய், 'பளார்' என்று கன்னத்தில் ஒன்று கொடுத்தேன்.

"ஓகோ ஒங்க சொத்தைப் பாழாக்கத்தான் நான் வந்தேனுக்கும். ஒங்க அம்மாவையே கட்டிக்கிட்டு இருந்திருக்கலாம். ஒன்றும் பாழாக்க மாட்டாங்க" எனச் சுரீர் என்று சாட்டையால் அடிப்பதுபோல் பதில் கொடுத்தாள். அதன்பின் பெரும்பாலும் நான் மௌனத்தையே கையாளத் துவங்கினேன். குடும்பப் பற்றிலிருந்து விரைவில் விடுதலை பெறத்தான் இறைவன் இப்படி ஒருத்தியை எனக்குப் படைத்து அளித்துள்ளானோ என்று எண்ணிக் கொண்டேன். அந்தச் சம்பவம் நடவாதிருந்தால் எப்படியோ வாழ்ந்து தீர்த்திருப்பேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் நூல் நிலையத்துக்குப் புறப்பட்டேன். தையா தக்கா என்று நடக்கும் குழந்தை கோவிந்தன் பா...உம்...உம் என்று கையைத் தூக்கினான். தன்னைத் தூக்கிக்கொண்டு போகும்படி சொன்னான்.

"வேண்டாங் கண்ணு படிக்கப் போறேன். உனக்கு வாழைப்பழம் வாங்கியாறேன். "போடா போ" என்று தூக்கிக்கொண்டுபோய் உள்ளே விட்டுவிட்டு, "சுந்தரீ! நூல் நிலையத்துக்குப்போறன், புள்ளே!" என்று சொல்லி, அதற்கு மேல் 'பார்த்துக்கோ' என்று சொன்னால் கோபிப்பாளே என்று ஒன்றும் சொல்லாது நிறுத்திவிட்டுப் புறப் பட்டேன்.

காலை பத்துமணிக்கு மீண்டபோது, பக்கத்து வீட்டி லிருந்து வந்து குழந்தை வாசற்படியில் ஏறிக் கொண்டிருந் தான். இரண்டு மூன்றுபடி கையை வைத்து ஏறி விட்டான். கடைசிப் படி. அப்போது உள்ளேயிருந்து பத்திர காளிபோலச் சுந்தரி வந்தாள். "சனியனே! அந்தச் செருக்கி வீட்டுக்குப் போகாதேன்னு எத்தனை தரம் சொன்னேன். அவ வீட்டிலே போயி, கண்டதைத் தின்னுட்டு வர்ரே. சீ!" என்று குழந்தையின் வாயில் பளீர்பளீர் என்று அறைந்தாள். நான் ஓடிப்போய்த் தடுக்கப் போனேன். 'இதோ ஒங்க புள்ளெ' என்று பாவி ஒரு தள்ளு தள்ளினு. குழந்தை போய் கீழ்ப்படியிலே விழுந்தான். கருங்கல் பிடரியில், தலையில் அடிபட்டு மூக்கால் ரத்தம் பீறிட்டது. மருத்துவமனைக்கு ஓடினேன். அன்று இரவே கோவிந்தன் இறந்துவிட்டான். மருத்துவமனையிலிருந்தபடியே அன்று இரவு எங்கெங்கோ அலைந்தேன். வீட்டில் அடி எடுத்து வைக்க மனம் இல்லை. டாக்டருக்கும் மருந்துக்கும் செல வழிக்க வைத்திருந்த பணம் கொஞ்சம் பையில் அப்படியே இருந்தது. காலம் வந்துவிட்டது என்று என் மனம் சொல்லியது. என்னோடு கரந்தையிற் படித்த சுவாமிநாதன் காசிமடத்தில் இருந்தான். நேரே காசிக்குப்போய், அங்கேயே தங்கிச் சித்தாந்தம் கற்றுக்கொண்டு, சைவ சமயத்தொண்டு செய்து கொண்டிருந்தபோதுதான், நீ அகப்பட்டாய் என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டார்.

நிலவு மேலே ஏறிவந்து கொண்டிருந்தது. மெல்ல எழுந்து கிழக்கு நோக்கித் திரும்பினோம். நீவா நதி மணலில் வந்து ஒரு நிமிடம் நின்றார். என்னைப் பார்த்தார்.

"என்ன தம்பி...? என்ன?...சுந்தரி என்ன ஆனாள்: இருக்கிறாளா? ஏதாவது அவளுக்கு உதவ முடியுமா, என்று நினைக்கிறாயா?" அப்படி ஒரு நினைவு காசிக்குப்போய் இரண்டு மூன்று மாதங்களில் எனக்கே வந்தது. மனம் மிகமிகப் பேதமை உடையது. இவ்வளவு கொடிய நெஞ்சத்தோடு நடந்துகொண்டாலும், எல்லாம் அஞ்ஞானம் என்ற உண்மை தெரிந்த பிறகு, நான்தான் கொடுமையாக நடந்துகொண்டேனே என்று என் உள் மனம் என்னையே வருத்தத் துவங்கிற்று. நண்பர் சுவாமிநாதனிடம் கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு, இந்தச் சாமியார் வடிவில், ஒருநாள் அந்திமயங்கும் வேளையில் ஊருக்குப் போனேன். யாரோ புதியவன்போல், "சண்பகமாறன், அதுதான் என் பூர்வாசிரமப் பெயர். இருக்கிறாரா?" என்று கேட்டேன். அவர் ஏற இறங்க என்னைப் பார்த்துவிட்டு, "இல்லையே! நீங்க யார்...? அவர் எங்கோ போய்விட்டார். அந்த அம்மா அவர் மனைவிகூட போனவாரந்தானே தவறிப் போயிட்டாங்க..." என்றார்...நான் தலையைக் குனிந்து கொண்டேன். என் கவலையை வெளிக்காட்ட விரும்பாமல்..."ஏன் என்ன செய்தது..." என்று கேட்டேன். "அவர் போனதிலிருந்து—புள்ளை இறந்ததிலிருந்து அந்த அம்மா சித்தப்பிரமை புடிச்சவுங்க மாதிரி அப்படியே உட்கார்ந்திருப்பாங்க. ஒண்ணும் சாப்பிட மாட்டாங்க. போனவாரம் காலையிலேதான் உயிர் பிரிஞ்சிடுச்சி என்றார்" என்று தேம்பித் தேம்பி அழுதார்.

# பாசமா? பயித்தியமா?

கண்ணன் இன்னும் வரவில்லை. தெருவிளக்கெல்லாம் போட்டாகிவிட்டது. மணி ஏழே முக்கால் ஆகிவிட்டது. விளையாடிவிட்டு ஏழுக்குள் வந்துவிட வேண்டும் என்பது அவனுக்கு நல்லாத் தெரியும். இன்று என் சைகிளை வேறு எடுத்துச் சென்றிருந்தான். எட்டு மணிக்கெல்லாம் இரவுக் கல்லூரிக்கு வகுப்பு எடுக்கச் செல்ல வேண்டும். அதற்கு அவன் சைகிளை கொண்டுவந்த பின்தான் செல்ல வேண்டும். அதுவும் அவனுக்குத் தெரியும். ஏன் இன்னும் வரவில்லை. "மடப்பயல், எனக்கு வேலை இருப்பது தெரியாது? செத்துத் தொலைஞ்சாலும் தேவலெ."

"அவனுக்கு இனிமெ சைகிள் கொடுக்காதிங்க. எலெக்‌ஷனுக்கு இன்னும் ஏழெட்டு நாள்தான் இருக்கு. எங்கெயும் ஒரே கூட்டம், மார்க்கெட்டுக்குப் பொயிட்டு வர்ரப்பொ ஒரு ஸ்கூட்டரும் ரிக்‌ஷாவும் மோதிக்கிட்டுது. நல்ல காலம். யாருக்கும் அடியில்லை" என்று ஏக்கத்தோடு சொல்லிவிட்டுத் தெருப்பக்கம் போனுள் என் மனைவி சுந்தரி.

அவள் கூடவே தெருவுக்குப் போன சின்ன பையன் வேணு, தெருமுனைவரைக்கும் போய்ப் பார்த்துவிட்டு 'அண்ணனை காணோம்!' என்றான், வந்து.

அதற்குள் எட்டு மணிச் சங்கு ஊதிவிட்டது. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவள் என்னைப் பார்த்த பார்வை என்னவோபோல் இருந்தது. பக்கத்து வீட்டுக் காரரிடம் சைகிள் இரவலாய் வாங்கிக்கொண்டு நேரே கல்லூரிக்குப் போனேன். என் நண்பர் சோமு வகுப்பில் இருந்தார்.

''என்ன வரதராஜன்! ஏன் லேட்டு. இதுவரைக்கும் பார்த்தேன். மாணவர் கூச்சல் போட்டனர். சரின்னு இப்பொதான் நான் வகுப்பிற்கு வந்தேன்''னு சொல்லிக் கொண்டே எழுந்து வெளியே வந்தார்.

''சாரி—எனக்கு மனம் சரியில்லை. என்னாலே வகுப்பு நடத்த இயலாது. நீங்களே ஒங்க சப்ஜெக்டை எடுத்துக்குங்க. நாளைக்கு வந்து லீவு லெட்டர் கொடுத்துடறேன். என் பையனை என்னவோ இன்னங் காணோம். மனசு என்னவோபோல இருக்கு'' என்று என் மகன் நண்பன் கோபாலன் வீட்டுக்குச் சைகிளைத் திருப்பினேன்.

கோபால் வீட்டில் இல்லை. எனக்கு நிம்மதியாய் இருந்தது. ஏன் எனில், எல்லாப் பசங்களும் வீட்டுக்கு வரலே. ஏதோ லேட்டு என்று எண்ணிக்கொண்டே திரும்பினேன். 'மாமா! எங்கே வந்துட்டுப் போறிங்க! வாங்க!' என்று குழைந்தான் சைகிளைவிட்டு இறங்கிக் கொண்டே கோபால்.

'இல்லெடா! கண்ணன் இன்னும் வீட்டுக்கு வரலே. தேடிக்கிட்டு வந்தேன். ஏண்டா நீ இவ்வளவு லேட்டா வர்றே' ன்னு கேட்டேன்.

'கண்ணன் இன்னும் வீட்டுக்கு வரலையா!' என்று வியப் போடு கேட்டான். 6½ மணிக்கே விளையாட்டு முடிஞ்சிடுச்சி. அப்படியே நான் டைப்புக்குப் பொயிட்டு வர்றேன். என் கூட டைப் இன்ஸ்டிடியூடுக்கு வந்துட்டுப் போடான்னு கூப்பிட்டப்பகூட, 'நேரமாயிடும், அப்பா தேடுவாங்கன்னு சொல்லிட்டுப் புறப்பட்டானே' என்றான்.

எனக்குப் 'பகீர்' என்றது. என்ன செய்கிறதன்று தெரியவில்லை. சைகிள் டைனமோ இரண்டு நாளாய் வேலை செய்யவில்லை. ஒருகால் போலீசு பிடித்துக் கொண்டிருப் பார்களோ. அப்படியிருந்தாலும் சைகிளை வைத்துக் கொண்டு ஆளை விட்டுவிடுவார்களே. ஆனால், இவன் விடாப்பிடியாகச் சைக்கிளோடு ஸ்டேஷனுக்குப் போயிருந்தால். சரி—எதற்கும் போய், போலீசு ஸ்டேஷனில் பார்த்து விசாரித்து வரலாம் என்று சைகிளில் ஏறிப் புறப்பட்டேன்.

போலீசு ஸ்டேஷனில் ஒரே கூட்டமாக இருந்தது. விசாரித்தேன். "இப்பதான் கொஞ்சநேரத்துக்கு முன் ஒரு லாரி, "சைகிளில் மோதிவிட்டதாம். சைகிளில் வந்த பையனுக்குப் பலத்த அடியாம். லாரிடிரைவரைப் பிடித்துக் கொண்டுவந்து விசாரிக்கிறாங்க. அதான் கூட்டம்" என்றார் ஒருவர்.

'எங்கெங்க அந்த எடம்?' என்றேன் தவிப்போடு.

'மார்க்கட்டுக்கு எதுக்க' என்றான் அந்த ஆள் அலட்சியமாக.

நேரே அங்குப் போனேன். சைகிள் நொறுங்கிக் கிடந்தது. ஹேண்ட்பாரில் போட்டிருந்த கைப்பிடி ஒன்று சிதையாமல் பக்கத்தில் எமன்போல் கிடந்தது. அதே கருப்புக் கைப்பிடிதான். ஓவர் ஆயில் செய்யும்போது போன

மாதம் போட்டது. 'அய்யோ! அய்யைய்யோ!' என்று என்னை அறியாமல் கதறிவிட்டேன்.

பக்கத்தில் ஒரு கூட்டம் என்னை விசாரித்தது. பையனை மருத்துவ நிலையத்துக்கு எடுத்துப் போயிருப்பதாகச் சொல்லி என்னையும் ஒரு ரிக்ஷாவில் ஏற்றி அனுப்பினர். சைகிளை அங்கேயே ஒரு கடையருகில் நிறுத்திவிட்டுப் புறப்பட்டேன். 'கடவுளே! அடி ஒன்றும் பலமாக இருக்கக் கூடாது!' என்று வேண்டிக் கொண்டே போனேன். போகிற வழியில், சர்ஜன் துரைராஜ் வீடு இருப்பது நினைவுக்கு வந்தது. அவர் வீட்டின்முன் ரிக்ஷாவை நிறுத்திப் பதறிக்கொண்டு உள்ளே போனேன். ஆபீசர் கிளப்பில் அவரை அடிக்கடி பார்த்துப் பழகிய தைரியத்தில் அவர் டைனிங்ஹால்வரை போய்விட்டேன். "டாக்டர் என் பையனுக்கு ஆக்சிடெண்டு; பலத்த அடியாம். உடனே நீங்க வரணும். எப்படி இருக்கான் என்னன்னு ஒன்னுந் தெரியலே" என்று கலங்கினேன். கையில் வைத்திருந்த சோற்றுக் கவளத்தை அப்படியே கோப்பையில் போட்டுவிட்டு— "பயப்படாதீங்க. கேசுவாலிடிக்குப் போன் செய்றேன். தேவைன்னு வர்றேன்— இப்பொதான் அங்கேயிருந்து வந்தேன்" என்று போன் செய்து விசாரித்தார்.

"ஆமாம், இப்பொ ஒரு கேசு வந்ததாம். ஒரு பையனும். பதினெட்டு வயதிருக்குமாம். பேண்ட் போட்டிருந்தானும். மண்டையிலே அடியாம். பிரக்ஞை இல்லையாம். ஆபரேஷன் தியேட்டருக்கு எடுத்துப்போய் கட்டுப் போடுறுங்களாம்" என்று சொன்னர்.

நான் தயங்கி நின்றேன். "நீங்க போங்க. இப்பொ அங்கே வந்து நான் செய்யப் போறது ஒண்ணுமில்லே. ஒரு மணி நேரம் கழித்து எனக்குப் போன் செய்யுங்க,

நிலைமை மோசமா இருந்தா உடனே வரீரேன்"—என்று என்னை அனுப்பிவிட்டார்.

ரிக்ஷாக்காரன் இரக்கத்தோடு என்னைப் பார்த்தான். "நீ போப்பா—கொஞ்சதூரந்தான். நடந்து போயிடறேன்னு" சொல்லி, பையில் கையை விட்டேன். காசு ஒன்றும் இல்லை. 'பரவாயில்லை போங்க' என்று சொல்லி விட்டு அவன் போய்விட்டான்.

கேசுவாலிடியை அடைந்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். துரைராஜ் போன் செய்ததைப் பற்றியும் கூறினேன். அங்கிருந்தவர் மரியாதையுடன், "இங்கேயே இருங்க சார். உங்க பையனை வார்டுக்கு அனுப்பிய பிறகு உங்களை அழைத்துப் போறேன்" என்று எங்கோ போய் விட்டார்.

அங்கு உட்கார என்னால் இயலவில்லை. "அப்போ, இந்த வாசற்படியில் போய் இருக்கேன். என்னைக் கூப்பிடு" என்று சொல்லிவிட்டு, கேட்டுக்கு அருகில் இருந்த படியில் குனிந்துகொண்டு, தலையை என் கைகளில் புதைத்துக் கொண்டு அமர்ந்தேன்.

"வரதராஜன்—மேத்ச்லே ஒங்க பையனுக்குத்தான் முதல் மார்க்கு. புதிசு புதிசா வழிகண்டு பிடிச்சிப் போட்டிருக்கான். ஓய். நல்லா படிக்க வையும். விச்வேச்ரய்யா மாதிரி நல்ல என்ஜினீர் ஆயிடுவான். ஓய். ஆமா!" இது அவன் எட்டாம் வகுப்பு படிக்கும்போது சுப்பு சாஸ்திரி சொன்னது.

"மிஸ்டர் வரதன். நம்ப ஸ்கூல்லே கண்ணனுக்குத் தான் பயாலாஜில முதல் மார்க். பரிசு கிடைக்கும். டாக்டர் குருசாமி மாதிரி பேரும் புகழும் பெற்று நீண்ட காலம் வாழணும். அதுதான் என் ஆசை. படிக்க வையுங்க.

நிறுத்திடாதீங்க." என்று வாழ்த்தி, பத்தாம் வகுப்புச் சான்றிதழை ஹெட்மாஸ்டர் சுவாமிநாதன் கொடுத்தது அப்படியே கண்முன் நிற்கிறது.

"அப்பா அடுத்த வாரம் டில்லிக்குப் போறேன். என். சி. சி. வாலிபால்லே நாங்கதான் ஜெயிச்சுட்டோம். சதர்ன் ரேன்ஜிலேயிருந்து எங்க டீம் குடியரசு தின விழாப் போட்டியில் கலந்துகொள்ள டில்லிக்குப் போவுது. எல்லாச் செலவும் அவுங்களே தர்ராங்களாம். எனக்குப் பத்துப் பதினைந்து ரூபா கொடுங்க. செலவழிச்சுட மாட்டேன். சும்மா கையிலெ இருக்கட்டுமேன்னுதான் கேக்றேன்!" என்று நேற்றுக் கண்ணன் பேசிய பேச்சு, இதோ இப்போது கேட்பதுபோல் இருக்கிறது.

என்னால் அடக்க முடியவில்லை கேவிக் கேவி அழுகிறேன்.

'அப்பா! அப்பா!' கண்ணன் குரல்தான் அது.

'அப்பா அப்பா! இங்கே ஏம்பா வந்திங்க?" என் தோளைத் தொடுகிறான். கண்ணன் குரல்தான் இது. அவன் ஓசைதான் இது. தடவிப் பார்க்கிறேன். உண்மை தான். என் தோள்மேல் இருப்பது கண்ணன் கைதான்.

தலை நிமிர்ந்து பார்க்கிறேன். மலைபோல் என் முன் நிற்பது கண்ணன் தான்.

'கண்ணா நீ தானா! நீ தானா!' என்று அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, மூக்கு முகம் எல்லாம் தடவிப் பார்க்கிறேன்.

'எனக்கு ஒண்ணும் ஆகலேப்பா. குமார் மாமாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சேகர் கூப்பிட்டான். அதான் வந்தேன். இங்கே தலைகுனிந்து கொண்டு தேம்பித் தேம்பி

அழுதுகொண்டு படியிலெ உட்கார்ந்திருக்கிங்க. யாரு டான்னு பார்த்தா நீங்க. நீங்க ஏம்பா இங்கே வந்திங்க?''

'பாசம்! பாசண்டா பாசம். லாரியிலெ எவனோ அடிபட, நீ அடிபட்டுட்டேன்னு நெனச்சு இங்கே ஓடியாந்தேன். கடவுள் புண்ணியத்திலெ ஒனக்கு ஒண்ணும் ஆகலெ!'

''பயித்தியம். பயித்தியம்பா நீங்க. நான் உடனே வீட்டுக்குப் பொயிட்டு வர்ரேன்னுதான் சொன்னேன். இந்தச் சேகர் வற்புறுத்தி உடனே போயிடலாம்னு இங்கே அழச்சிக்கிட்டு வந்துட்டான். அதுக்குள்ளே நீங்க என்னடான்னு! சரி வாங்க போவோம். நம்ப ரெண்டு பேரையும் காணும்னு அம்மா தவிப்பாங்க.''

# யாருக்காக வாழ்கிறேன்?

காலடியில் மருமகள் உறங்கிக் கொண்டிருக்கிறாள். அந்த வெறுங்கூடு இன்னும் அழகா எரவாணத்தில் இருப்பது சிம்ணி விளக்கில் தெரிகிறது. அங்கேதான் அந்தச் சிட்டுக் குருவிகள் புல், நார், வைக்கோல்...இப்படி ஏதேதோ கொண்டுவந்து கூடு கட்டின. தாய்க்குருவி முட்டையிட்டு அடைகாத்தது. ஆண் வேறு குருவி போட்டிக்கு வராமல் கூட்டைப் பாதுகாத்தது.

அந்தக் கருந்தலைச் சேவல் சிட்டு பெண்ணின்மேல் தாவி விழுந்து கட்டிப் புரண்டு இன்பம் துய்த்துக் கூடி வாழ்ந்து கூடுகட்டி, பெண் முட்டையிட்டு அடைகாக்க, ஆண் அவற்றைக் காவல் காக்க, குஞ்சுகட்கு இரண்டும் இரை தேடிவந்து கொடுக்க, ஒரு நாள் எல்லாம் பறந்து போக, மிகுந்து போன அந்த வெறுங்கூடு இன்னும் அதோ எரவாணத்தில் இருக்கிறது. எப்போதாவது அந்த ஆண் சிட்டும் பெண்சிட்டும் இங்கு வரும். குஞ்சுகள்! இரவு பகலாகப் பாடுபட்டு இரண்டு சிட்டும் வளர்த்த குஞ்சுகள்! அவை சிறகு முளைத்து அம்மாவையும் அப்பாவையும் விட்டுப் பறந்து போய்விட்டனவோ! இப்போது மூன்று நான்கு

நாட்களாய்ப் பெண்சிட்டு மட்டுமே வந்தது. வந்து அங்கும் இங்கும் உட்கார்ந்துவிட்டு விருட்டென்று வெளியே போய் விடும். ஆண்சிட்டுக்கு என்ன ஆயிற்று? இறந்து போய் விட்டதா? இறந்திருக்காது. சென்ற வாரம் ஞாயிற்றுக் கிழமை அரிசி புடைத்துக் கொண்டிருந்தபோதுகூட இரண்டும் வந்தனவே. யாராவது கொன்று விட்டார்களோ என்னவோ, பாவம்! பெண்சிட்டு மட்டும் மூன்று நாட்களாய் வந்து கொண்டிருந்தது.

இன்று அந்தப் பெண்சிட்டோடு இன்னொரு ஆண்சிட்டு பறந்தோடி வந்தது. பழைய கருந்தலைச் சிட்டைவிட இது இன்னும் இளமையானது. அழகாக இருந்தது. பழைய கதைதான். என் கண் முன்னாலேயே கட்டிப் புரண்டுகொண்டன. மீண்டும் வெறுங்கூடு உயிர்க் கூடாகி விடும்.

எரவாணத்தில் உள்ள அந்த வெறுங்கூட்டைப் பார்க்கிறேன். வாழ்ந்துபோன, வாழப்போகிற அந்தப் பெண்சிட்டு வாழ்வையும் நினைக்கிறேன். இப்போது எழுபது வயதில் நினைத்து என்ன செய்வது? அன்றே நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். அவர் இறந்து போன அந்த நாட்களிலேயே, மகனாவது மண்ணாவது என்று நினைத்துப் பார்த்திருக்க வேண்டும்.

அவர் எவ்வளவு அழகானவர்; அன்பானவர்; எப்படி வேறொருவரை அவர் இடத்தில் வைத்து நினைத்துப் பார்த்திருக்க முடியும். 'குஞ்சம்மா' என்று உள்ளம் உருகி ஒரு முறை என்னை அழைப்பதற்காக, என் வாழ்நாள் எல்லாம் தந்துவிடலாமே. 'அடி, குட்டிக் குஞ்சம்மா!' என்று அவர் என்னை அணைத்துக்கொண்ட அந்த ஆர்வத்துக்காக வரும் பிறவியில் எல்லாம் அவரையே மணந்து கொள்ள வேண்டும் என்று தவம் கிடக்கலாமே!

அந்த நாள், அவரும் அவருடைய அம்மாவும் எங்கள் குடிசைக்கு வந்த அந்த நாள், என் மனம் கட்டுக்கடங்காது துள்ளிக் குதித்து, கண்கள் எப்படியோ அவரைக் காணாதது போல் கண்டு மகிழ்ந்தன. அவர் தலையைக் குனிந்து கொண்டு புதுப் பெண்போல நின்று கொண்டிருந்தார். அவருடைய அம்மா எங்க அம்மாவின் உடல் நிலையைப் பற்றி ரொம்பக் கேட்டார்.

எங்கள் அம்மாவுக்கும் அவருடைய அம்மாவுக்கும் ஓராண்டுதான் பழக்கம். எங்கேயோ தஞ்சாவூர் பக்கத்திலிருந்து அவர் படிப்பதற்குச் சென்னைக்கு வந்திருந்தார். அவருக்குச் சோறுபோட்டுக் காப்பாற்ற அந்த அம்மாவும் வந்திருந்தாங்க. அவங்க வருவதற்கு முன்னேயே நாங்க பாலக்காட்டுப் பக்கத்திலிருந்து வந்துட்டோம். எங்கம்மா ஆப்பம், இடியாப்பம், புட்டு, இட்டலி சுட்டுத் தருவாங்க. நானும் என் தங்கையும் வித்துக்கிட்டு வருவோம். நான் எட்டாவது படிக்க ஆரம்பித்த போது, அம்மா என் தங்கையை மட்டும் வெளியே அனுப்பி விற்கச் சொன்னார் அப்புறம் நாங்கள் வீட்டிலேயே இருந்து விற்போம். அப்படி இருந்தபோதுதான் அந்த அம்மா தன் பிள்ளையோடு வந்து பக்கத்துச் சத்திரத்தில் ஒரு அறையை வாடகைக்குப் பிடிச்சுக்கிட்டுத் 'தங்கினாங்க'.

எங்களுக்கும் அவுங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டதே ஒரு வேடிக்கையான கதை. ஒருநாள் என் தோழி அஞ்சுகம், 'ஏண்டி! பாவம், நீங்க இட்லி சுடுவதை விட்டுட்டு ஆப்பம், இடியாப்பம், புட்டோடு நிறுத்திக்கப் படாதோ' என்றாள்.

'ஏண்டி' என்றேன்.

'அந்த ஸ்டுடண்ட் அம்மாவுக்கு இட்டலி சுட்டு விற்றுத்தான் பழக்கமாம். வேறு தொழில் ஒன்றும்

தெரியாதாம். பிழைக்கத் தெரியாமல் ஊரிலிருந்து கொண்டு வந்த காசையும் செலவழிச்சிட்டுக் கலங்குதுங்க. அம்மா கிட்டே சொல்லி, இட்டலி வியாபாரத்தை மட்டும் நிறுத்திடச் சொல்லேன். அவுங்க இட்டலி சுட்டு விற்கட்டும். நீங்க ஆப்பம், இடியாப்பம், புட்டு, சுட்டு வில்லுங்க-' என்ருள். எனக்கு என்னவோபோல் பாவமாக இருந்தது.

'சரிடி' என்றேன்.

அம்மா சோர்வாக இருந்தபோது " 'ஏம்மா' இட்டலி மாவு அரைக்க ரொம்பக் கஷ்டமா இருக்கு. ஆப்பம் இடியாப்பம் எல்லாம் மில்லிலே அறைச்சுக்கலாம். இது ஒண்ணுதான் ரொம்பக் கஷ்டமா இருக்கு. இதை மட்டும் விட்டுட்டா என்ன?" என்று கேட்டேன்.

"ஆமாண்டி நான்கூட அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன். என்ருலும் முடியலே. வயித்துவலி வேறே சுருட்டி சுருட்டி என் உயிரை எடுக்குது" என்று சொல்லி என் கருத்துக்கு ஒத்துப் போனுள்.

இரண்டு மூன்று நாள் கழித்து அந்த அம்மா, எங்க வீட்டுக்கு வந்து, என் கையைப் பிடித்துக்கொண்டு, 'குழந்தை நீ நல்லா இருக்கணும். அஞ்சுகம் எல்லாம் சொன்னு. இதோ ரெண்டு இட்டலி கொண்டாந்திருக்கேன். மொதல்ல உன் வயிறு, உங்க அம்மா வயிறு குளிரணும். அப்போதுதான் என் தொழில் நல்லாயிருக்கும்' என்று இரண்டு இட்டலி கட்டிய பொட்டணம் ஒன்றை என் கையில் கொடுத்துவிட்டு, அம்மாவையும் ரெண்டு கையால் கும்பிட்டுவிட்டுப் போனுங்க. கையைச் சுட்டுக் கொண்டிருந்த அந்தப் பொட்டலத்தைக் கீழே வைத்து விட்டு, 'இது என்ன? இந்த அம்மா யார்?' என்பது போல் என்னைப் பார்த்த அம்மாவை நோக்கி, 'இவுங்க

சத்திரத்திலே புதுசா குடித்தனம் வந்திருக்காங்க. நம்மைப் போல ஏழை. அவுங்க புருஷனும் செத்துப் போயிட்டாராம். நாம் விட்டுட்டோமில்லியா, அந்த இட்டலி வியாபாரம் துவங்கியிருக்காங்க' என்றேன். சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, 'ஆண்டவன் அவுங்கவுங்க படியை அளப்பான் போ' என்று வேலையில் மூழ்கிவிட்டார்.

அம்மாவின் வயிற்றுவலி மோசமாகிவிட்டது. அன்று மருத்துவ நிலையத்திற்குப் புறப்படும் நாள். அப்போது தான் அவர்கள் பார்க்க வந்தார்கள். அம்மாவை எழும்பூர் மருத்துவ நிலயத்தில் சேர்த்தேன். அறுவை சிகிச்சை நடந்தது. அருகிலேயே இருந்தேன். வீட்டைத் தங்கை கவனித்துக் கொண்டாள். அம்மாவை நான் கவனித்துக் கொண்டேன். ஓரிருநாள் அந்த ஸ்டூடண்ட் வந்து நாணிக் கோணிக்கொண்டு பெட் அருகே நின்றார். 'அம்மாவுக்கு எப்படி இருக்குன்னு அம்மா கேட்டாங்க' என்று குனிந்து கொண்டே, உறங்கும் அம்மாவைப் பார்த்துக்கொண்டே கேட்டார்.

"கொஞ்சம் தேவலே. வயிற்றுவலி இல்லே. இன்னும் கொஞ்சம் நாள்லே டிஸ்சார்ஜ் செய்துடுவாங்க. அம்மா கிட்டே சொல்லித் தங்கையைப் பார்த்துக்கச் சொல்லுங்க" என்று, தலைநிமிர்ந்து அவரைப் பார்த்த படியே பேசுவேன். அவர் தலைகுனிந்து கொண்டே 'உம்' 'உம்' போட்டுவிட்டுப் போய்விடுவார்.

அம்மா முன்போல் ஓடி ஆடி உழைத்தார்கள். மருத்துவர் கொஞ்சகாலம் ஓய்வாக இருக்கவேண்டும் என்று சொன்னதையும் கேட்கவில்லே. உடம்பு மிகவும் கெட்டுவிட்டது. மீண்டும் மருத்துவ நிலையம் போனோம். 'இனிக் காப்பாற்ற முடியாது. உடம்பில ரத்தம் குறை வாக இருக்கிறது. கொஞ்ச காலம் ஒரு வேலையும்

செய்யாமல் படுத்தே இருக்கவேண்டும்' என்று சொல்லி, வைட்டமின் மாத்திரைகள் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். எனக்குக் கவலையாகிப் போய்விட்டது. அம்மா என்ற ஒரு ஓட்டைப் படகை வைத்துக்கொண்டு காலம் தள்ளி வரும் எங்கள் இருவர் வாழ்வையும், அம்மாவுக்குப் பிறகு எண்ணிப் பார்க்கவே பயமாக இருந்தது. நான் படிப்பை நிறுத்திக் கொண்டு தங்கையை மட்டும் படிக்க வைக்கத் துவங்கினேன். ஆப்பம், இடியாப்பம், புட்டு சுட ஆரம்பித்தேன். அம்மா ஒரு அடையாளமாக, புட்டுக்கார அம்மாவின் சின்னமாக, என்கூட உட்கார்ந்திருப்பாங்க. நானே எல்லாம் செய்து வந்தேன்.

தங்கை அதிருஷ்டக்காரி. அவள் படித்த பள்ளி ஆசிரியர் ஒருவர் அவளைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டார். அம்மாவுக்குப் பெரிய மகிழ்ச்சி. எனக்கும் தான். ஆனால் அவர், அடுத்த ஆண்டே மாற்றலாகி தூரத்திற்குப் போய்விட்டார். நானும் அம்மாவும், ஆம்; ஒருயிர்க்கு இன்னோர் உயிர்! அம்மாவும் நாளுக்கு நாள் இளைத்து வந்தார்கள்.

மீண்டும் ஒருநாள் அவர் வந்தார். எட்டணா வைத்த ஒரு தட்டை நீட்டி, தலை குனிந்தபடியே, 'இடியாப்பம்' என்றார்.

'அம்மாவுக்கு என்ன?' என்றேன். 'சுரம் நெருப்புப் போல் காய்கிறது. காலேசுக்கு நேரம் ஆகிவிட்டது' என்றார்.

தண்ணியாய் இருந்த பாலில் கொஞ்சம் சர்க்கரை அதிகம் போட்டு ஆப்பத்துக்கு ஊற்றி, அதோடு வீட்டிலிருந்த சின்னக் கிண்ணத்தில் வடைகறி கொஞ்சம் கொடுத்து அனுப்பினேன். ஆப்பம் விற்று முடிந்தபின்

அந்த அம்மாவைப் பார்க்கப் போனேன். கதவு ஒருக் கணித்து இருந்தது. பிரக்ஞை இன்றிக் கிடந்தார்கள். 'அம்மா அம்மா' என்று மெல்லக் கன்னத்தைத் தொட்டு அழைத்தேன். மெல்லக் கண்களைத் திறந்து ஒரு விரலைக் காட்டினார்கள். கக்கூசுக்கு அழைத்துச் சென்றேன். வெந்நீர் வைத்துக் கொடுத்தேன். கைகால் முகம் கழுவி விட்டேன். காப்பி போட்டுக் கொடுத்தேன். இப்படியே மூன்றுநாள் செய்தேன். அப்புறம் அந்த அம்மா தேறி எழுந்து, என்னைக் கட்டி அணைத்துக் கொண்டு உச்சி மோந்து வாழ்த்தினார்கள். அந்த மூணுநாளும் அவர் எட்டணு போட்டுத் தட்டை நீட்டுவார். நான் ஆப்பமும் பாலும் வடைகறியும் கொடுப்பேன். மூன்ாறும் நாள் ஒரு வேடிக்கை செய்தேன். விளையாட்டாகத்தான். யாரும் இல்லை. அவர் ஆப்பம் வாங்கிக்கொண்டு போகும்போது, என் மனதிற்குள் சொல்லி ஜெபித்துக் கொண்டிருந்த 'சேகர்' என்ற சொல்லை, அவர் பெயரை, வாய்விட்டுச் சொல்விட்டேன். குடிசைக் கதவருகே சென்ற அவர், என்னைத் திரும்பிப் பார்த்தார். அப்படியே என்னவோ போல் நின்றுவிட்டார். 'சாரி, சாரி' என்று எழுந்து ஓடி னேன். 'நோ! நோ' என்று புன்னகைத்தபடியே, மீண்டும். ஒருமுறை ஏற இறங்க என்னைப் பார்த்துவிட்டுப் போனார். அதிலிருந்து என்னை நேருக்கு நேர் நோக்குவார். இட்டலி பிடிக்கவில்லையோ என்னவோ, அடிக்கடி ஆப்பம் வாங்க வருவார். கண்களாலேயே ஆயிரம் ஆயிரம் பேசுவார்.

அம்மாவின் உடல் மோசமாயிற்று. தங்கைக்குக் கடிதம் எழுதினேன். அம்மா இறந்த தந்தி பெற்ற பிறகே அழுது கொண்டு ஓடிவந்தாள். அவர், அவளுடைய கணவர் ஏனே வரவில்லை. சேகர், அவளுடைய அம்மா துணையில் காரியங்களை எல்லாம் முடித்தோம். நான் தங்கையோடு சில காலம் சென்று தங்கலாம் என்று

நினைத்தேன். அவள் எனக்குக் கொஞ்சமும் இடம் கொடுத்துப் பேசவில்லை. 'அவர் ஒரு மாதிரி! உனக்குத் தெரியாது. ஊருக்குப் போய் எழுதுகிறேன். அப்புறம் வா!' என்று போய்விட்டாள். பிறகு நாலைந்து நாள் தபால் காரனைப் பார்த்தேன். ஒரு பதிலும் இல்லை. ஒண்டிக் கட்டையாக ஏதாவது அலுவலகத்தில் வேலை கிடைக்குமா என்று அலைந்தேன். ஒரு வீட்டில் ஆயா வேலை கிடைத்தது. அவர் ஒரு டாக்டர். அந்த அம்மா ஒரு சினிமா ரசிகை. இருவருக்கும் நேரம் இருக்காது. ஒரே குழந்தை. குங்குமப் பூப்போல சிவப்பு. அழகான குழந்தை. எனக்கு அந்த வேலை மிகவும் பிடித்துப் போய்விட்டது. அங்கேயே லயித்துவிட்டிருக்கலாம். ஆனால்... நான் தொழிலில்தான் ஆயாவே ஒழிய வயதில் இல்லையே. என் இளமை அழகு எனக்குக் கேடு தந்தது. அப்படித்தான் நான் நினைத்துப் பார்க்கிறேன். ஏனெனில் நான் ஏழை அல்லவா? அந்த டாக்டரைக் குறை சொல்லி என்ன பயன்? சேகர் என் மனதில் இதற்குமுன் இல்லாவிட்டால், அதற்குங் கூட ஒத்துப் போயிருப்பேன். அந்த ஒரு பார்வை, என்னுள் தவித்துக் கொண்டிருந்த பெண்மைக்கு ஓர் ஊன்று கோலாகிவிட்ட அந்த ஒரு பார்வை அன்று கிடைக்காமல் போயிருந்தால், அந்தக் குடும்பத்திலேயே அந்த டாக்டருக்கு, ஊர் அறியாத, உற்றார் அறியாத, உடன் இருக்கும் மனைவியும் அறியாத ஒரு வைப்பாட்டி யாக ஆகியிருந்திருப்பேன். என் அன்பைப் பெற்ற பிறகு, அந்த அன்பில் என் பெண்மை ஊன்றிவிட்ட பிறகு, என்னால் வேறு எவனுடனும் எப்படிப்பட்டவனுடனும் வாழ இயலாது என்று உணர்ந்துகொண்ட பிறகு, என்னால் அங்கு 'ஆயா' வேலை பார்க்க முடியவில்லை. சொல்லாமல், ஒருநாள் வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டேன். அந்த டாக்டரும் 'ஏன்' என்று கேட்காமல் என்னை விட்டு

விட்டார். வேறொரு நல்ல 'ஆயா' உடனே கிடைத்திருக்கலாம், சென்னையில் மலிவான பொருள், ஏராளமாகக் கண்ட இடமெல்லாம் கிடைக்கும் ஒரு பொருள் மனிதர்கள்தான். என் நிலையைச் சேகரும் உணர்ந்து கொண்டார். நாணிக் கோணும் அந்த மனிதர் நெஞ்சு அவ்வளவு உறுதியானது என்பதை நான் அறிந்து கொள்ளவில்லை. அந்த அம்மா எவ்வளவோ தடுத்தும் கேளாமல், ''டேய்' நான்தான் பணங்காசு இல்லாமல் இவ்வளவு கஷ்டப்பட்டேன். நீயும் ஏண்டா இப்படித் துன்பத்தை விலைக்கு வாங்கிக்கிறே. பணக்கார இடத்துலேயிருந்து நேற்று வந்து போனுங்க. இதோ புகைப்படங்கூடக் குடுத்திருக்காங்க. கிளி மாதிரி இருக்குடா—பாருடா'' என்று, என் முன்னுலேயே மறுத்தாங்க. நானும் அவருக்கு அறிவுரை கூறி, 'ஏதாவது பெண்கள் விடுதியில் என்னைச் சேர்த்து விட்டுவிடுங்கள். நீங்க ஒங்க அம்மா சொற்படி நன்ருக வாழுங்கள்' என்று கண்கலங்க அழுதுகொண்டே அறிவுரை கூறினேன். ஆனுல் அவர், யார் பேச்சையும் கேட்காமல், என்னை மணந்து கொண்டு, அங்கே ஓர் உயர்நிலைப் பள்ளியில் வேலை தேடிக்கொண்டு, அன்பாக என்னையும் தன் அம்மாவையும் காப்பாற்றிஞர். அந்த அம்மாவும் என் வயிற்றில் கருவளர்வதைக் கண்டு, என்பால் உண்மையான அன்பு செலுத்தி வரலாஞர்கள். அன்று எழும்பூர் நிலையத்தில், ஆண் குழந்தை பிறந்த அன்று, அந்த அம்மா கோடி கோடி செல்வத்தைக் கண்டதுபோல மனம் மகிழ்ந்து போஞர்கள். நாள்தோறும் காலை ஐந்து மணிக்கெல்லாம் எனக்குச் சுடச்சுடக் காபி போட்டுக் கொண்டு வந்து காத்திருப்பார்கள். ஐந்தாம் நாள், என்னை டிஸ்சார்ஜ் செய்யும் நாள், ஏனே வரவில்லை. என்னை டிஸ்சார்ஜ் செய்து விட்டு விட்டார்கள். அத்தையையும் அவரையும் எதிர்

பார்த்திருந்த என் தலையில் இடி விழுந்தது. காலையில் காப்பி போடச் ஸ்டவ்வை பற்ற வைத்தபோது, ஸ்டவ் வெடித்து, அறையில் அவரும் அந்த அம்மாவும் கருகிப் போய்விட்டதாகவும், ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப் போயிருப்பதாகவும் அறிந்து, கைக் குழந்தையோடு போனேன். அந்த அம்மா அதற்குள் போய்விட்டார்கள். அவர் என்னைப் பார்த்துவிட்டுக் கண்மூடிக் கொண்டார். எவ்வளவு கதறியும், நான் ஆப்பம் சுட்டே காப்பாற்றி விடுவேன் என்று எவ்வளவு கதறிக் கூப்பிட்டும், அவர் திரும்பி வரவில்லை. போயே விட்டார்.

குழந்தை மிஞ்சினான். அந்த குழந்தையை மருத்துவ நிலையத்தருகில் போட்டுவிட்டு, எங்காவது விழுந்து இறந்து விடத் தோன்றியது. அழகான ஆண் குழந்தையாக இருந்த தால், பிறந்த சில நாட்களே ஆன கைக்குழந்தையாக இருந்ததால், குழந்தை இல்லாத பெற்றோர் விலைக்கு வாங்கிக் கொள்வார்கள் என்று, மருத்துவ நிலையத்தில் பேசிய பேச்சும் நினைவுக்கு வந்தது.

ஏனோ அந்தக் குழந்தையைக் கைவிட மனம் வரவில்லை. மீண்டும் இட்டலி, ஆப்பம், இடியாப்பம், புட்டு சுட்டு விற்க ஆரம்பித்தேன். அந்த நாள்போல் இல்லை. அழகழ கான பாத்திரங்கள், தூய்மையான வீடு, உரமான உடற் கட்டு. எனவே நிறைய உழைத்தேன். நிறைய விற்றேன். காசு குவிந்தது. கலயத்தில்— கட்டிலில்— பானையில்— பெட்டியில்— பாங்கில் பணம் சேர்ந்தது. இட்டலி சுட்டே பணக்காரியாகி விட்டேன். அதுதான் நான் செய்த தவறு! பணம் இல்லாமல் என் வாழ்வின் இளமையில் வாடி வருந்தினேன். பணத்தால் இப்போது வாடுகிறேன்.

குமார் சொல் பேச்சுக் கேட்பதில்லை. ஊதாரியாகிப் போய்விட்டான், சரியாகப் படிப்பதில்லை. குடி வேறு.

கூத்தியும் உண்டென்று கேட்டபோது குமைந்து போனேன். எல்லோரும் போல் நானும் நினைத்தேன், ஒரு கல்யாணம் செய்துவிட்டால் திருந்தி விடுவான் என்று. எனக்கு ஒத்து வரும் ஏழைப்பெண், நல்ல பெண், அழகான பெண் ஒருத்தி இருந்தாள். திருமணம் செய்து வைத்தேன். பாவி, பாங்கியில் உள்ள எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டு, எவளோ ஒரு நர்சோடு, எப்படியோ குவெட்டா வுக்குப் போய்விட்டானும்.

இப்பொழுது இவள், என் மருமகள், எனக்காக என் மகனைக் கட்டிக்கொண்ட இவள், இதோ என் காலடியில் தூங்குகிருள். இவள் வயிற்றில் உள்ள கருவுக்காக, இவளுக்காக இனி வாழவேண்டும். எரவாணத்தில் உள்ள வெறுங்கூட்டைப் பார்த்துக் கொண்டே இட்டலி அடுப்பைப் பற்ற வைக்கிறேன்.

# விழிப்பு

'அம்மா! அம்மா!!'

"சீ...... பெரிய வேலெசெய்து கிழிச்சவன் மாதிரி ராத்திரி 12 மணிக்கு வர்ரியே ஒழிந்து போ! என் மொவத்திலே விழிக்காதே. ஒன்னெ காளியாத்தா கொண்டு போனுகூட கவலைப்பட மாட்டேன். என் வயித்திலெ ஒன்னு பொறக்கலேன்னு தலெயெ முழுகிடுவேன்."

"ஏன்'டா தெண்டச் சோறு! தெனம் இப்படி என்னவோ நைட் டியூடி பண்ண'றவன் மாதிரி ராத்திரி 2 மணி 3 மணி'ன்னு வர்ரியே என்னடா! ஒன்னெ பாத்து உள்ளதும் கெட்டுடும் போலிருக்கே. ஒழுங்கா படித்தா படி. இல்லேன்ணு எங்காவது போய்ப் பொழைக்கக் கத்துக்க. காலணு சம்பாதிக்க வக்கில்லெ; தெனம் நூறு ரூபா செலவழிக்கிறே..."

அம்மா, அப்பா இன்று இரவு 11 மணிக்கு வீட்டுக்கு வந்த என்னைப் பார்த்து வழங்கிய இந்த வாழ்த்துரைகள், மீண்டும் மீண்டும் நினைவுக்கு வருகின்றன. 'உம்...காலையில் எழுந்து பார்ப்பாங்க. நான் எங்கேயோ ஊர் சுத்தப்

பொயிட்டேன்னு நெனச்சுக்குவாங்க. நான் ஊரை விட்டே பொயிட்டே'ன்னு எப்படித் தெரியும்?'

நாலே பலகை உள்ள அந்தச் சின்னஞ்சிறு தனிப் பெட்டியில் காலை 4 மணிக்குச் சென்னைக்குப் புறப்படும் புகைவண்டியில், வடக்கு தெற்காக உள்ள பலகையில், யார் முகத்திலும் படக்கூடாது என்ற நினைப்பில் ஒருக்கணித்துப் படுத்திருக்கும் என் நினைவுகளைக் கலைத்தது, எதிரே பலகையில் வந்து அமர்ந்த ஒரு பெண்ணின் கூந்தலி லிருந்து கமழ்ந்த மல்லிகை மணமும், உடலிலிருந்து வீசிய ஒருவகை நாற்றமும்.

'மிஸ்டர்! மிஸ்டர்! எங்கே போறீங்க?'

நான் ஒன்றும் பேசாமல் படுத்திருக்கிறேன்.

''மிஸ்டர் ஒங்களைத்தான்! எங்கே...போறீங்க?'' முன்னைவிடக் குழைவோடு கொஞ்சம் நெருங்கி வந்து கேட்கிறாள். யார் கண்ணிலும் படாமல் போய்விட வேண்டும் என்று தனிப்பெட்டியாய், யாரும் இல்லாத பெட்டியாய்ப் பார்த்து வந்த தவறு புலப்படுவதற்குள், அவள் இன்னும் நெருங்கி நெருங்கி வருகிறாள். எனக்கு அச்சமாக இருக்கிறது. மருத்துவக் கல்லூரியில் இப்படிப் பட்ட காலை மோகினிகளுடனும், இரவு ராணிகளுடனும் பழகி நோயுற்றுப் பொலிவிழந்த மாணவரைக் காட்டிக் காட்டி டாக்டர் கோபாலன் நடத்திய பாடம் நினைவுக்கு வருகிறது.

நல்ல காலமாக யாரோ ஒருவர் என் பெட்டியில் ஏறிவரும் சத்தம் கேட்கிறது. அந்த மோகினி, 'கிடு கிடு' என்று இறங்கிப் போய் விடுகிறது. 'அப்பா! தப்பிச்சேன்' என்று நன்றாகக் கண்ணை மூடிக்கொண்டு தூங்க முயல்கிறேன்.

எதிர்ப் பலகையில் 'லொக் லொக்' என்று இருமல் சத்தம் கேட்கிறது. 'ஏதாவது டி. பி. கேஸாக இருக்குமோ' என்று மெல்லக் கண்ணைத் திறந்து பார்க்கிறேன். அந்த 'லொக் லொக்' கிழவர் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறார். வரப்பில் அறுத்த பிறகு தோன்றும் அடிப்புற்கள் போல ஷேவிங் செய்யாத நரைத்த அந்த முகம், அந்தப் பார்வை, அந்த 'லொக் லொக்' இருமல் என்னை அமைதியாகத் தூங்கவிடாது போல் தெரிகிறது. நான் மீண்டும் ஒருக்கணித்துப் படுத்து, அவர் பார்வையிலிருந்து தப்ப முயல்கிறேன். அவர் விடுவதாக இல்லை.

"தம்பி! தம்பி! இந்த டிக்கட்டைக் கொஞ்சம் பாரு. திருத்தணிக்கு மூனு ரூவான்னுனுங்க. பத்துரூபா நோட்டு குடுத்ததுக்கு அந்த ஆளு ஆறரை ரூவாதான் குடுத்தாரு. டிக்கட்டு சார்சு அதிகமாயிடுச்சா! கொஞ்சம் பார்த்துச் சொல்லுப்பா...!!"

எனக்கு நினைவு வந்தது. என்னிடங்கூட அந்த ஆளு ஆறு ரூபா ஆறு காசுக்கு ஆறு ரூபா ஐம்பது காசு எடுத்துக்கிட்டுச் சில்லரை இல்லேன்னு தகராறு செய்தான். பிறகு சண்டைபோட்டு நாற்பது காசை வாங்கினேன்...இந்தக் கேசும் அப்படித்தான் இருக்கும் என்ற நினைப்பில் படுத்தபடியே கையை நீட்டி அவர் டிக்கட்டை வாங்கிப் பார்த்தேன். 'அய்யோ!' டக் கென்று எழுந்து உட்கார்ந்தேன்.

"என்ன தாத்தா! இது திருத்தணி டிக்கட்டு இல்லே; பிளாட்பாரம் டிக்கட்டு. போய்க் கேளு. விடாதே!" என்று தயங்கித் தயங்கி, என் துணைக்கு நின்ற அந்தக் கிழவரை மெல்லக் கிளப்பி அனுப்பிவிட்டுட்டு 'அப்பாடா' என்று மல்லாந்தபடியே உறங்க முயன்றேன்,

மனம் மீண்டும் வீட்டுக்குச் சென்றது. 'இவனோடே சேரக் கூடாது. இங்கே நின்னு பேசக்கூடாது. வெறும் பனியனோடு தெருவில் போகக்கூடாது. கிராப் வெட்டி கிட்டா வீட்டுக்கு வா; இல்லாட்டி எங்காவது போய்த் தொலே. எனக்கு அவமானமா இருக்கு ஒன்னெ பார்த்தா. நாய் திரியற மாதிரி இப்புடித் திரியுறியே!...'

'ஏன்'டா! தம்பிங்களுக்கு வேண்டாம்...? இப்புடி கொட்டிக்கிறியே! திங்கிறப்பத்தான் வீட்டு நெனப்பு வருது. மஞ்சத் தண்ணி தெளிச்சுவிட்ட கோயில் மாடு மாதிரி வளர்ந்துட்டே!

மீண்டும் அப்பா, அம்மா ஏச்சுரைகள் நினைவுக்கு வருகின்றன. வீட்டை நினைக்கவே வெறுப்பாக இருக்கிறது.

அப்போது யார் யாரோ இரண்டு மூன்றுபேர் என் பெட்டியில் ஏறும் காலடி ஓசைகள் கேட்கின்றன. நன்றாகத் தூங்குபவன்போல் பாசாங்கு செய்கிறேன்.

'இதோ! இந்தப் புள்ளெ யாண்டாந்தா' கிழவர் குரல் கேட்டுக் கண்ணைத் திறந்து பார்ப்பதற்குள்,

"டேய்...ரவுடிப் பயலே! மூஞ்சைப் பாரு கிருதா! தலெயெப் பாரு பாகவதர் டோப்பா! ஸ்டூடண்டு மாதிரி நடிப்பு! இப்புடி ஒரு திருட்டு. டேய் இந்தக் கிழவனோட டிக்கட்டு எங்கடா?"

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. கிழவருக்கு அருகில் இரண்டு போலிசுக் காவலர்கள் நிற்கிறார்கள். எனக்கு ஒன்றும் காவலர் பயம் இல்லை. எத்தனையோ காவலர்கள் கண்ணிலே விரலைவிட்டு ஆட்டியிருக்கிறேன், மாணவர் வேலை நிறுத்தத்தின்போது. எங்களைப் பார்த்தால் காவலர்களுக்கு உள்ளுக்குள் பயம்.

எனவே பயம் இல்லாமல், 'என்னய்யா! நீ என்ன டி. எக்ஸ். ஸாரா? என் டிக்கட் பற்றிக் கேட்க' என்று அலட்சியமாகப் படுத்தபடியே பேசுகிறேன்.

'ஓகோ! அவ்வளவு திமிரா; எடுடா ஒன் டிக்கட்டை" இன்னொரு முரட்டுக் காவலன் நெருங்கி வருகிறான்.

எழுந்து உட்கார்ந்து, நான் என் டிக்கட்டை எடுத்துக் கொடுக்கிறேன். சென்னைக்கு உள்ள என் டிக்கட்டை அவன் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டுப் பக்கத்திலிருந்த காவலனுக்குக் காட்டுகிறான்.

"ஏ கெழமே! ஒன் டிக்கட்டு திருத்தணிக்குத்தானே!"

"ஆமாங்க சாமி! இந்தப் புள்ளெயாண்டாங் கிட்டே தான் குடுத்தேன்!"

நான் மறுக்கவில்லை.

இரண்டு காவலர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

'மிஸ்டர் கொஞ்சம் எழுந்திருங்க...' மரியாதையுடன் பேசுகிறார்கள்...'ஒங்களைக் கொஞ்சம் சோதனை போடணும். இத்தக் கிழத்தோட திருத்தணி டிக்கெட்டெ நீங்க எடுத்துக்கிட்டு பிளாட்பாரம் டிக்கட்டைக் கொடுத்து ஏமாத்திட்டிங்'ன்னு புக்கிங் கிளார்க் சொல்றாரு. இதுவும் 'ஆமாம்' போடுது. எதுக்கும் ஒங்களை ஒருதரம் செக் பண்ணிடணும். அது எங்க டூட்டி..." என்று மேலும் மரியாதையோடு பேசினான் மெலிந்த காவலன்.

"மடியிலெ கனம் இருந்தாத்தானே வழியிலெ பயம்! 'சரி'ன்னு எழுந்து நின்றேன். என் சட்டைப் பை பேண்ட் பை எல்லாவற்றையும் துருவித் துருவிப் பார்த்தார்கள்.

மெடிகல் காலேஜ் அய்டெண்டிடி கார்டைப் பார்த்து விட்டு, "நீங்க மெடிகல் காலேஜ் ஸ்டூடண்டா!" என்று வியப்போடும் விநயத்தோடும் கேட்டுவிட்டு,

அருகிலிருந்த கிழவனைப் பார்த்து, 'ஏ கெழமே! இவரு ஒண்ணும் உன் டிக்கட்டை மாத்துலே...வேறே எவன் கிட்டேயாவது குடுத்தியா...?' என்று அதிகார தோரணையில், அந்தக் கிழவனை ஒருவன் மிரட்டினான்.

'புக்கிங் கிளார்க்கே ஏமாத்தியிருப்பாரோ?' என்று, இன்னொருவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

அதற்குள் கிழவன், 'ம்...ம்...' என்று எதையோ நினைத்துக் கொண்டவன்போல, "டிக்கட் வாங்கிட்டுத் திரும்பினப்போ, ஏ தாத்தா! எங்கே டிக்கட்டைக் காட்டுன்னு' ஒருத்தன் கேட்டான். போர்ட்டர் மாதிரி இருந்தான். அவன் வாங்கிப் பார்த்துட்டுத் திரும்பிக் குடுத்துட்டான்" என்று அழாக்குரலில் சொன்னான், அந்தக் கிழவன்.

"சரி போ. போயி இன்னொரு டிக்கட்டு வாங்கிக் கிட்டுப் போய்ச்சேரு" என்று அந்தக் கிழவனை அனுப்பி விட்டு, "சாரி சார்" என்று என்னிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விடுகின்றனர்.

நன்றாகக் காலை நீட்டி விட்டுக்கொண்டு படுக்கிறேன். வண்டி புறப்பட மணி அடிக்கும் சத்தம் கேட்கிறது. இனி அப்பா தேடி வரமாட்டார். வந்தாலும் கண்டுபிடிக்க முடியாது...என்று நிம்மதியாகப் பெருமூச்சு ஒன்று விட்டுக்கொண்டே தூங்கத் துவங்குகிறேன்.

"சார் கொஞ்சம் காலெ மடக்கிக்கிறிங்களா" என்ற சத்தம் கேட்கிறது. விழித்துப் பார்க்கிறேன். ஒரே கூட்டம். சுற்றும் முற்றும் கண்களைத் துழாவிப் பார்க்கிறேன். பால்

வியாபாரிகள், பழ வியாபாரிகள், சென்னையில் பல அலுவலகங்களுக்குச் செல்லும் பணியாளர்கள் பலர் குழு குழுவாக அமர்ந்து சீட்டு ஆடிக்கொண்டிருக்கின்றனர். நிமிர்ந்து உட்காருகிறேன். அரக்கோணம் வந்திருக்கிறது.

என்ன விளையாடுகிறார்கள் என்று அங்கும் இங்கும் பார்க்கிறேன். என்னென்னவோ விளையாடுகிறார்கள். என்ன என்று ஒன்றும் விளங்கவில்லை. அந்தக்'கலை' மட்டும் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. ஒரு ஆட்டம் என் மனதைக் கவர்ந்து இழுக்கிறது. அந்த விளையாட்டு மிக எளிதாகத் தோன்றுகிறது. ஒரு மீசைக்கார ஆள் சீட்டுக்களைக் கலைத்து வைக்கிறான். வேட்டிகூட இல்லாம அண்டர் டிராயருடன் குத்துக்காலிட்டு உட்கார்ந்து கொண்டிருந்த இன்னொரு இளைஞன், வாயிலிருந்த பீடியை இடதுகையில் பிடித்துக்கொண்டு, வலதுகையால் அந்தச் சீட்டுக்கட்டிலிருந்து ஒரு சீட்டை உருவி வெளியில் தெரியும்படி போடுகிறான். 'உள்ளே வெளியே', 'உள்ளே வெளியே' என்று கட்டிலிருக்கிற மற்றச் சீட்டுகளை எடுத்துப் போட்டுக்கொண்டே வருகிறான், அந்த மீசைக்காரன். சுற்றியிருப்பவர்களும் அவனும் ஒன்று, இரண்டு, ஐந்து என்று ரூபாய் நோட்டுக்களை வீசிக்கொண்டிருக்கின்றனர். வெளியே தெரியும்படி எடுத்துப்போட்ட சீட்டு எண் இன்னொரு பக்கத்தில் விழுகிறது. உடனே அந்தப் பக்கத்தில் பணம் கட்டியவர்கள் இன்னொரு பக்கம் இருந்த பணத்தையும் சேர்த்து எடுத்துப் பிரித்துக்கொள்கின்றனர்.

''ஆ!' எவ்வளவு எளிய சம்பாதனை' என் மனம் சிலிர்க்கிறது. கை துறு துறுக்கிறது. வீட்டிலிருந்து எடுத்து வந்த ஐம்பது ரூபாயில் டிக்கட்டுப்போக மீதிப் பணம் அப்படியே இருக்கிறது. அடுத்த ஆட்டம் துவங்குகிறது. 'வெளியே' ரூபாய் பத்து வைக்கிறேன். 'ஓ' எனக்கும் லக் இருக்கிறது. இன்னொரு பத்து

சேர்ந்து வருகிறது. பிறகு இருபதையும் வைத்துப் பார்க்கிறேன். நாற்பது. ஆசை அதிகரிக்கிறது. கையில் கிடைத்த நாற்பதோடு, பையில் இருக்கிற முப்பதையும் சேர்த்து வைக்கிறேன். ஒரே விஞடி. 'அய்யோ!' எழுபதும் போய் விடுகிறது. ஒரு கலக்கம். ஆனுல், யாருக்கும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லே. மெல்லப் பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டுப் பார்க்கிறேன். மூன்று ரூபாய் அறுபது காசு. மூன்று ரூபாயையும் வைக்கிறேன். போச்சு. போகப் போக நெஞ்சில் வெறி வளர்கிறது. சரி இந்த அறுபது காசு மட்டும் என்னத்துக்கு ஆகப்போவுது. அதையும் வைக்கிறேன். பக்கத்தில் இருந்தவர் என்னவோ போல் இரக்கத்தோடு என்னேப் பார்க்கிருர். அந்த அண்டர் டிராயர் இளைஞன் அலட்சியமாக ஆள்காட்டி விரலேச் சுட்டிக் காட்டி, அந்தக் காசைத் திருப்பி எடுத்துக் கொள்ளுமாறு சைகை செய்கிருன். மூன்ருவது ஆள் 'தம்பி! ரூபாய்க்குக் குறைஞ்ச பணயம் இல்லெ!' என்று எனக்கு விளக்குகிருர்.

'காசெல்லாம் போயிற்று. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அம்மா நினேப்பு வருகிறது. இன்னேரம் குளித்து முழுகிவிட்டு, இராமர் படத்தின் முன்பு, "ஏழுமலேயா! என் புள்ளெயெக் காப்பாத்துடா—சீக்கிரம் வீட்டுக்குக் கொண்டுவந்துடுடா!" என்று சாமி அறை விளக்கேற்றி அழுது தொழுது கொண்டிருப்பாங்க. என் கண்கள் கலங்கு கின்றன. 'சீ, இது என்ன! அதற்குள் நான் கோழையாகி விட்டேஞ?' என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, என்னேயே நான் சமாளித்துக் கொள்கிறேன்.

அப்பா நினேவு தொடர்கிறது. ஒதுக்கித் த்ள்ள இயலவில்லே. அவர் நாள் முழுதும் என்னிடம் சொல்வதை எல்லாம் கூட்டிக் கழித்துச் சுருக்கிஞல் இதுதான்: 'நீ மாணவன்; அந்தப் பெயரில் வேறு வேலே ஒன்றும்

செய்யாமல் சாப்பிடுறே! நல்லா உடுத்திக்கிறே; மாணவன் கடமையைச் செய்; கொஞ்ச நேரமாவது படி' இதுதான் அப்பா நாள் முழுதும் கத்துவதற்கு உள்ள பொருள். எனக்குப் புரியுது. வீட்டுக்குள் நுழைந்ததும் தொண தொணன்னு ஆரம்பிச்சிடுவார். உடனே வீட்டைவிட்டு எங்காவது போய் அவர் தூங்கினதுக்கு அப்புறம் வரலாம்னு தோணும்.

எல்லாரும் இறங்குகிறார்கள். செண்ட்ரல் வந்து விட்டது. பசி தாங்கமுடியவில்லை. தலை சுத்துவதுபோல் இருக்கிறது. நிலையச் சிற்றுண்டிச் சாலைக்குப் போகிறேன். கண் ஸ்டாலைச் சுற்றி வட்டமிடுகிறது. கை பையைத் துழாவிப் பார்க்கிறது... மனம், இருக்கிற காசுக்கு என்ன வாங்கலாம் என்று சிந்திக்கிறது. ஆம். இப்போதுதான் சிந்திக்கத் துவங்கியிருக்கிறேன்—அதுவும் வயிற்றைப் பற்றி. மசால் தோசை 70 காசு; பூரி செட்டு 50 காசு; இட்டலி இரண்டுக்கு 30 காசு. பையில் அறுபது காசுகள் இருக்கின்றன. இரண்டு செட்டு இட்டலி வாங்கிச் சாப்பிட்டு, அதன்மேல் ஒரு நாலு தம்ளர் தண்ணீர் குடித்து ஒருவாறு வயிற்றைத் திருப்தி செய்கிறேன். 'இனி என்ன செய்வது?' என்ற தடுமாற்றத்தோடு மெல்ல வெளியே வருகிறேன் .

டாக்சிகள், ஆட்டோக்கள் நிற்கின்றன. அவைகளை ஓட்டத் தெரியாது. கூவம் நதிப் பாலத்தைத் தாண்டி, மூர் அங்காடிப் பக்கம் வருகிறேன். சைகிள் ரிக்ஷாக்கள் பல நிற்கின்றன. வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் வேப்பமர ரிக்ஷா ஸ்டாண்டில் இரவில் விளையாட்டாக ரிக்ஷா ஓட்டிப் பழகியது இப்போது கைகொடுத்து உதவும் என்று நினைக்கிறேன். ஒரு தெளிவு, தெம்பு வருகிறது. அந்த ரிக்ஷாக்களை நெருங்குகிறேன்.

"என்ன சாரி! ரிக்ஷா வேணுங்களா!" ஒரு கிழவன் கேட்டுக் கொண்டே, ரிக்ஷாவோடு என்னை நோக்கி வருகிறுன்.

'வேண்டும்' என்பதுபோல் தலையை அசைத்துக் கொண்டே, அருகில் போய், "ஏறுவதற்கு இல்லெ தாத்தா! ஓட்டிச் சம்பாதிக்க! வாடகைக்கு ரிக்ஷா வேணும்" என்று சொல்கிறேன். கிழவன் ரெண்டு மூன்று ரிக்ஷாக்காரன்களோடு கலந்து பேசி, கடைசியில் மூர் அங்காடிக்குப் பின்னுலே இருக்கிற காயலாங் கடைக்காரன் ஒருத்தனிடம் என்னை அழைத்துக் கொண்டுபோய், என்னைக் காட்டி, அவன் காதில் என்னவோ முணுமுணுக்கிறுன். பார்த்தா பக்கா ரவுடி மாதிரி இருக்கிறுன்; அவன் முகம் கொலைக்குக்கூட பயப்படாதவன்னு சொல்லுது.

"டேய் தம்பி! ரெண்டி மூனு நாளைக்கு இந்தக் கெழவனோடே ஜாயிண்டா போய் வா! ஊருக்குப் புதுசில்லே! எடம் தெரியாது...ஆமாம்" என்று அங்குக் கிடந்த நான்கைந்து ரிக்ஷாவில் ஒன்றை எடுத்துக் கொள்ள என்னை ஏவுகிறுன்.

அவன் மனக் கருத்து எனக்குப் புரியாமல் இல்லை. நான் எடுத்துக்கொண்டு ஓடாமல் இருக்கவும், என்னைப் பற்றித் தெரிந்துகொள்ளவும்தான் கிழவனை பாடிகாடாக அனுப்புகிறுன் என்பது எனக்கு விளங்குகிறது. உம்...இது ஒரு ரெண்டு மூன்று நாளைக்குத்தான். 'சரி' என்று தலையசைத்துச் சொல்லிவிட்டு, அந்தத் தாத்தாவுடன் தொழிலுக்குப் புறப்படுகிறேன்.

வியர்வை சொட்டுகிறது. ஓட்டப் பந்தயத்தில் ஓடிஓடி வலுவடைந்த உடம்பு சளைக்காமல் உழைக்கிறது. நண்பகல் வயிருரச் சாப்பிடுகிறேன். சாப்பிட்ட உடனேயே

இன்னொரு சவாரி தயாராகக் காத்திருக்கிறது. தாத்தா கூப்பிடுகிறார். யாரோ ஒரு பெரிய குடும்பம். எங்கோ பார்த்த மாதிரி நினைவு. முகத்தை காட்டாமல் ரிக்ஷாவில் அமர்கிறேன். விரைவாகக் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்புகிறோம். போதும் இன்று உழைத்தது. பதினேழு ரூபாய் சேர்ந்துவிட்டது. தாத்தாவிடம் சொல்லிவிட்டுக் அந்தக் காயலாங்கடை நோக்கிப் போகிறேன். வழியில் ஒரு கூல்டிரிங் கடை. ஒரு சர்பத் குடிக்கிறேன்—குளுகுளு என்று இருக்கிறது. ஒரு மகிழ்ச்சி. நான் சம்பாதிக்கத் துவங்கிவிட்டேன். என்னாலும் சம்பாதிக்க முடியும். நான் தெண்டச் சோறு இல்லை. 'உம் என்று மனதில் ஒரு 'வன்மம்' வருகிறது. 'இப்போதைக்கு வீட்டுக்குப் போகப் போவதில்லை' என்று எனக்குள் சொல்லிக்கொண்டே, காயலாங் கடையை அடைகிறேன்.

'வாடா தம்பி! எங்கே அந்த கெயக் கயுதை?' என்று அலட்சியமாக என்னை வரவேற்கிறான். 'பளார்'னு ஒன்று கொடுக்கத் தோன்றுகிறது. 'உம்...ரெண்டு நாள் போகட்டும்' என்று என்னையே நான் சமாதானம் செய்து கொண்டு, ரிக்ஷாவை ஒரு ஓரத்தில் தள்ளி விட்டுவிட்டு, ஐந்து ரூபாய் வாடகையை அவன் முகத்தில் வீசி எறியப் பையில் கையை விடுகிறேன்.

"அய்யோ! பணம் எங்கே?" என் வாழ்நாளிலேயே முதன்முதல் நான் பயந்து வருந்துகிறேன். 'ஆ! சர்பத் ரசித்துக் குடித்துக் கொண்டிருந்தபோது, ஐந்தாறு பேர் நெருங்கி நின்றது நினைவுக்கு வருகிறது. 'பிக்பாகெட்' அடிச்சிட்டானுங்களா?

"என்னடா பையா! நம்ப கிட்டேயே வேலெயெ காட்றே". உட்கார்ந்திருந்த அந்த ரவுடி முதலாளி எழுந்து என் அருகில் வருகிறான். ஒரே சாராய வாசனை.

எனக்கு அச்சமாக இருக்கிறது. வாய் பணிவோடு பேசு கிறது.

"அய்யா! அய்யா! பதினேழு ரூபா சம்பாதிச்சேன். யாரோ பிக்பாக்கெட் அடிச்சுட்டான்."

"டேய் பொடிப்பயலெ! பிக்பாக்கெட்டா அடிச்சுட் டான்'னு கையை ஓங்குகிறான். வாலிபால் ஆடி ஆடி மரத்துப்போன என் முட்டியால் ஒரு குத்து விட்டுவிட்டு, ஓட முயல்கிறேன். 'அம்மாடியோவ்' என்று கத்திக் கொண்டே, ஓடுகிற என்னைத் தன் காலால் உதைத்து இடறிவிழச் செய்கிறான். விழுந்த என் சிண்டை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, 'பளார் பளார்' என்று என் முகத்தில் அறைகிறான்.

'அம்மா!...அம்மா!! உண்மையில் வாய்விட்டு அழு கிறேன்.

"ஓ, என் அம்மாதான்! முழுகிய கூந்தலிலிருந்து நீர் சொட்டச் சொட்ட கையில் எடுத்த குங்குமத்தோடு என் பக்கத்தில் வந்து, 'ஏண்'டா கண்ணு! ஏண்'டா கண்ணு'ன்னு தவித்தபடியே நிற்பவர் என் அம்மாதான்.

கலங்கிக் கண்விழித்துச் சுற்றும் முற்றும் பார்க் கிறேன். படுத்துக் கொண்டே விழிக்கும் என்னைப் பார்த்துத் தம்பிகள் சிரிக்கின்றனர்.

'என்னடா கண்ணு! கனவு கண்டையா! பயந் துட்டியா!' அம்மா ஆறுதல் சொல்கிறார்.

'அம்மா! அம்மா!' என்னை அறியாமல் ஏனோ அழுகிறேன்.

# அவல நாடகம்

**சி**த்தார்த்தி ஆண்டு சித்திரைத் திங்கள் ஒன்பதாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலே 7-30—9-00க்குள், என் மகள் செல்வி சகுந்தலேக்கும், சித்தூர் கோபால்சாமி அய்யங்கார் மகன் டாக்டர் சீனுவாசனுக்கும், சித்தூர் சீவகாருண்ய சபையில் நிகழவிருக்கும் திருமணத்தில் தாங்களும் தங்கள் சுற்றத்தாரும் நண்பர்களும் மூன்று நாட்கள் முன்னதாகவே வந்திருந்து சிறப்பிக்க வேண்டு மாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
நப்பின்னே நம்மாழ்வான்

என்ற திருமண அழைப்பிதழை என் மனேவி பொன்னிக்குக் காட்டினேன்.

'ஆமாம்—நப்பின்னே நம்மாழ்வான்னு இருக்கே. ஒங்க நண்பர் நம்மாழ்வார்தான் ரெண்டு மூணு வருடங் களுக்கு முன்பு காலமாயிட்டாரே' என்ருள்.

'அதனுல்தான் அவன் மனேவி தன் பெயர் போட்டு அச்சிட்டிருக்கா' என்று சொல்லி, 'எப்பொ புறப்

படுவோம்? இன்னும் நான்கைந்து நாள்தான் இருக்கு' என்றேன்.

ஆமாம். அழைப்பிதழ் எல்லாருக்கும் அனுப்பராப்ல ஒங்களுக்கும் அனுப்பிச்சுட்டாப் போதுமா! அப்பொ என்னமோ நீங்கதான் அவரொட உயிர் நண்பர். ஒங்க துணையாலேதான் ரெண்டு பேரோட திருமணமே நடந்துச்சுன்னு பீத்திக்கிட்டீங்க. 'அவரு மாரடைப்லெ இறந்துட்டாருன்னு தெரிஞ்சு, மருத்துவ மனையில் வரதனைப் பெத்த மூணும் நாளேன்னு பாக்காம, என்னை விட்டுட்டு ஓடினீங்க. இப்ப என்னடான்னு, ஒரு கால் கடுதாசிகூட 'வாங்கன்னு' எழுதாமெ வெறும் பத்திரிகையை மட்டும் அனுப்பிச்சிருக்கா. இதுக்குப் போவுனுமா என்ன?' என்று கன்னத்தைத் தோளில் இடித்தபடியே சமையல் உள்ளுக்குள் போனாள்.

நான் வாயடைத்துப் போனேன். அவள் சொல்வதும் சரிதான். ஒருயிர் ஈருடல்போல் நானும் நம்மாழ்வாரும் பழகினோம். ஒருநாள் இருநாள் பழக்கமா என்ன? முதல் வகுப்பிலேயிருந்து பத்தாம் வகுப்பு வரை குடவாசல் துவக்க உயர்நிலைப் பள்ளியிலேயே படித்தோம்; குடமுருட்டி ஆற்றில் குதித்து விளையாடினோம். அப்புறம் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் தமிழ் படித்தேன். அவன் பொருளாதாரம் படித்தான். அவனும் நானும் அப்படி அங்கே படித்துக் கொண்டிருக்கும் போதுதான் நப்பின்னையைச் சந்தித்தோம்.

அன்று முத்தையா செட்டியார் இசைப் போட்டி நிகழ்ந்து கொண்டிருந்தது. பலர் கலந்து கொண்டனர். நம்மாழ்வானுக்கும் கொஞ்சம் பாட்டு வரும். அவன் தாத்தா நாராயணசாமி பாகவதர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இசை வித்துவானாக இருந்தவர். அந்திம

காலத்தில் அவர் சொல்லிய கொஞ்சம் கீர்த்தனைகள் அவனுக்கு நல்ல பாடமாயிருந்தன. அவன் கலந்துக் கிருன்னு நானும் அங்கே போனேன். அந்த விழாவிலே 'பெரியவனை மாயவனை' என்ற சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடலையும், 'தம்முடைய தண்ணளியும்' என்ற கானல்வரிப் பாடலையும், 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்ற நாவுக்கரசர் பாடலையும் மனமுருக அவள் பாடினாள். அவள் இனிய குரலும், அந்தப் பாடல் களும் எல்லோரையும் கவர்ந்துவிட்டன.

தெலுங்குக் கீர்த்தனைகளே கேட்டுக் கற்றுப் பாடிவந்த நம்மாழ்வானை, அது தன்வயப்படுத்தி விட்டது எனலாம். இசை விழா முடிந்தும்கூட அவன் எழவில்லை.

'என்னடா லயமாயிட்டியே. எழுந்திரு. விழா முடிஞ்சிப் போச்சு'ன்னு தட்டி எழுப்பினேன்.

'உம். உம்... முடிஞ்சி போச்சா... 'தம்முடைய தண்ணளி...' என்று அவள் பாடியபடி பாடிக்கொண்டு, 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்...' என்ற அடியைப் பலமுறை பாடினான். அவன் கண்கள் கசிந்தன. இளங்கோ அடிகளாரின் நெஞ்சை அள்ளும் சிலம்பின் சிகரமாக அமைந்த அந்தப் பாடல் அவனைக் கவர்ந்ததில் வியப்பில்லை. ஆனால் அவன் இளங்கோவின் பாடலைவிட அதனைப் பாடியவளிடம்தான் பெரிதும் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டான். வாழ்ந்தால் அவளோடுதான் வாழ்வேன்னு மஜ்னுவாகிவிட்டான். அவளும் லைலாவாகத்தான் நடந்து கொண்டாள்.

அதன்பின் விசாரித்தோம். அவள் மாங்குடி சாம்பசிவ அய்யர் பேர்த்தி என்று தெரிந்தது. இந்தச் சுமார்த்தானை எப்படி அவளுக்கு மணம் செய்து வைப்பது என்று தவித்தேன். அவன் தந்தை திருவரங்கம், நல்லவர்தான்.

உலகம் அறிந்தவர்தான். அய்யங்காருக்கும் அய்யருக்கும் இடையே நடக்கும் இந்தத் திருமணத்தைத் தடைசெய்ய மாட்டார்தான். ஆனல் அவருக்கு வாய்த்த இரண்டாம் தாரம் ஒரு மாதிரி... முதல் தாரத்தின் ஒரே பையனுகிய நம்மாழ்வானை எப்படியாவது ஒழித்துக்கட்ட எண்ணி யிருப்பவள். அதனுல்தான் தயங்கினேன்.

மாங்குடி சாம்பசிவ அய்யர் அப்பனையும் அம்மாவையும் குழந்தையிலே இழந்த தன் பேர்த்தி நப்பின்னைக்குச் சீர்வரிசை கொடுத்துத் திருமணம் செய்து வைக்கும் நிலையில் இல்லை. எப்படியோ ஒரு சிவன் கோயில் குருக்கள் ஒருவர் கிடைத்தால்கூடத் திருமணம் செய்து கொடுத்துவிட தயாராயிருந்தார்! நான் போய்ப் பார்த்ததும், அய்யங்கார் பிள்ளையாண்டான் என்றதும், முதலில் தயங்கினுர். விவரமாக நம்மாழ்வானின் கௌரவமான குடும்பநிலை, அவனுக்கு திருப்பதி தேவஸ்தானத்தில் கிடைக்கப் போகும் பெரிய வேலை எல்லாத்தையும் எடுத்துச் சொன்ன பிறகு, 'ஆமாம் தம்பி! நீ சொல்றதும் சரிதான். நானே சாகப்போறவன். அவளோ கிளிமாதிரி இருக்கா—கடவுள் நல்ல குரலையும் கொடுத்திருக்கார்—பொன்னெ கொண்டுபோயி மண்குடத்திலெ வக்கிற மாதிரி சுமார்த்தங்கரதுக்காக எவனே ஒரு முரடன் கையிலே கொடுக்கிறதைவிட, அந்த அய்யங்கார் பிள்ளையாண்டானுக்குக் கொடுக்கலாம்னே தோணுது. எதுக்கும் அந்தப் புள்ளையை அழைச்சிகிட்டு வா—நான் ஒருமுறை நேரா பாக்கணும் பேசணும்'ன்னு சொன்னுர். அவனும் போனுன். அவருக்கும் பிடித்துப்போச்சு. நேரே சிதம்பரத்திலேயே பெருமாள் சந்நிதிக்கும் சிவன் சந்நிதிக்கும் சென்று மாலை மாத்திக்கிட்டுப் பதிவுத் திருமணம் செய்துகிட்டாங்க. இதையே ஒரு சாக்கா வைத்து, அப்பனும் புள்ளெயும் கூடாமெ பிரிச்சிட்டா அந்த இரண்டாந் தாரத்து அம்மா...

இப்படிச் சென்று கொண்டிருந்த என் நினைவை, 'சார்! சார்!' என்ற ஆபீசு பையன் குரல் தடுத்தது.

எட்டிப் பார்த்தேன். 'முக்கியம்' என்றிருந்த ஆபீசு கோப்பு ஒன்றையும், மூன்று கடிதங்களையும் கொண்டு வந்திருந்தான். கோப்பினை வாங்கிப் பக்கத்தில் வைத்து விட்டு, யார்யாரிடமிருந்து வந்த கடிதங்கள் அவை என்று பார்த்தேன். ஒன்று நப்பின்னையிடமிருந்து வந்திருந்தது.

'அன்பான அண்ணு! அண்ணு என்றும் தம்பி என்றும் அழைப்பதற்கும், மாமா என்றும் மாமி என்றும் அழைப்ப தற்கும் புண்ணியம் செய்யாத அபலை, அவர் போனபிறகு எழுதும் முதல் கடிதம் இது. சகுந்தலைக்குத் திருமணம். அழைப்பிதழை வீட்டுக்கும் கடிதத்தை ஆபீசு முகவரிக்கும் எழுதினேன். இரண்டு மூணு வருடமா உங்கள் தொடர்பு இல்லாததால், இப்பொ இடம் மாறியிருப்பிங்கோன்னு சந்தேகப்பட்டுத்தான் இப்படி இரண்டு இடங்களுக்கும், திருமண அழைப்பிதழை வீட்டுக்கும், கடிதத்தை ஆபீசுக்கும் எழுதினேன். சித்திரை ஒன்பதாந் தேதி திருமணம். தவருமே முன்னயே வந்து எல்லாம் செய் யணும். அவர் இல்லை. நீங்க அவராக இருந்து எல்லாம் செய் யணும். அண்ணிக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லுங்க. அண்ணியைத் தவருமே அழைச்சிக்கிட்டு வாங்க......

அண்ணனுக்குத் தெண்டனிட்டு எழுதிக் கொண்டது,
நப்பின்னை நம்மாழ்வான்.

'அடியே! பொன்னி. அடியே பொன்னி...' என்று சமையல் உள்ளுக்குள் ஓடினேன்...சோறு வடித்துக் கொண்டிருந்த பொன்னி, கையை எடுக்காமெ கழுத்தைத் திருப்பி என்னைப் பார்த்தாள்.

'இதோ பாரு, என்னமோ கடுதாசி நப்பின்னை போடலேன்னு அங்கலாய்த்துக்கிட்டியே! இதோ

போட்டிருக்கா பாரு. உன்னையும் என்னையும் மூனு நாட்களுக்கு முன்னேயே வரச்சொல்லியிருக்கிறு பாரு!' என்று கடிதத்தைக் கொடுத்தேன். கஞ்சி வடித்துக் கொண்டிருந்த பாத்திரத்தை ஒழுங்காகச் சரிபார்த்து வைத்துவிட்டுக் கடிதத்தை வாங்கிப் படிச்சா. 'ஆமா ஏதோ கடைசியிலே ஒரு வரி எழுதியிருக்கா. போயித்தான் ஆகணும்ஞ, திருமணத்தன்னைக்குப் போவோம். மூனு நாலுநாள் முன்ன போற வேலே நமக்கு வேண்டாம். புள்ளெ ஊர்லதானே நடக்குது. அவுங்க கல்யாணமா இருக்கும். இவ பணத்தை மொத்தமா கொடுத்திருப்பா. முன்னெ போயி என்னத்தை பண்ணப் போறும். நேரா திருப்பதிக்குப் போயி, ஏழுமலையானைக் கும்பிட்டுட்டு, கல்யாணத்துக்குப் போனு போதும்' என்று திட்டமாகச் சொல்லிவிட்டாள் பொன்னி—அவளே எனக்கு நன்ருகத் தெரியும். அதற்குமேல் வற்புறுத்திஞல் அவளும் வரமாட்டாள், என்னையும் போகவிடமாட்டாள். 'இந்த வரைக்கும் ஒப்புக் கொண்டதே சரி' என்று, அவள் கருத்துப்படி திருமலைக்குப்போய் நெடியோனை வணங்கிக் கொண்டு, காலை 6 மணி திருவண்ணுமலை பேருந்தில் புறப்பட்டுச் சித்தூரை அடைந்தோம். பேருந்து நிலையத்திலேயே திருமண மேள முழக்கம் கேட்டது. அதுதான் சீவகாருண்ய சபை என்று விசாரித்துத் தெரிந்துகொண்டு நாங்கள் உள்ளே நுழைந்தோம்.

யாரோ இருவர் எல்லோரையும் வரவேற்பதுபோல் எங்களையும் வரவேற்றனர். வாயிற்படியில் நின்று நப்பின்னை தன்னை வரவேற்கவில்லையே என்று பொன்னி மிகவும் பொருமிஞள். நான் கவனியாதவன்போல் மணவறை அருகே போய்ப் பார்த்தேன். பெண்ணை மணமனையில் அமர வைத்து ஏதேதோ செய்து கொண்டிருந்த நப்பின்னை, இன்னெரு மணமகள்போல்

தோன்றினுள். என்னைப் பார்த்து 'நமஸ்காரம்' வாங்க— இப்பத்தான் வந்தீங்களா! வாங்க' என்ருள். என் பின் நின்று கொண்டிருந்த பொன்னியைப் பார்த்து, 'வாங்க அண்ணி, வாங்க' என்று மூன்றே சொற்களில் விசாரித்து விட்டுத் தன் வேலையில் ஈடுபட்டாள்.

கழுத்தை வளைத்துத் தோளில் இடித்துக்கொண்ட படியே, 'பொண்ணுக்கும் அம்மாவுக்கும் வித்தியாசமே தெரியலெ'. புருஷனை இழந்துட்டு மூளியா மொட்டையா— இருக்க வேண்டியவ—இப்படி கல்யாணப் பொண்ணு மாதிரி—அவ பொட்டும் பூவும் சடையும் பட்டுப்புடவையும் பாருங்க' என்று முணு முணுத்தாள்.

பொன்னியின் பேச்சு எனக்குக்கூட ஓரளவு சரியாகத் தான் பட்டது. அவ்வளவு நெருங்கிய என்னை யாரையோ வரவேற்பதுபோல வரவேற்றது என்னவோபோல இருந் தது! 'அண்ணு' இப்ப அவரு இல்லையே!' என்று என்னைக் கண்டதும் கதறிக் கலங்கிக் கண்ணீர் விடுவா என்று நினைத்துப் போன எனக்கு, அவள் செய்கை சப்பென்று போய்விட்டது. அதோடுகூட யார் யாரோ நாலைந்து அமெரிக்கப் பெண்களும் ஆண்களும் வந்திருந்தாங்க. அவுங்ககிட்டே. எல்லாம் ஆணுன்னுகூடப் பார்க்காம கைகொடுத்துப் பேசினுள்.

ஏதோ பல்லைக் கடித்துக்கொண்டு திருமணம் வரைக்கும் இருந்துவிட்டு, உடனே புறப்பட்டேன். புறப்பட்டுக் கொண்டிருந்த எங்களை, எங்கோ இருந்து பார்த்துவிட்டு...ஒரே ஒரு நிமிடம் தன்னேடு வரும்படி, மாடியிலிருந்த ஒரு அறைக்கு அழைத்துக் கொண்டு போனுள். மெல்லக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, என் காலிலும் அவள் காலிலும் விழுந்து கோவென்று வாய்விட்டு அழுதாள். தலையில் வைத்திருந்த

டோப்பா மயிர் கழண்டு விழுந்து விட்டது. மொட்டைத் தலையுடன் நிமிர்ந்து, 'அண்ணு' அந்தப் பையன் அமெரிக்காவிலே படிச்சவன்—அம்மா மொட்டைகிட்டை அடிச்சிருந்தா—மணவறைக்கே வரப்படாது—நான் சொல்ற படி தன்னைப் பார்க்க வர்ரவுங்க கிட்டெல்லாம் நடந்துக் கணும்ணு கண்டிப்பாகச் சொல்லிட்டான். ஒரே மகள் கல்யாணத்தைக் கண்ணுலே பார்க்கணம்னு, இந்தப் பாவி அவரை இழந்து, இப்படி அலங்காரம் வேறு செய்து கிட்டேன். உங்க மனசு பட்ட பாட்டைப் பார்த்தேன். என்னெ மன்னிச்சிடுங்க' என்று கதறிஞள்.

பக்கத்திலிருந்த பொன்னி, அவளைத் தழுவிக் கொண்டு, விம்மி விம்மி அழுதாள்.

# தாய்க்குமரி

அகண்ட பெரிய அமைதியான அந்தக் கங்கைக் கரையிலும் அமர்ந்து அமர்ந்து சிந்தித்துவிட்டேன். இதோ இந்த அலைமோதும் ராமேசுவர சேதுத்துறையிலும் மூன்று நாளாய் வந்துவந்து உட்கார்ந்து பார்க்கிறேன். எந்த முடிவுக்கும் வர இயலவில்லை. பேசாமல் இந்தக் கடல்கள் கூடும் இடத்திலேயே மூழ்கிச் சங்கமமாகி விடலாமா?

இதோ இந்த இடது கையைத்தான் அவர் முதலில் பற்றினார். அப்படி அவர் பற்றி என்னைத் தூக்கியபோது எந்தக் கை என்றுகூட நினைத்துப் பார்க்கவில்லை. என்ன நிகழ்ந்தது என்றுகூட எண்ணவில்லை. இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கடைசிச் சுண்ணும்புக் கோடு ஓரமாக ஓடிக் கொண்டிருந்தேன். நான் திடீரென்று சிறு பள்ளத்தில் கால் தடுமாறித் தட்டுக்கெட்டு விழப் போனேன். சட்டென்று ஒரு கை என்னைத் தூக்கிப் பிடித்தது. முன்னவளாக வந்துகொண்டிருந்த என்னை, மல்லிகா நான்கைந்து அடி முந்திக்கொண்டுவிட்டாள்,

அவளை வென்றாக வேண்டும். அப்போதுதான் சாம்பியன் கோப்பை கிடைக்கும். நான் எதையும் பொருட் படுத்தாமல் ஓடுகிறேன். வென்றும் விடுகிறேன். 'மைதிலி'. விக்டரி ஸ்டேண்டில் நிற்குமாறு, என் பெயரை ஒலிபெருக்கி முதலில் குறிப்பிடுகிறது. பெருமிதத்தோடு வந்து அதன்மேல் நிற்கிறேன். இரண்டாம், மூன்றும் தகுதி பெற்ற மல்லிகா, வசந்தி வந்துகொண்டிருக் கிறார்கள். விழ இருந்த என்னைத் தூக்கி நிறுத்திய அந்த இளைஞனை என் கண் தேடுகிறது. எல்லாக் கண்களும் என்னையே பார்க்கின்றன. என் முயற்சி வீண் போகவில்லை. ஆயிரக்கணக்கான அந்தக் கண்களுக்கு இடையே, அந்த இரண்டு கண்களை நான் எப்படியோ இனங்கண்டு கொள்கிறேன்.

'யார் இவளோ? எப்படிப் பட்டவளாய் இருப்பாளோ? ஆர்வத்தோடு பார்க்கிறாள்; எனக்குக் கிடைப்பாளா?' என்பனபோன்ற பல எண்ணங்களை, எழுச்சிகளைப் பிரதி பலிக்கும்படி என்னை அன்று பார்த்த அதே கண்களை, பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் பார்க்கிறேன். என் ஐந்தாவது குழந்தை சந்திரனைப் பெற்ற பிரசவ அறையில் பார்க்கிறேன். குழந்தையின் கண்களிலே பார்க்கிறேன். இது என்ன பார்வை! முதல் நாள் விளையாட்டு அரங்கில் அவர் பார்த்த அதே பார்வை!

சந்திரன் பால் குடிக்கிறான். வயது இரண்டு மூன்று இருக்கும். என் முகத்தை என்னவோபோல், அவர்போல் பார்த்துக்கொண்டே பால் குடிக்கிறான். குழந்தையை விழுந்துவிடாதபடி அணைத்துக்கொண்டு ஈசி சேரில் சாய்ந்தபடியே பால் கொடுக்கிறேன். என்ன பிள்ளை இவன்! அவர்போல்......மார்பகங்களைப் பற்றிக் கொள் கிறான்; வருடுகிறான்!

ஏழு எட்டு வயதிருக்கும். கிரிக்கெட் மட்டையை வைத்துக்கொண்டு தட்டுகிறான். ராமர்கோயில் தெருப் பசங்களுக்கு அவன் கேப்டன். அவர் போலவே ஸ்டையில் பண்ணிக் கொள்கிறான். 'நான் ஒரே ஓவரில் ஐந்து விக்கட்டுகள் எடுத்தேன். மடப்பயல் கோபாலன் என்னை ரென் ஓவர் செய்துட்டான். இல்லாட்டி நாங்கதான் ஜெயிச்சிருப்போம்!' அவர் போலவே பீத்திக் கொள்கிறான்.

பதினேழு பதினெட்டு வயசு. அதே கருகரு இளம் மீசை. துரு துரு பார்வை. என்னை இடித்து இடித்துக் கொண்டு வந்து அருகில் நிற்கிறான். நூல் நிலையத்தில் நான் எப்போதாவது தனியே புத்தகம் தேடிக் கொண் டிருக்கும்போது, தானும் அங்கே எதிர் வரிசையில் ஏதோ தேடுவதுபோல் வந்து அவர் இடித்துக்கொண்டு நிற்பது போலவே இருக்கிறது. இது என்ன எனக்குப் பயித்தியமா! என் உடம்பில் அந்தப் பழைய உணர்ச்சி ஏன் கொந் தளித்து எழுகிறது.

'என்னம்மா, இன்னைக்குப் பச்சைப் புடவை கட்டி யிருக்கே. சினிமாவுக்கா!' அவர் மாதிரியே கேட்கிறான். நீலப்புடவை கட்டினால் பெரும்பாலும் டாக்டர் வீட்டுக்குப் போவேன். வெள்ளைப் புடவை கட்டிக்கொண்டு பார்த்தசாரதி கோயிலுக்குப் போவேன். அவர் என் புடவையைக் கொண்டே என் மனத்தைப் புரிந்து கொள் வார். அன்று அவர் இறந்துபோன நாள். என்னவோ அவர் நினைவில் ரோஸ் புடவை கட்டிக்கொண்டு சிவப்பு ஜாக்கெட் போட்டுக் கொண்டேன். அவர் இறந்தபின் இந்த இருபத்து மூன்று ஆண்டுகளில் இதுவரை ஒருநாள் கூட, அந்தப் புடவை, ஜாக்கெட்டை அணிந்து கொண்ட தில்லை. வீணாய்த்தானே போகிறது. வேலைக்காரிக்கு இதையும் கொடுத்துவிடலாம் என்ற நினைப்பில் எடுத்தேன்.

மற்ற பழைய புடவைகள் எல்லாம் உடுத்தி உடுத்திக் கிழிந்து போய்விட்டன. ஒன்றிரண்டை வேலைக்காரிக்கும் கொடுத்துவிட்டேன். இதைமட்டும் யாருக்கும் கொடுக்க வில்லை; கொடுக்க மனம் வரவில்லை. ஊட்டி உட்லண்ட்சு ஓட்டலில் நாங்கள் இருவரும் தங்கியிருந்தபோது, ஒருநாள் இரவு, அவர் எனக்கு அதை அளித்து, அணிவித்து, அணைத்துக்கொண்டார். அப்போதிலிருந்து அந்த ரோஸ் புடவை, சிவப்பு ஜாக்கெட் எப்போதாவது உடுத்திக் கொண்டால், அவருக்கு ஊட்டி உட்லண்ட்ஸ் நினைவு வந்து விடும். சுற்றுப்புறத்தை, பகல் இரவை மறந்துவிடுவார். எனவே யாரும் வீட்டில் இல்லாத நாட்களிலேயே, மாலை யிலேயே அதை நான் உடுத்துக்கொள்வேன். அன்று ஏனோ அதை உடுத்துக் கொண்டேன். மாலையில் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த சந்திரன் புத்தகத்தைக்கூட கீழே வைக்கவில்லை. திண்ணை மாடத்தில் விளக்கேற்றிக் கொண்டிருந்த என் தோளைப் பிடித்துத் தன் முன்புறம் திருப்பினான். 'அவன் கண்கள்! அய்யோ அந்தக் கண்கள்!' நான் மயங்கி விழுந்துவிட்டேன். கண் விழித்தபோது அங்கே சந்திரன் இல்லை. வேலைக்காரியும் எதிர்வீட்டுச் சுப்பம்மாவும் இருந்தார்கள். 'ஏண்டியம்மா! ஒண்டிக் கட்டையா இந்த வயசில் கஷ்டப்படுறே. உனக்கென்ன வேறே சொந்த பந்தம் இல்லையா! இவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சிட்டு சிவா ராமான்னு காசி ராமேசுவர யாத்திரை செய்துகிட்டிருக்கப் படாதோ!' என்று, கல்யாணம் என்ற சொல்லைக் கொஞ்சம் அழுத்தம் திருத்தமாக உச்சரித்துச் சொன்னாள் சுப்பம்மா. வேலைக் காரியும் அதில் ஏதோ புரிந்துகொண்டது போலச் சுப்பம்மாவைப் பார்த்தாள். என் உடம்பெல்லாம் குன்றிப் போய்விட்டது. நானும் எத்தனையோ பெண்களைப் பார்த்துவிட்டேன். அது சுப்பம்மாவுக்கும் வேலைக்

காரிக்கும் தெரியும். 'எந்தப் பெண்ணும் வேண்டாம்' என்கிறான். ஒருநாள் 'கல்யாணமே வேண்டாம்' என்ற போது எனக்கு மயக்கமே வந்துவிட்டது.

நான் பெற்ற மற்ற நான்கு குழந்தைகளும் நல்ல அந்தஸ்தில் இருக்கின்றன. சீனுவாசன் சென்னை செகரட்டரியேட்டில் சூப்பிரண்டெண்டாக இருக்கான். அவனுக்கு அப்புறம் பிறந்த ரேணுகா டாக்டரைக் கட்டிக் கொண்டு கோயமுத்தூரிலே பங்களாவும் தோட்டமுமா இருக்கா. மூணுவது ஒரு புள்ளெயாண்டான், இப்பொ நியூயார்க்கிலே இருக்கான். அங்கேயே அவன் யாரோ ஒரு அமெரிக்கப் பெண்ணைக் கட்டிக்கிட்டான். நாலாவது பத்மஜா, ஹாய்யா ஒரு புரொபசரைக் கட்டிக்கிட்டு இருக்கா. கடைசியா வந்தவன்தான் இவன்!

இவன் ஐந்து மாதம் வயிற்றிலே இருக்கும்போது தான் அவருக்கு ஹார்ட் அட்டேக் வந்து, வேலூரில் சேர்த்தோம். சேர்த்த மூன்றும் நாள் இரவு பனிரெண்டு மணிக்கு உயிர்விட்டு விட்டார். உயிர்விடும்போது அவர் பேசியது அப்படியே நினைவுக்கு வருகிறது.

'மைதிலி!' என் அடிவயிற்றைத் தடவுகிறார்.

'என்னங்க இது!'

'ஒன்னுமில்லேடி...உன் வயத்தில் நாலைந்து மாத முன்னியே அதைத்தான் பார்க்கிறேன்.

'அதுக்கென்னங்க இப்பொ!'

'இல்லடி...வந்து...கருவுக்கு ஐந்து மாதத்திலேதான் உயிர் வருண்டி. இப்பொ செத்துப் பொயிட்டா, நான் நேரே உன் வயத்துக்குள்ளே வரும் கருவுக்குள்ளே நுழைஞ்சுடுவேன். அப்புறம் உன் கூடவே இருப்பேன்

இல்லையா. மைதிலி! உன்னைவிட்டுப் போக முடியலடி; என்னாலே உன்னைப் பிரிஞ்சி இருக்க முடியாதுடி.

அவ்வளவுதான், என்மேல் சாய்கிறார்.

'டாக்டர்! டாக்டர்!' நான் கத்துகிறேன்.

இருபத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. என்னால் இப்போது அவனைவிட்டுப் பிரிய முடியலெ. ஆனா பிரிஞ்சு தான் ஆகணும்...பிரிஞ்சுதான் ஆகணும்! என் கால்கள் அலைமோதும் அந்தக் கடலை நோக்கி விரைகின்றன.

•

# தவிப்பு

டிக்டிக்......டிக்டிக்......கடியார விஞடிமுள் துடிப்பது கேட்கிறது. சிறகடித்துக்கொண்டு மேலே எழுந்து பின் வந்து கூட்டில் அடங்கும் பறவை ஒன்றின் ஓசை பக்கத்தில் உள்ள வேப்பமரத்திலிருந்து சன்னல் வழியே வருகிறது. மேகத்தின் பிடியிலிருந்து தப்பிவந்த பௌர்ணமி நிலவின் பேரொளி கூரையில் பதித்திருந்த கண்ணுடி வழியே பாய்ந்து அறையை ஒளிமயமாக்குகிறது. வலக்கைப் பக்கம் சிறிதுதூரம் தள்ளித் தூங்கும் லில்லி, என் தங்கை, புரண்டு புரண்டு படுப்பது நிலவொளியில் நன்ருகத் தெரிகிறது. இடக் கைப்பக்கம் என் மனைவி. அவள்தான் மேரி. மின்விசிறி வீசும் காற்றில் அவள் தாவணி பறந்து அப்பால் கிடந்து தடுமாறுகிறது. அன்ருெருநாள் என் அணைப்பில் சிவந்த அந்தத் தோள்கள் விம்மி விம்மித் தாழ்கின்றன. 'இன்ப இரவு' என்று அவளுக்குத் திருமணப் பரிசாக வந்த பட்டுத் தலையணையில் தலையைப் புதைத்துக்கொண்டு தேம்பும் அந்த மெல்லிய ஓசை எனக்கு மட்டும், என் இதயத்துக்கு மட்டுமே கேட்கிறது. அவள் அழுகிருள்!

எண்ணங்கள் என்னை எரிக்கின்றன. அப்பாவை நான் பார்த்ததே இல்லை. எனக்கு ஒன்றரை வயது இருக்கும்போதே போய்ச் சேர்ந்துவிட்டாரராம். அம்மா தான் என்னையும் என் தங்கையையும் வளர்த்தார். இதோ இந்த அறையில் வலக் கைப்பக்கம் தங்கை படுத்துக் கொள்வாள். இடக் கைப்பக்கம் நான் படுத்துக் கொள் வேன். நடுவில் அம்மா படுத்துக் கொள்வார். அதாவது அம்மாவுக்கு நடுவில் இடம் விட்டுவிட்டு நானும் தங்கையும் படுத்துக்கொள்வோம். அம்மா படுப்பதும் எழுந்திருப்பதும் பலநாள் நாங்கள் பார்த்தது இல்லை. வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு, எங்களுக்குச் சோறு போட்டுவிட்டு, இடையில் நிறுத்திவைத்த இட்டலி மாவை அரைத்து முடிப்பதற்குள் நாங்கள் தூங்கிப் போய் விடுவோம். காலை நான்கு மணிக்கு எழுந்து, இட்டலி சுட்டு, சட்னி சாம்பார் செய்துகொண்டு மில் தொழி லாளர்களிடம் விற்பதற்கு அம்மா ஆயத்தம் செய்த பிறகு தான், நாங்கள் கண்விழிப்போம். என்றாவது ஒருநாள் நான் துணைக்குப் போனால், படிப்புக் கெட்டுவிடும் என்று தடுத்து விடுவார். தேர்வுக்குப் படிக்கும் ஓரிருநாட்கள் கண்ட வியர்வையோடு படுக்கைக்குப் போய் வியர்வையோடு காலையில் அடுப்படியில் உட்கார்ந்திருக்கும் அம்மாவின் தோற்றம் இன்றும் என் கண்ணுக்குத் தெரிகிறது. இட்டலிப் பானையும் குடைக்கல்லுமே தெய்வமாகக் கொண்டு உழைத்த எங்க அம்மா, அடுப்படியில் உட்கார்ந்து உட்கார்ந்து வயிற்றுப்புண்ணால் வாடி இறந்துபோய்ப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அம்மா அங்கங்கே விட்டு வைத் திருந்த பணத்தைச் சில தொழிலாளர்கள் கொடுத்தனர். அந்தப் பணம் தீர்ந்துபோவதற்குள் நான் பஞ்சாலையில் வேலை தேடிக் கொண்டேன். என் படிப்பு அத்தோடு முடிந்துவிட்டது. தங்கை மட்டும் தொடர்ந்து படித்தாள். அவளை விடாது படிக்க வைத்தேன்.

அவளோடு படித்துக்கொண்டிருந்தவள்தான் மேரி. அவள்தான் அவளைப்பற்றி எனக்குச் சொன்னாள். 'யாரோ நம்போல அப்பா அம்மா இல்லாத பொண்ணு. ஞாயத்துக் கிழமை எல்லாப் பொண்ணையும் சொந்தக்காரவுங்க வந்து பார்க்கிறாங்க. இவளை யாருமே பார்க்க வர்ரதில்லே. விடுமுறையிலே எல்லாரும் ஊருக்குப் போறாங்க. இவ எங்கேயும் போகிறதில்லே' என்று ஒருநாள் அங்கலாய்த்தாள். 'பாவம் நம்போல் ஏழை' ஏதோ இந்த அனாதை விடுதியாவது அவளைக் காப்பாத்துகிறதே' என்று சொல்லி, அமைதியாக இருந்துவிட்டேன்.

இன்னொருநாள் வெள்ளிக்கிழமை. நாங்கள் ஜெபம் செய்துகொண்டிருந்தோம். நடுவே 'இரக்கப் படுவோர்கள் பாக்யவான்கள்......' என்று படிக்கும்போது, தங்கையின் குரல் தழுதழுத்தது. கண்திறந்து தலைநிமிர்ந்து பார்த்தேன். பைபிளில் இரண்டு மூன்று சொட்டு அவள் கண்ணீர் விழுந்து கிடந்தன. 'லில்லி' என்றேன். கண்களைத் துடைத்துக் கொண்டு, ஒன்றும் பேசாமல், மேலும் வசனங்களைப் படித்து முடித்தாள். வழிபாடு முடிந்ததும் நான் வினவுவது போல லில்லியைப் பார்த்தேன். அவள் கவலையோடு சொன்னாள்: 'மேரிக்குச் சிலநாட்களாய் உடல்நலம் இல்லே. நேற்றுத்தான் மருத்துவ நிலையத்திலிருந்து விடுதிக்கு அழைத்து வந்தார்கள். விடுதிச்சோறு ஒத்துக் கொள்ளவில்லே'யாம் என்றாள். 'நாளையிலிருந்து உன் சோற்றோடு கொஞ்சம் அதிகமாகத் தயிர்ச்சோறு கொண்டுபோ' என்றேன். அவள் முகம் மலர்ந்தது.

ஒருநாள் நான் மில்லுக்குப் போகும்போது, என்முன் ஏதோ கேட்க விரும்புவதுபோல் வந்து நின்றாள். 'என்னம்மா?' என்றேன். 'இந்த ஞாயித்துக்கிழமை மேரியை

அழைத்து வர்ரேன்......ம்' என்று என்னிடம் உடன் பாட்டை ஏக்கத்தோடு எதிர்பார்த்து நின்றுள். 'உம்'... என்று சிரித்துக் கொண்டே தலையசைத்துவிட்டு, நான் மில்லுக்குப் போய் விட்டேன். அன்றிலிருந்து எங்கள் வீடு, அதுதான் அந்த நான்கு சுவர்களுக்கு உள் அடங்கிய எங்கள் அறை, மிகக் கலகலப்பாக இருக்கத் துவங்கியது. எங்கள் இருவரோடு அவளும் ஒருத்தியாகிவிட்டாள்.

அன்றும் அப்படியே ஒரு ஞாயிற்றுக்கிழமை. தங்கை கிணற்றுக்குத் தண்ணீர் கொண்டுவரப் போயிருந்தாள். மேரி எப்போதும் போல் வந்தாள். அன்று அவள் செவ்விய ரோஜாப் பூப்போல் பொலிவோடு திகழ்ந்தாள். 'மேரி' என்று நெருங்கினேன். என் குரல் கரகரத்தது. அவள் ஒன்றும் கூறுமல் என்னை ஆர்வத்தோடு நோக்கிளுள். நான் இரு கைகளாலும் அணைத்துக் கொண்டேன். அதற்குக் காத்திருந்தவள்போல அவளும் என்னைத் தழுவிக்கொண்டாள். நான் என் அம்மாவை இழந்த துன்பத்தை மறந்தேன். அவளும் தன் தாய் தந்தையரின் அன்பை என்னிடம் அப்போது கண்டு கொண்டாளோ என்னவோ! எங்கள் திருமணம் முடிவாயிற்று. தங்கைக்குப் பெரு மகிழ்ச்சி. சென்ற பௌர்ணமிதான் சர்ச்சில் எங்கள் திருமணம் நடந்தது. தங்கை அங்கும் இங்கும் ஓடி, தோரணம் கட்டி, கோலமிட்டு, வண்ணக் காகிதம் கத்தரித்து ஒட்டி அலங்காரம் எல்லாம் செய்தாள். அனுதை விடுதி ஆசிரியைகள் கொடுத்த மின் விசிறி, மேசை விளக்கு, பட்டுத் தலையணை முதலிய சீர் வரிசை களோடு, மேரியும் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

வீடு இப்போது யாருக்குச் சொந்தம்? நான் இப்போது யார் உடமை? என் அன்பை எப்போதும்போல் குறை யில்லாமல் நான் இருவருக்கும் வழங்குகின்றேன். ஆனுல்

நான் தங்கைக்கு மட்டுமே அன்பு காட்டுவதாக மேரி நினைக்கிருள். அவளிடம் அன்பாக ஓரிரு வார்த்தைகள் பேசக்கூடத் தங்கையின் அனுமதியை எதிர்பார்ப்பது போல் இருப்பதாகச் சொல்லி அழுகிருள்.

கலகலன்னு எப்போதும் சுருசுருப்பாக இருக்கும் தங்கை, என்னவோ இப்போது அடிக்கடி சோர்ந்து போய் மூலையில் உட்கார்ந்து விடுகிருள். சொர்க்கமாக இருந்த ஞாயிறுகள் இப்போது நரகமாக ஆகிவிட்டன. கடைசி நிமிடம்வரை வீட்டில் கழித்துவிட்டு ஆலைக்குப் புறப்படும் நான், மூடிக்கிடக்கும் ஆலைமுன் முன்னதாகவே சென்று வாயில் திறக்கும்வரை படியில் உட்கார்ந்து கிடக்கிறேன். சிறுகுழந்தைபோல் ஞாயிறுதோறும் எங்கள் அறைக்கு வந்து, அது இது என்று என்ன என்னவோ எங்களோடு பகிர்ந்துகொண்டு உழைத்து மகிழும் மேரி, யாரோ முன்பின் அறியாதவருடைய வீட்டுக்கு வந்துவிட்டவள் போல, ஒதுங்கி ஒதுங்கிப் பழகுகிருள்.

எனக்குப் புரியாமலும் இல்லை; புரியவும் இல்லை. மேரி விடுதியிலிருந்து வீட்டுக்கு வந்துவிட்டாள். என் தங்கையை வீட்டிலிருந்து விடுதிக்கு அனுப்புவதா. அவளால் எப்படி அதைத் தாங்கிக்கொள்ள இயலும்?

இதுவரை என்னை அவள் பிரிந்து இருந்ததே இல்லை? வீட்டிலிருக்கும்போது என்கூடவே இருப்பாள். கொஞ்ச நேரம் கழித்து வந்தாலும் கலங்கிப் போய் விடுவாள். ஒரு நாள் ஆலையில் ஒருவர் ஓய்வுபெற்ருர். அவருக்கு ஒரு விழா நடத்திஞேம். 'வரக் கொஞ்சம் நேரம் ஆகும்' என்று சொல்ல மறந்துவிட்டேன். எல்லோரையும்விட விரைவாகத்தான் வீட்டிற்கு வந்தேன். என்னை எதிர்பார்த்த படியே வாயில்படியில் உட்கார்ந்திருந்த தங்கையின் முகம் அழுதழுது வீங்கிப்போயிருந்தது. இன்னெரு நாள் காலில்

அடிபட்டு, கட்டைவிரல் நகம் பிய்ந்து போய்விட்டது. இரத்தம் பெருகிற்று. 'அய்யோ அண்ணு!' என்று அதற்கு மஞ்சளும் சுண்ணும்பும் வைத்து, அம்மாபோல் கட்டுப் போட்டு, அது ஆறுகிறவரை என்னைக் கிணற்றடிக்கு அனுப்பாமல், தானே எனக்கும் சேர்த்துத் தண்ணீர் இழுத்து வந்தாள். காலைக் கல்லின்மேல் தூக்கிவைத்து என்னைக் குளிக்கச் செய்தாள். அவளை எப்படி விடுதிக்கு அனுப்புவேன். அம்மா இறந்த கவலையை மறந்திருந்த நான், நினைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுகின்றேன்.

'அண்ணு!' என்று அழைத்தபடியே தங்கை என்னைத் தழுவிக்கொள்கிருள். என் வலக் கையால் அவளை அணைத்துக்கொள்கிறேன். தூரத்தில் தள்ளிப்படுத்திருந்த மேரி நெருங்கிவந்து, என் இடக்கையில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுவதை உணர்கிறேன். என் சிக்கல் தீர்கிறது. தவிப்பிலிருந்து வழி விளங்குகிறது. எல்லோருமே வீட்டில் வாழலாமே! விடுதிக்கு ஏன் போக வேண்டும். "வாழ்க வீட்டு வசதி வாரியம்!" என்று வாழ்த்தியவாறு, ஆலையுள் நுழைகிறேன்.